AR
537

திருநாவலூர்

T.7334.

ஆசிரியர்
ச. பரணன்

பதிப்பாசிரியர்
தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப,
சிறப்பு ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை - 8

T. 7334.

திருநாவலூர்

ஸ்ரீமத் திருப்பனந்தாள் காசித்திருமடத்துத் தவத்திருக் குமரகுருபர சுவாமிகள் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம் ★
-4 SEP 2012
சென்னை-5.

T.7334.

திருநாவலூர்

ஆசிரியர்
ச. பரணன்,

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் ★
-4 SEP 2012
சென்னை-5.

பதிப்பாசிரியர்
தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர்

வெளியீடு
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
2006

BIBLIOGRAPHICAL DATA

Title	:	TIRUNAVALUR
Author	:	S. Paranan
Copy right	:	Tamil Nadu State Dept. of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No / year	:	175 / 2006
Type Point	:	11
Paper	:	100 GSM
No of Pages	:	172
Type setting	:	ANNAI GRAPHICS 73, Srinivasa perumal Sannathi Ist Street, Royapettah, Chennai - 14. Ph : 24800 006
Printer	:	The Chennai Printers Industrial Cooperative Society Ltd., 118, Triplicane, Chennai -600 005. Phone : 28446287
Publisher	:	State Dept of Archaeology Tamil Valarchi Valagam Halls Road, Egmore, Chennai-8.
Price	:	Rs. 48.00

பதிப்புரை

தமிழக வரலாற்றையும், சமுதாய பண்பாட்டையும் காட்டும் காலக்கண்ணாடியாக திகழ்பவை 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பர் சான்றோர். 'கோயில் இல்லா திருவல் ஊர் அடவிகாடு' என்றார் அப்பர் அடிகள். இவை கோயில்களுக்கும் பண்டைய தமிழ் சமுதாயம் அளித்த தனித் தன்மையையும் சிறப்பினையும் காட்டுகின்றன. கோயில்கள் சமய நிறுவனமாக மட்டுமின்றி தமிழகத்தின் அந்த்த பகுதி வரலாற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் திறந்த வெளி ஆவணக் காப்பகங்களாகவும் விளங்குகின்றன. கோயில்கள் குறித்த இலக்கியங்களும், கல்வெட்டுகளும், செப்பேடுகளும், ஓலைச்சுவடிகளும் மற்றும் கோயில் சிற்பங்களும், ஓவியங்களும், நமது நாட்டின் இலக்கியம், வரலாறு, சமயம், ஆன்மீகம், கலை, பண்பாடு, பொருளாதாரம், வாழ்வியல் முறை, இன்னபிற கூறுகளை எடுத்து இயம்பும் நிலைத்த சான்றுகளாக இலங்குகின்றன.

இவ்வகையில் வரலாற்று சிறப்புடைய திருநாவலூர்ப் பற்றி இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடு, நாடோடிப் பாட்டு தரவுகளைக்கொண்டு ஆய்ந்து வெளிவந்துள்ளது இந்நூல். இவ்வூரில் தேவார மூவர் முதலிகளில் மூன்றாமவரான சுந்தரர் தோன்றினார். சோழர் வரலாற்றில் இராணுவ முகாமை (பாடிவீடு) மிக்க படைத்தளமாக விளங்கியது இவ்வூர். இக்கோயிலில் காணப்படும் 105 கல்வெட்டுகளைக் கொண்டு கி.பி.9 ஆம் நூற்றாண்டு தொடங்கி, கி.பி.17 ஆம் நூற்றாண்டு முடிய கால இடையீடுயின்றி தொடராக வரலாற்று செய்திகளும் கோயில் வரலாறும் காணமுடிகிறது.

'ஸ்ரீ கலிநாரை' என்ற பல்லவ கிரந்த எழுத்துப் பொறிப்புடன் விளங்கும் கற்சிற்பமும், பல்லவர்கால உதிரிச்சிற்பங்களும், ஸ்ரீகலிநாரீஸ்வரம் என்ற சிவன் கோவில் குறித்து கல்வெட்டு குறிப்பிடுவதிலிருந்து, இவ்வூரில் பல்லவர் காலந்தொட்டே கோவிலிலிருந்திருக்க வேண்டும் என்பது தெளிவு. கி.பி.935ல் பராந்தக சோழனின் மனைவி கோக்கிழானடிகள் தன் மகன்

இராஜாதித்தன் பெயரால் இக் கோவிலைக் கற்றளியாக்கி, திருத்தொண்டீஸ்வரமான இராஜாதித்த ஈஸ்வரம் என்ற பெயரில் அழைக்கப்பட்டமையும். பராந்தகரின் இலச்சினை குறித்த புதிய செய்தி யினையும் திருமுனைப்பாடி மேலூர் நாடு என்ற நாட்டுப் பிரிவின் கீழ் இவ்வூர் விளங்கியதும், இங்கு வணிகர்கள் வாழ்ந்தது அவர்கள் நகரத்தார் என அழைக்கப் பட்டனர் என்பதை உத்தம சோழனின் கல்வெட்டு குறிப்பிடு வதையும், 'இராஜாதித்தபுரம்' என்ற பெயருடன் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் வணிகப் பெருநகராக இவ்வூர் விளங்கியதும், விசயநகர ஆட்சிகாலத்தில் 'திருநாவலூர் சீர்மை நாட்டார்கள்' என்ற குழு வரிவசூல் செய்தமையும் இங்குள்ள கல்வெட்டு சான்றுகள் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

இலக்கியங்களின் துணை நின்று திருநாவலூர் பற்றியும், நாடோடிப்பாடல்களில் சிவன்படவர் (செம்படவர்) வாழ்வியல் நெறி, இன்றுவரை அவர்களுக்கு கோயில் விழக்காலங்களில் பரிவட்டம் கட்டும் மரியாதை, செஞ்சி அன்னர் அளித்த செப்பேட்டில் மீன்பிடிக்க அனுமதி அளித்த விவரம் குறித்த செய்திகளும் இந்நூலில் விவரிக்கப் பட்டுள்ளது.

இந்நூலாசிரியர் திரு.ச.பரணன் இத்துறையில் நடத்தப் படும் கல்வெட்டு பயிற்சி நிறுவன (1980 - 81) மாணவராக இருந்தபோது எழுதிய ஆய்வேடாகும் இந்நூல். இவர் காப்பாட்சியராக கரூரில் பணிபுரிந்த போது 'கொல்லிப் பொறை' என்ற சங்ககால சேரர் காசினை கண்டுபிடித்து வரலாற்றிற்கு புதிய தகவல் தந்தவராவார். இவ்வாய் வேடு நூல்வடிவம் பெற உடனிருந்து ஆக்கமும் ஊக்கமும் நல்கிய உதவிக் கண்காணிப்புக் கல்வெட்டாய்வாளர், சிறப்பு நிலை கல்வெட்டாய்வாளர்கள் முனைவர் சு.இராசகோபால், திரு கிசு.சம்பத் மற்றும் இந்நூலாசிரியர் ஆகியோருக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

வரலாற்று அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், சமய சான்றோர்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினருக்கும் பயன்தரும் நன்னூலாக இந்நூல் விளங்க வாழ்த்துக்கிறேன்.

சென்னை – 8 *சிறப்பு ஆணையர்*
நாள் : 6. 3. 2006

உள்ளடைவு

I திருநாவலூர்.

1. நதிக்கரையில் நாவலூர். 9
2. ஊர்வள(ல)ம் 15
3. நாவலூர் சமுதாயம் (சிவன்படவர்) 17

II கோயில்கள்

1. திருத்தொண்டீஸ்வரம் 28
2. ஈஸ்வரங்கள் 43
3. பிற ஆலயங்கள் 47
4. செப்புத் திருமேனிகள் 49
5. ஓவியமும் வாகனமும் 52
6. திருவிழாக்கள் 54

III கல்வெட்டு

1. நாட்டுப் பிரிவுகள் 57
2. இராஜாதித்தன் 62
3. சிற்றரசர்கள் 73
4. அதிகாரிகள் 78
5. கொடைகள் 89
6. திருநாவலூர் வணிகர்கள் 94
7. பராந்தகனின் இலச்சினை 98
8. சிறப்புச் செய்திகள் 100
9. உதிரிப் பூக்கள் 106

IV இலக்கியம்

1. சுந்தரரின் தேவாரம் – ஓராய்வு. 116
2. பெரிய புராணம் காட்டும் சுந்தரர் வரலாறு. 125
3. திருநாவலூர் புராணம். 130

V அகழாய்வு

முடிவுரை 136

VI பின்னிணைப்பு

1. கல்வெட்டுகள் கால அடைவுப்பட்டியல் 144
2. செப்புப்பட்டயம் 151
3. முனையரையர் – பட்டியல் 153
4. கல்வெட்டுக்களில் சுந்தரர் பெயருடையோர் 154
5. துணை நின்ற நூல்கள் 156
6. நிழற்படங்கள். 158

I. திருநாவலூர்

1. நதிக்கரையில் நாவலூர்

'உலகெலா முணர்ந்தோதற் காயவனைப்' பாடிப்பரவிய மூவர் முதலிகளில் மூன்றாமவரான சுந்தரர் பிறந்த தலம் திருநாவலூர் ஆகும். இது பண்ணுருட்டிக்கு மேற்கே 17கி.மீ. தொலைவில் பண்ணுருட்டி உருந்தூர்பேட்டை பேருந்துத் தடத்தில் அமைந்துள்ளது. திருநாவலூருக்கு அருகில் உள்ள திருவாமுர் என்று ஊரில் நாவுக்கரசர் தோன்றினார். இவ்வூர்களை உள்ளடக்கியது அன்றைய திருமுனைப்பாடி நாடு ஆகும். திருநாவலூர் பராந்தகன் காலத்தில் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள ஊராக இருந்தது. இராஜராஜன் காலத்தில் திருமுனைப்பாடி மேலூர் நாட்டுப் பிரிவாக இருந்தது. அதன்பின்னர் இராசேந்திர சோழன் காலத்தில் திருமுனைப்பாடி மேலூர் நாட்டு உட்பிரிவான செயங்கொண்ட சோழமண்டலம் எனப்பட்டது. குலோத்துங்கன் காலத்தில் இராசேந்திர சோழ வளநாட்டு உட்பிரிவான ராஜராஜ வளநாட்டு திருமுனைப்பாடி மேலூர் நாட்டு திருநாவலூர் என்றும், கங்கை கொண்ட சோழவள நாட்டு திருமுனைப்பாடி மேலூர் நாட்டு திருநாவலூர் என்றும் ஆனது. இவ்வூரில் இராஜாதித்தன் தங்கியிருந்தமையால் திருநாவலூர் என்னும் ராஜாதித்தபுரம் என்றும் வழங்கலாயிற்று.

பெண்ணை ஆறு :

இவ்வூர்க்குத் தெற்கே அரைக்கல் தொலைவில் கெடிலம் என்னும் ஆறு பாய்கிறது. இவ்வாற்றுக்கு நீர் பெண்ணையாற்றின்

கிளையாறான மலட்டாறு 'மூலம் கிடைக்கிறது. 'பெண்ணை' என்னும் சொல் பனைமரத்தைக் குறிக்கும். பனை – மரக்காடுகள் வழியே ஒரு காலத்தில் பாய்ந்து சென்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது போலும் என்கிறார். டாக்டர் மா. இராசமாணிக்கனார். சிவனது வில்லுக்குப் 'பிநாகம்' என்பது பெயர். மைசூர் நாட்டு நந்திதுர்க்க மலைத் தொடரில் அமைந்த சென்னகேசவமலை 4762 அடி உயரமுள்ளது. இம்மலையின் வடபகுதியில் தோன்றும் ஆறு உத்தரபிநாகினி ஆகும். தென் பகுதியில் தோன்றுவது தட்சிணபிநாகினி ஆகும். இவை முறையே வடபெண்ணையாறு என்றும் தென் பெண்ணையாறு என்றும் தமிழில் பெயர் பெறும். இவ்விரண்டு ஆறுகளும் வில்லைப்போல் வளைந்து செல்வதால் 'பிநாகினி' எனப்பட்டன.

இலக்கியத்தில் பெண்ணை :

மாறோக்கத்து நப்பசவையார் என்ற புலவர் மலையமான் திருமுடிக்காரியைப் பார்த்து. பெண்ணையாற்றுப் பாக்கத்தை உடைய நாட்டை உடையவனே என்கிறார்.

' பெண்ணையம் படப்பை நாடுகிழவோனே' – புறம்.

அக நானூற்றில் தலைவியின் கூந்தல் பெண்ணையாற்றின் நுண்ணிய கருமணலை ஒத்துள்ளது என்ற உவமையில் பெண்ணையைக் காணமுடிகிறது. தேவாரத்தில் மூவரும் பெண்ணை நதியைக் கூறியுள்ளனர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் திருமங்கையாழ்வார். பெண்ணையாற்றையும் திருக்கோவலுரையும் பாடிச் செல்கிறார். பெரியபுராணத்தில் சேக்கிழார் பல இடங்களில் குறிப்பிடுகிறார்.

'' மலைவளர்சந் தகில்பீலி மலர்பரப்பி மணிகொழிக்கும்
மலைதருதன் புனற்பெண்ணாறு''

(தடுத்தாட்கொண்டபுராணம்–82)

தமிழ்நாவலர் சரிதையில், மலையமான் தெய்வீகமன்னன் திருமணத்திற்கு நெய்யும், பாலும் வேண்டுமென்று ஔவையார் பெண்ணாற்றை வேண்டிப் பாடிய பாடலொன்றுள்ளது.

'' முத்தெறியும் பெண்ணை முதுநீர் அதுதவிர்ந்து
தத்திவரு நெய்பால் தலைப்பெய்து – குத்திச்
செருமலை தெய்வீகன் திருக்கோவலூர்க்கு
வருமளவில் கொண்டோடி வா''

கல்வெட்டில் பெண்ணை :–

திருக்கோவலூர் வீரட்டானேசுவரர் கோயிலில் உள்ள ஒரு நீண்ட பாடல் கல்வெட்டில் பெண்ணை பின்வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

...............''பெண்ணை
தென்கரையுள்ளது தீர்த்தத் துறையது
மொய் வைத்தியலு முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
வரிவண்டக்கைப்பாரி தன்னடைக்கலப்
பெண்ணை மலைய ர்குதவிப் பெண்ணை
யலைபுன லழுவத் தந்தரிடிஞ் செல
மினல் புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்
கனல் புகுங் கபிலக் கல்லது''

இக்கல்வெட்டு முதலாம் இராசராசன் காலத்து ஆகும்.

பெண்ணையின் போக்கு :–

கோலார் மாவட்டத்தில் தோன்றிய பெண்ணை பெங்களூர் மாவட்டத்தில் தேவன்உறள்ளி, உறாஸ்கோட்டை வழியாகத் தெற்கு நோக்கிப் பாய்கிறது. உறாஸ், கோட்டை ஏரி மைசூர் நாட்டிலேயே பெரிய ஏரியாகும். சர்ஜபுரம் என்னும் ஊருக்குக் கிழக்கே பகலூர்ப் பண்ணையை அடைகிறது. அங்கிருந்து கிழக்கே திரும்பிக் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் வழியே சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணகிரி வட்டத்தை அடைகிறது. இங்கு கிருஷ்ணகிரி அணைக்கட்டு, நெடுங்கல் அணைக்கட்டு

என இரு அணைகள் உள்ளன. வடார்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைகளுக்கும் தென் மலைகளுக்கும் இடையில் செங்கம் கணவாய்க் காடுகள் வழியே பாய்ந்து வருகிறது. இங்கு சாத்தனூர் அனைக்கட்டு உள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கள்ளக்குறிச்சியின் வடகோடிப்பகுதியில் நுழைந்து திருக்கோவலூர் அடைகிறது. இங்குத் திருவண்ணாமலை வட்டத்தில் தோன்றும் துரிஞ்சிலாறு என்னும் சிற்றாறு கலக்கிறது. திருக்கோவலூர்க்கு நான்கு கல் கிழக்கே ஆற்றின் குறுக்கே ஓர் அணை கட்டப்பட்டுள்ளது. அதுவே திருக்கோவலூர் அணைக் கட்டு எனப்படுகிறது. அடுத்துப்பெண்ணையாறு விழுப்புரம் கடலூர் வட்டங்களைப் பிரிக்கும் எல்லையாக அமைந்து, கடலூருக்கு வடக்கே நான்கு மைல் தூரத்தில் வங்கக்கடலில் கலக்கின்றது.

இவ்வாறு கோலார் பகுதியில் உள்ள மலையில் பிறந்து. உறாஸ்கோட்டை ஏரியில் குளிர்ந்து பல அணைக்கட்டுகளில் அணைந்து, பின் பாய்ந்து நுழைகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் தேய்ந்தவிடத்து 'துரிஞ்சிலாறு' உடன் இணைந்து கடலூரில் கலந்துவிடுகிறது. பெண்ணையாற்றில் திடீர் திடீரென வெள்ளம் வருவதால் ''வெண்ணெய் உருகுவதற்குள் பெண்ணையில் தண்ணீர் ஏறும்'' என்ற பழமொழி நிலவி வருகிறது.

சுந்தரர், இறைவனோடு திருவெண்ணெய் நல்லூரில், வழக்காடி உண்மை உணர்ந்தபின். இறைவனை நோக்கி

'' வைத்தாற் பெண்ணைத் தென்பால்
வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்''

என்று வெண்ணெய் நல்லூரில் பாயும் நதியை பெண்ணை என்றே பாடுகிறார். ஆனால் பெண்ணையின் கிளையாறு எனப்படும் மலட்டாறே அங்குபாய்வதாகும். மலட்டாற்று நீர் கெடிலத்தில் திருப்பிவிடப்படுகிறது. பெரியபுராணத்தில்.

'' தென்திசையிற் கங்கையெனுந் திருக்கெடிலம்''
(தடுத்தாட்கொண்ட புராணம் அக.)

என்று கெடிலத்தைச் சேக்கிழார் கூறுகிறார்.

கெடிலம் கள்ளக்குறிச்சி வட்டத்தில் தோன்றிப் பெண்ணை யாற்றுக்குத் தெற்கே திருக்கோவலூர், கடலூர் வட்டங்களில் பாய்ந்து, பெண்ணையாறு கடலொடு கலக்கும் இடத்திற்கு இரண்டுகல் தெற்கே கடலொடு கலக்கின்றது. இதன் கரையில் திருநாவலூர், திருவதிகை ஆகிய சிவத்தலங்கள் உள்ளன. பெண்ணையும் கெடிலமும் கடலூர் வட்டத்தில் மிக நெருங்கிப் பாய்கின்றன. மேலும் கெடிலம் பெண்ணையாற்றுப் பாய்ச் சலையே பெறுகிறது. எனவே மேற்கண்ட சிவத்தலங்களும் பெண்ணையாற்று கரையினிலே உள்ளன. எனலாம் என்கிறார் முனைவர் மா. இராசமாணிக்கனார்.

ஆற்றுத்திருவிழா நாள் :—

தை மாதத்தில் முதல் ஐந்து நாட்கள் கங்கைநீர் பெண்ணை யில் கலப்பதாக மக்கள் நம்புகின்றனர். அச்சமயத்தில் அந்நீரில் நீராடுதல் நற்பயன் அளிக்கும் என்பது மக்கள் நம்பிக்கை. அவ்வைந்து நாட்களும் பெண்ணை ஆற்றங்கரை ஊர்களிலுள்ள கோவில்களில் விழாக்கள் நடைபெறும். திருக்கோவலூர் வட்டத்தில் உள்ள மணலூர்ப்பேட்டை என்னும் ஊர்க்குத் திருவண்ணாமலையிலிருந்து கடவுளர் திருமேனிகள் கொண்டு வரப்பட்டு நீராட்டப்படும்.

பொங்கல் கழிந்த மூன்றாம் நாள் விழுப்புரத்திலும், திருநாவலூரில், அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள மக்கள் உணவு உடையுடன் ஆறு மைல் தொலைவில் உள்ள பெண்ணைக்குச் சென்று இன்பமாய்ப் பொழுதினைக் கழிப்பர். இதனை ''ஆற்றுத் திருவிழா நாள்'' என்பர்.

ஊற்றுக்கால்கள் :—

பெண்ணையாற்றில் நீர் இல்லாத காலத்தும் ஆற்று மணலுக்கடியில் எப்போதும் நீரோட்டம் உண்டு. அதன்மூலம் ஆற்றில் பலகால்வாய்கள் வெட்டப்பட்டு வயல்களுக்கு நீர் பாய்ச்சப்படும்.

“ ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகட்டும்”

என்பதற்கேற்ப இவ்வாறு ஊற்றுப் பெருக்கால் பலன் கொடுக் கிறது. பெண்ணை விழுப்புரம் வட்டத்தில் மணற் பாங்கான இடங்களில் இயற்கை ஊற்றுகள் காணப்படுகின்றன. அவை பெண்ணையாற்று அடியில் ஓடும் நீரோட்டத்தோடு தொடர்புடை யனவாக இருக்கும் என அறிஞர்கள் எண்ணு கின்றனர்.

கரையில்உள்ள கறைமிடறு உடையான்கோவில் :—

தமிழகத்தில் பெண்ணை நுழைந்த பின்னர் அதன் கரையில் காவேரிப்பட்டனம், மணலூர்ப்பேட்டை, அறையணிநல்லூர் விழுப்புரம், திருஆமாத்தூர், திருக்கோவலூர், திருவெண்ணெய் நல்லூர், திருநாவலூர், சேந்தமங்கலம், திருத்துறையூர், திருவதிகை, திருப்பாதிரிப் புலியூர் (கடலூர்) ஆகிய இடங்களில் சிவபெருமானுக்கான சிறப்புமிக்க கோயில்கள் உள்ளன.

***

அடிக்குறிப்புகள்

1. தென்பெண்ணை – டாக்டர் மா. இராசமாணிக்கனார். – 1959. பக். 8
2. த்மிழ் நாவலர் சரிதை ; மே. பா. 55.
3. 863/7 (7என்பது இனி தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி எண் 7 ஐக் குறிக்கும்)
4. தென்பெண்ணை – டாக்டர். மா. இராசமாணிக்கனார். பக்12.

2. ஊர் வள(ல)ம்

திருநாவலூர் என்றே கல்வெட்டுகளில் குறிக்கப்படும் இவ்வூர், ஆங்கிலேயர் காலத்தில் ஏனோ திருநாம நல்லூர் என வழங்கியுள்ளது. முன்னைய பெயரான திருநாவலூர் என்பதே இப்போது விளங்குகிறது. சுந்தரரை நாவலூரான் என்றே பெரிய புராணம் பலவிடங்களில் கூறும். நாவல்மரம் இவ்வூர் கோயிலின் தலவிருட்சம், எனவே நாவலூர் எனப்பட்டதாம். இன்றும் கோவிலில் நாவல் மரம் நிறைய உள்ளன. கடலூர் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க சிவாலயங்களில் இதுவும் ஒன்று. விழுப்புரம் மாவட்டம், ஊளுந்தூர்பேட்டை வட்டத்தில் முக்கிய நகரங்கள் அருகருகே முக்கோணமாக இருக்க நடுவில் அமைந்துள்ளது இவ்வூர்.

ஊரின் மொத்தப்பரப்பு 1012.58 ஹெக்டர் ஆகும்.[1] இதில் நன்செய் நிலம் 600 ஏக்கர், புன்செய் நிலம் 1200 ஏக்கர் ஆகும். இந்நிலங்களுக்கு இவ்வூர் ஏரிப்பாசனமே முன்னாளில் போதுமானதாக இருந்தது. ஆனால் அந்நாளில் அவ்வேரியில் இரண்டு மாதமே நீர் இருக்கும். எனவே கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் விவசாயம் செய்கின்றனர். நன்செய்யில் நெல், கரும்பு வாழை ஆகியவை முக்கிய பயிர்கள் ஆகும். இரு போக சாகுபடி உண்டு. எல்லா நிலங்களுக்கும் இரு போகத்திற்கு நீர் கிடைக்காது எனவே 600 ஏக்கரில் 300 ஏக்கர் மட்டுமே இருபோக பயிர் செய்ய 116 இயந்திர இறவைகள் உள்ளன. இதன் காரணமாகவும்

ஏரியில் நீர் சுண்டி விடு வதாகக் கூறுகின்றனர். புன்செய்ப் பயிராக கம்பு, கடலை, கேழ்வரகு முதலியன பயிரிடுகின்றனர். பச்சைப் பசேல் என கண்ணுக்குக் குளிர்ச்சியாக எங்கும் வயல் சூழ்ந்திருக்க நடுவில் ஆலயமும் ஊரும் உள்ளன.

'' கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கைம் முகங்காட்ட
மருங்குவளர் கதிர்ச்செந்நெல் பயப்புரவி முகங்காட்ட
பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞரார்ப் பொலிபிறங்க
நெருங்கிய சாதுரங்க பலங்கர்ப்பனவா நிறை மருதம்''

என்று இவ்வூர் உள்ளடங்கிய திருமுனைப்பாடி நாட்டினை, அன்று மருதமாகவே கண்டார் சேக்கிழார்.

விவசாயம் தவிர மீன் பிடித்தல், நெசவுத்தொழில் ஆகியனவும் அதிகமாக உள்ளன. மீன்பிடித்தல் என்பது ஏரியில் நீர் இருக்கும் இரண்டு மாதங்கள் மட்டுமே. இவ்வூரினைச் சுற்றி உள்ள சுமார் 16 வட்டங்களில் உள்ள 27 கிராமங்களுக்குத் திருநாவலூரே தலைநகர் ஆகும்.

மேலும் தொடக்க நிலைப்பள்ளி ஒன்றும், குழந்தைகள் காப்பகம் ஒன்றும் இவ்வூரில் உள்ளன. காவல் நிலையம், அஞ்சல் அலுவலகம், ஒரு வங்கி ஆகியனவும் உண்டு. கோயிலைச் சுற்றி மேற்குப்பக்கம் தவிர முப்புரமும் ''ப'' வடிவில் விதிகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு விதியிலும் ஒவ்வொரு இனத்தார் குடியிருக்கின்றனர். கோவிலுக்கு நேர் எதிரே கிழக்குப் பக்கம் செம்படவர்களும். வடக்குப்பக்கம் நையினார் எனப்படும் உடையார் இனத்தவரும் தெற்குப்பக்கம் வன்னியர்களும் உள்ளனர். அடுத்தசுற்றில் இதே போல் வடக்கு பக்கம் பிள்ளை மார்களும், தென்கோடியில் சேரியும் உள்ளது. இவர்களுள் செம்படவர் இனத்தார்க்கு இக்கோயிலில் குறிப்பிட்ட சில கடமை களும், உரிமைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. நையினார் இனத்தவர்களும் குறிப்பிடத்தக்க செல்வாக்குடைய வர்களாக விளங்குகின்றனர். எனவே அவ்விரு இனத்தவர் பற்றிய சில செய்திகளை இங்கு காணலாம்.

★★★

T.734.

3. நாவலூர் குமுகாயம் (சிவன் படவர்)

சிவன் படவர்

திருநாவலூரில் சிறப்புடன் விளங்கிய சிவன்படவர் சமூக செய்திகளை இங்கு காண்போம். செம்படவர் ஆறு, குளம், ஏரி, நதி ஆகிய பகுதிகளில் மட்டும் மீன் பிடிப்பார்கள், கடலில் மீன் பிடிக்க மாட்டார்கள்.

கடலில் மீன் பிடிப்பவர்களை மீனவர் என்பர். எனவே செம்படவர் வேறு மீனவர் வேறு, ஆனால் இருவர் தொழிலும் ஒன்றே. சிவன் படவர் என்பதே பின்னாளில் மருவி செம்படவர் என்றாயிற்று. இவ்வூரில் (திருநாவலூர்) ஆடி சுவாதித் திருநாளில் நடக்கும் சுந்தரர் விழாவில் சுந்தரரின் திருமேனியினை வீதிவலமாக எடுத்து வரும் பணி இவர் களுடையது. அந்நாளில் கோவில் குருக்கள் செம்படவர்களில் ஒருவருக்குப் பரிவட்டம் கட்டி மரியாதை செய்வதும் வழிவழியாக நடந்து வருகிறது. 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்த இவ்வூரில் இன்று 4 குடும்பங்களே உள்ளன. பலர் ஏரியில் நீரின்மையால் பிழைக்க வழிதேடித் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று விட்டனர். ஏரியில நீர் வருடத்தில் இரண்டு மாதமே இருக்கும். இவ்வேரிக்கு நீர் திருக் கோயிலூர் அணையிலிருந்து வருகிறது. வழியில் எட்டு ஏரிகள் உள்ளன.[2] அவ்வேரிகள் நீர் நிரம்பிய பின்னரே இறுதியாக இவ்வேரிக்கு நீர் வரும் இந்நிலையில் தம்குலத்தொழிலான மீன் பிடிப்பதனை விட்டுத் தம் பிழைப்பு கருதி வேறு தொழில்களான நெசவு, விவசாயம் போன்றவற்றில் ஈடுபடலாயினர்.[3]

செம்படவர் பெயர்க்காரணம் :—

மக்களையும், பொருட்களையும் மிகபத்திரமாக இக்கரையி லிருந்து அக்கரைக்கு கொண்டு சென்றதால் இவர்களை நல்ல படகோட்டி என்றனர் அதாவது செம் என்றால் நல்ல, செம்மையான என்று பொருள் படவன் என்றால படகோட்டி என்று பொருள். நல்ல படகோட்டி எனும் பொருளில் செம்படவர் எனப்பட்டனர். சிவனுக்கு படகோட்டியாக இருந்ததால் சிவன் படவன்[5] எனப்பட்டனர். அதுவே 'செம்படவன்' என மருவியது என்றும் கூறுவர். கி.பி. 17ம் நூற்றாண்டின் செஞ்சி அரசர் இவர்களது வழக்கில் தீர்ப்பினை வழங்கி செப்புப்பட்டயமாக அதனை பொறித்து வழங்கினார். அப்பட்டயத்தில' இவர்கள் 'சிவன் படவர்' என்றே குறிக்கப்பட்டு உள்ளனர்.[6] எனவே சிவன்படவர் என்ற சொல்லாட்சியே பின்னாளில் மருவி செம்படவர் என்றாயிற்று எனலாம்.

இருபெரும் பிரிவு :—

சைவமதத்தினைப் பின்பற்றும் செம்படவர் சைவ கோத்திரத்தார் என்றும் வைணவ மதத்தினைப் பின்பற்றும் செம்படவர் வைணவ கோத்திரத்தார் என்றும் இவர்களிடையே இருபிரிவு உண்டு[7]. வைணவ கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் சைவ கோத்தரத்தில் பெண் எடுக்க மாட்டார்கள். வைணவ கோத்திரத்தை சேர்ந்த செம்படவர்கள் மிக குறைந்த அளவினரே தமிழ்நாட்டில் உள்ளனர். வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள குப்பம் என்ற இடத்தில் வைணவ கோத்திரத்தை சேர்ந்த செம்படவர்கள் காணபடுகின்றனர்.[8] தென் தமிழகத்தில் சைவச் செம்படவர்களே அதிகம் உள்ளனர்.

உட்பிரிவு :—

சிவன் படவரில் கொட்டைக் கட்டி சாதி, வன்னிய வகையறா, முக்காலி போன்றன குறிப்பிடத்தக்க உட்புரிவுகள் ஆகும். மேலும் சேப்பாளையன், சேர்வக்காரன், சம்சமக்கள்,

சங்கிலிப் பிள்ளை, பழவழ தேவர் போன்ற பிரிவுகளும் உண்டு.[9] செம்படவர்கள் தங்கள் பெயருக்கு பின் சிறப்பு பெயராக நாட்டார் என்பதைச் சேர்த்துக் கொள்கின்றனர் செப்புப்பட்டயத்திலும் செம்படவர்கள் பெயருக்குப்பின் நாட்டார் என்ற சொல் உள்ளது[10].

சங்கிலிப்பிள்ளை

இவர் செம்படவர் வீட்டில் நிகழும் ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சியிலும் பங்கேற்பார். குறிப்பாகத் திருமணம் இவர் பார்வையின் கீழ் நடக்கும். சற்றே நகைச்சுவையுணர்வு உடையவராகவும் இருப்பார். திருமண வீட்டில் அடிக்கடி சில கதை கூறியும் வேடிக்கைகள் செய்து காட்டியும் அனைவரையும் சிரிக்க வைப்பார். செம்படவர் சமூகத்தில் சங்கிலிப் பிள்ளைக்குத் தனி மரியாதை உண்டு. பாட்டும் பாடுவார்.

திருமண விழாவின் இறுதியிலும், பெண்ணை உறுதி செய்து கொள்ளும் நிச்சயதார்த்தம் விழாவின் இறுதியிலும் சங்கிலிப்பிள்ளை அனைவரும் காண ஒரு பொது இடத்தில் நின்று

''பழவழ பத்தும் சூழ நாடும் தேவரும், சேப்பாளையன் சேர்வகாரன் சம்சமக்கள், சங்கிலிப்பிள்ளை, இவர்கள் அறிய முப்பத்து முக்கோடி தேவர்கள் அறிய நாற்பத்தியெட்டு ரிஷிகள் அறிய கருடர், கம்புருடர் சித்தி, வித்தியாதரர், யானை முதல் எறும்பு முடிய, சூரிய சந்திராள் அறிய இந்தத் திருமணம் (பாக்கு மாத்தல் = நிச்சயதார்த்தம்) நடத்தப்பட்டது'' என்று கூறி விழாவினை நிறைவு செய்வார்.

பொதி கட்டுதல் :—

நிச்சய தார்த்தம் முடிந்தவுடன் தாம்பூலம் வழங்கல் நிகழ்ச்சி நடைபெறும், தாம்பூலம் வழங்குதலில் இரு வகையுண்டு, அவை சாமி தாம்பூலம், சபைத்தாம்பூலம் ஆகும். சாமி தாம்பூலம் என்பது ஐந்து, ஏழு என ஒற்றைப் படை எண்ணில் வெற்றிலை பாக்கு

வைத்து சாமிக்கு படைப்பதாகும். சபைத்தாம்பூலம் என்பது விழாவிற்கு வந்திருக்கும் அனைவருக்கும் வழங்கபடுவதாகும். இறைவனுக்கு படைத்தல் நிச்சயதார்த்த நிகழ்ச்சியிலேயே நடைபெறும். அறிவிப்புக்குப் பின்னர் சபைத் தாம்பூலம் வழங்கப் படப் போகிறது என்ற நிலையில் சங்கிலிப்பிள்ளை தன் மேல் துண்டைக் (பெரிய துண்டு) குறுக்காகக் கட்டிக் கொள்வார். சங்கிலிப் பிள்ளை தனக்கு வேண்டும் மட்டும் தட்டிலிருந்து சபை தாம்பூலத்தினை எடுத்து (வாரி) தன் துண்டில் (பொதியில்) வைத்துக் கொள்வார் இதனையே பொதி கட்டுதல் என்கின்றனர். மேலும் இன்னொருவர் இன்னொரு தட்டில் சபைத் தாம்பூலம் எடுத்து வருவதைப் பார்த்தவுடன் தான் நிற்குமிடத்திலிருந்து அங்கு ஓடுவார், ஓடும் போது வழியில் உள்ளவர்களை இடித்துக் கொண்டும் தள்ளிக் கொண்டும் ஓடுவார், அத்தட்டிலிருந்தும் தனக்கு வேண்டியளவு எடுத்துக் கொள்வார் இவ்வாறு இவர் ஓடும் போது சில (சோமாளித் தனமான) வேடிக்கைகளை செய்து காட்டுவார். இதன் நோக்கம் அனைவரும் மகிழ்ச்சியுடனும், சிரித்த முகத்துடனும் இருக்க வேண்டும் என்பதேயாம். குழந்தை களுக்கு இதன் காரணமாக இவரை மிகவும் பிடிக்கும்.

அண்ணமார் பாட்டு :–

திருமணம் முடிந்து மருவுக்கு வீடு வரும் (மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று பின் பெண் வீட்டுக்கு வருதல்) மணமக்களை முன்னிருத்தி அவர்களை வாழ்த்தி வயதில் மூத்த பெண்கள் பாடுவர். இது அண்ணமார் பாட்டு எனப்படுகிறது. சின்ன அண்ணன், பெரிய அண்ணன் என்று பாடல்களில் இருவரைக் குறிப்பிடுவார்கள். சின்ன அண்ணன் என்பது ஞான சம்பந்தரை யும் பெரிய அண்ணன் என்பது வீர பத்திரரையும் குறிக்கும்.

இறந்தவருக்கு கோயிலில் பரிவட்டம் :–

இறந்தவுடலை எரித்தல், புதைத்தல் ஆகிய இரு முறைகளும் காணப்படுகின்றன. இவர்கள் சமூகத்தில் ஒருவர் இறந்தவுடன் அச்செய்தி ஊர் முழுவதும் தெரிவிக்கபடுகிறது.

கோயில் குருக்களுக்கும் சொல்லபடுகிறது. இறந்த உடலைப் பாடையில் (மூங்கில் தென்னை மட்டையில் ஆனது) வைத்து கோவில் முன் கொண்டு வருகின்றனர். கோயில் குருக்கள் பரிவட்டம், தீர்த்தம், பழம், பூ, விபூதி, முதலியன கொண்டு வந்து தருகிறார். இறந்தவுடலுக்குப் பரிவட்டம் கட்டபடுகிறது. பின்னர் வந்தவழியே சென்று இடுகாட்டை அடைகின்றனர். பரிவட்டம் கட்டும் நிகழ்ச்சி வரை அழுது அரற்றியவர்கள் அந்நிகழ்ச்சிக்குப் பின் யாரும் அழுவது இல்லை.

ஆடிசுவாதியும் செம்படவரும்

செவி வழியாக தொடர்ந்து சொல்லப்படும் ஒரு கதையின் படி முற்காலத்தில் திருவாரூரில் சுந்தரரின் ஆடி சுவாதி விழா நடைபெறும் போது, சுந்தரர், பரவை, சங்கிலி ஆகியோரது உற்சவ மூர்த்திகள் (திருமேனிகள்) வீதிவுலாவாக எடுத்து வருவதற் கில்லாமையால், திருநாவலூரிலிருந்து தருவிக்கப்பட்டு விழா முடிந்த பின் திரும்ப அத்திருமேனிகள் அனுப்பப்பட்டுப் பல ஆண்டுகளாக நடந்து வந்ததாம் ''திருவாரூரில் சுவாமி புறப்படும் போது சுந்தமூர்த்திகள் விக்கிரகம் முன் கொண்டு போகப்படுவது வழக்கம். இராசேந்திரன் காலத்தில் அந்த ஸ்தானத்தில் தன் பிதாவாகிய இராஜராஜனது விக்கிரகத்தைக் கொண்டு போகும்படி ஏற்பாடு செய்தான். அஃது இன்னும் நடைபெறுகிறது என்று தஞ்சை ஸ்ரீமான் ராவ்பகதூர் கே.எஸ்.ஸ்ரீநிவாஸ பிள்ளையவர்கள் எழுதிய தமிழ் வரலாறு, பிற்பாகம், முற்பகுதி பக்கம் 161–2ல் உள்ளது என்று இக்குறிப்பினை எடுத்துக் காட்டுகிறார். உ.வே.சா.[10அ] இதன் மூலம் கி.பி. 11 வரை சுந்தரர் விக்கிரகம் வீதியுலா வந்தமை தெரிகிறது. இங்கு செம்படவர்கள் குறிப்பிடும் செய்தியினையும் இதனோடு ஒப்பிடும் போது, திருநாவலூரி லிருந்து சுந்தரர் விக்கிரகம் ஒரு வேளை கொண்டு செல்லப்பட்டும் இருக்கலாம் என எண்ண இடமுண்டு.

இவ்வாறு திருவாரூரில் நடந்து வரும் ஒரு முறை, அவ்விழா வினை நடத்துபவர்கள் ஒருங்கு கூடி ''இவ்விக்கிரங்களை இனி

நாமே இங்கேயே வைத்துக் கொள்வோம் திருநாவலூருக்கு அனுப்ப வேண்டாம்'' என முடிவு எடுத்தனர். இதனை அறிந்த செம்படவர்களில் ஒருவர், இரவோடு இரவாக சுந்தரர் திருமேனியினை மட்டும் தம் தோளில் தூக்கி கொண்டு ஊர் திரும்பியதாக கூறுகின்றனர். அன்றிலிருந்து ஆடிசுவாதித் திருநாளை திருநாவலூரில் கொண்டாட முடிவு செய்து இன்று வரை நடந்து வருகிறதாம். இவ்வாறு சுந்தரர் திருமேனி செம்படவர்களால் கொண்டு வரப்பட்டமையால் ஊர்மக்கள் முடிவுப்படி அவர்களுக்கு மரியாதை செய்யும் பொருட்டு அதுமுதல் பரிவட்டம் கட்டபட்டதாம்.

பரிவட்டம் :—

பரிவட்டம் என்பது ஆடை விக்கிரகத்துக்குச் சாத்தும் கூறை, கோயிலில் தரிசிப்போர் தலையில் மரியாதையாகக் கட்டும் கடவுள் ஆடை, பரியட்டம் எனவும் பெறும்'' என்று அகராதி விளக்குகிறது. இக்கோயிலில் சுந்தரர் பிறந்த நாளான ஆடி சுவாதியில் சுந்தரர் திரு மேனியினை வீதியுலாவாக சுமந்து பவனி வரும் பணி இந்த செம்படவர்களைச் சாரும். இவர்களில் ஒருவருக்கு (பரம்பரையாக வரும்) குருக்கள் பரிவட்டம் கட்டி விடுகிறார். இப்போது நடேச நாட்டார் என்பவருக்கு கட்டப் படுகிறது. அவரின் பரம்பரையினருக்கே இவ்வுரிமை உரியது. பரிவட்டம் கட்டப்பட்ட பின்னரே சுவாமி வீதியுலா வருகிறது.

செம்படவர்கள் திருநாவலூரிலன்றி பிற ஊர்களிலும் சில சிறப்புக்கள் பெறுகின்றனர். இதனை அவர்களின் பாடல்களி லிருந்து அறியலாம். திருநாவலூரில் தீர்த்தம் திருமாலை பரிவட்டம் பெறுகின்றனர். விருத்தாசலத்தில் ஐந்தாம் நாள் ரிஷிப வாகன விழா இவர்களுடையது ஆகும். திருவண்ணாமலையில் கார்த்தீகை தீபம் ஏற்றும் பொறுப்பு இவர்களுடையது. காஞ்சி புரத்திலே பொன்முடி, புஜதீர்த்தம் பெறுகின்றனர். மதுரையில் மீனாட்சிக்கு தாய் தந்தையாக இருந்து திருமணம் செய்து வைக்கின்றனர்.[12]

செம்படவரும் செப்புப்பட்டயமும்

செஞ்சி மன்னரின் ஆட்சிக் காலத்தில் திருநாவலூர் ஏரியில் மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்த செம்படவர்களுக்கு ஒரு பிரச்சனை உண்டாகியது. அதன் காரணமாக அவர்கள் நீதி வேண்டி அரசரிடம் சென்றனர். அரசரும் உண்மையறிந்து அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கி ''இனி இவர்களே இவ்வேரியில் மீன் பிடித்து வர வேண்டும் என்றும், சுந்தரமூர்த்தி கோவில் மரியாதையான, தீர்த்தம், திருமாலை, பரிவட்டம் முதலியன இவர்களே அடைய வேண்டியது என்றும் 44 கிராமத்தி லும் உள்ள ஏரி குளத்தில் மீன் பிடிக்கும் உரிமை இவர் களுக்கே உரியது என்றும், வேறு யாராவது மீன் பிடித்தால் அவர்களுக்கு ஆறு மாதம் கடுங்காவல் தண்டனையும், 5 பொன் அபராதமும் உண்டு என்றும் திருநாவலூர், பரிக்கல், செம்மேடு மூன்று கோவில்களுக்கு இவ்வகையில் வரும்படிகளை இவர்களே அனுபவித்துக் கொள்ளவும். கோவில் காரியங்களைத் தாழ்வு வராத படிக்கு நடத்திக் கொள்ள இவர்கள் மாதம் 1க்கு 1/4 விராகன் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் மேற்கண்ட தீர்ப்பினை எதிர்த்து யாராகினும் விவாதம் செய்தால் கெங்கை கரையிலும் காசிக் கரையிலும் பசு கொன்ற தோஷத்திற்கும் போவார்கள் என்று எச்சரித்தும் செஞ்சி மன்னர் தீர்ப்பு வழங்கி அதனைச் செப்புப் பட்டயத்திலும் வடித்து செம்படவர்களிடம் அளித்துள்ளார்.[13]

இப்பட்டயத்தில் சாலி வாகன சகாப்தம் வருஷத்திற்கு மேல் செல்லா நின்ற ஆனந்த வருஷம் ஆடி மாதம் 23ந் தேதி என்று மட்டும் உள்ளது. சக ஆண்டு குறிக்கப்பட வில்லை. செஞ்சி அரசர் தீர்ப்பு என்று வருவதால் அவர் காலத்தில் வந்த ஆனந்த வருடத்தில் வெளியிடப்பட்ட செப்புப்பட்டயம் என்பது தெரிகிறது.

கிருஷ்ணம நாயக்கன் என்பவன் செஞ்சியினை ஆண்டு வரும் காலத்து விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 'கொளத்தூர்' என்ற ஊரினைத் தனது 'நந்தன' வருட ஆட்சியில் காசி விஸ்வ

நாதபுரமாகப் பெயர் மாற்றித் தானமாக சண்டேஸ்வர விஸ்வநாத இறைவர்களுக் கொடுத்துள்ளார்.[14] இங்கு குறிக்கப்படும் நந்தன வருடம் சரியாக கி.பி. 1592 ஆகும். இதன் அடிப்படையில் சிவன படவர் செப்புப்பட்டயத்தில் குறிக்கப்படும் ஆனந்த வருடத்தை அறியலாம்.

கி.பி. 15 முதல் கி.பி. 18 வரை வரும் ஆனந்த வருடங்கள் முறையே கி.பி. 1494, 1554, 1614, 1674, 1734, 1794 ஆகும். நந்தன வருடத்திலிருந்து ஆனந்த வருடம் 22 ஆண்டுகள் ஆகும். எனவே கொளத்தூர் கல்வெட்டுப்படி கி.பி. 1592+22 = 1614 ஆனந்த வருடம் பொருந்தி வருகிறது. எனவே, இச்செப்புப் பட்டயம் கிருஷ்ணம நாயக்கன் காலத்தில் கி.பி. 17ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டதாக இருக்கலாம்.

செம்படவர்களின் குலதெய்வம் :–

அங்காளம்மன் இவர்களின் குலதெய்வம் ஆகும் இதற்கென்று தனிக்கோயிலும் உண்டு. இக்கோயிலின் பூசைகள் இவர்களுள் ஒருவரே செய்து வருகின்றனர். மாசி மாதத்தில் சிவராத்திரிக்கு மறுநாள் வரும் மயானக்கொள்ளை விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அன்று அம்மன் திருமேனி இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லபடுகிறது. அங்கு விழா நிகழ்கிறது. ஆடு, கோழி வெட்டப்படுகிறது. அங்காளம்மனின் காவல் தெய்வம் பாவாடைராயன் எனப்படுகிறது. செம்படவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாடும் விழா இதுவாகும்.

இன்று மிகவும் பின்தங்கிய நிலையில் இவ்வூர்ச் செம்படவர்கள் உள்ளனர். தம் குலத்தொழிலான மீன் பிடித்தலை விட்டுப் பிழைப்பு கருதி வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். மேலும் பலர் இவ்வூரினை விட்டே வெளியேறி விட்டனர். நாளுக்கு நாள் இவர்களின் எண்ணிக்கை சிறுத்துக் கொண்டே வருகிறது. கோவிலோடு ஒட்டி வாழும் இவர்கள் குடியிருப்பும் கோவிலை ஒட்டியே உள்ளது. செம்படவர்கள் தெய்வபக்தியும்,

நல்லொழுக்கமும் உடையவர்களாக நிகழ்கின்றனர் என்றால் அது மிகையாகாது.

நையினார் :–

வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வேட்டவலம் ஜமீன் தார்கள் (நையினார்) இவர்கள் இனத்தவரே அவர்கள்தான் இவ்வினத்தவர்களின் தலைவர். இவ்வினத்தில் மூன்று பிரிவு உண்டு. அவை மலையமன்னர், நத்த மன்னர், சுருதி மன்னர் என்பதாம் இவர்கள் மொத்தமாக பார்க்கவ குலத்தினர். எனப் படுகின்றனர். இன்று இவர்கள் தங்கள் பெயருக்குப்பின் உடையார் என்னும் ஒட்டுச் சொல்லை இணைத்துக் கொள் கின்றனர். இவ்வூரில் வாழ்ந்த மலையமன்னர் அனைவரும் வேட்டவலம் ஜமீன்தாரின் கட்டளைக்கு கீழ்படிந்து நடந்தனர் அவரையே தம் இனத்தலைவராகக் கொண்டனர். இவ்வகுப்பில் 'தெய்வகம்' என்ற பெயர் பலருக்குக் காணப் படுகிறது.

பரிவட்டம் பெறும் பிற இனத்தவர்

திருநாவலூர் பக்தஜனெஸ்வரஸ்வாமி ஊழியத்துக்காக தத்துவான குருக்கள் கைலாசநம்பியார் சரவண நம்பியார், சாக்கல நாயினார் என்ற நால்வரும் கூடி ஐவர் குழுமுன்பாக சிவன்படவர் நால்வருக்கு கவுல் (உரிமை) கொடுத்தது. இதற்கு சாட்சிகள் மூர்த்தி நாயக்கர், பச்சையப்பப்பிள்ளை, இருந்தை காமாட்சி அய்யர், காந்தலவாடி லட்சுமிபதி அய்யர் ஆகிய நால்வரும் ஆவர்.[15] கி.பி 1494–ல் ஸ்ரீரங்க தேவ மஜாராஜாவின் காலத்தில் இவ்வூரில் வெட்டப்பட்ட கல்வெட்டு பரிவட்ட உரிமை கொடுத்தனர், தச்சர், கருமார் இவர்களுக்கும் உண்டு என்று கூறுகிறது.[16] ஆனால் செம்படவர் பெயர் குறிக்கப்படவில்லை.

பலபிரிவினர் இவ்வூரில் இருந்தாலும் இணைந்து பண்போடு பழகி அன்பும் அறமும் விளங்க வாழ்க்கை நடத்துகின்றனர். தமிழகச்சட்டமன்ற தொகுதியில் (234ல்)

இவ்வூர் தொகுதியும் ஒன்றாகும். பல சுற்று வட்டார கிராமங்கள் இணைந்து திருநாவலூரை மையமாகக் கொண்டு தனித் தொகுதியாக (எம்.எல்.ஏ) விளங்குகிறது. கோவிலுக்கு வடக்குப் புறம் உள்ள ஒரு இடிந்த சிறிய வீடு போன்ற இடத்தை நரசிங்க முனையவரையரின் கொலு மண்டபம் இருந்த இடம் என்று ஊர் மக்கள் கூறுகின்றனர். அதன்பின் அவ்விடத்தில் 100 ஆண்டு களுக்கு முன் ஆங்கிலேயர் காலத்தில் மோகனா என்ற தேவதாசி இருந்ததாகவும் அவள் தன் பொருள் அனைத்தையும் இவ் விறைவனுக்குச் செலவு செய்ததாகவும் அவளின் 'மோகன மாலை' என்று பெயர் பெற்ற தங்கமாலை ஒன்று இக்கோவிலில் கடந்த 30 ஆண்டுகள் வரை இருந்த தாகவும் கூறுகின்றனர்.

அடிக்குறிப்புகள்

1. Census 1971, Dist, Census Hand book Vol I, Past X-B.
   Castes and tribes of Southern India. (P.S)
2. திருநாவலூர் கர்ணம் கூறியது.
3. Castes and tribes of Southern India (P.S)
4. கழகத் தமிழ் அகராதி 1974 பக்கம் 483
5. Castes and Tribes of Sonthern India (P.S)
6. செப்புப் பட்டயம் (நகல்) வாசகம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.
7. Castes and Tribes of Sonthern India (P.S)
8. Castes and Tribes of Southern India (P.S)
9. செம்படவர் சின்னைய நாட்டார் கூறியது.
10. செப்புப் பட்டயம்
    அ) கொட்டையூர் ஸ்ரீசிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள் – உ.வே.சா. உரை பக்கம் உ.க.சா (குறிப்புரையில் காண்க)
11. தென்னிந்திய கோயில் சாசனங்கள் அகராதி பக்கம் – 146
12. செம்படவர் நாடோடிப் பாட்டு
13. செப்புப் பட்டய வாசகம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.
14. 193/1940–41 (1940–41 என்பது இனி இந்திய கல்வெட்டு.
15. செப்புப் பட்டயம் ஆண்டறிக்கை வருடத்தை குறிக்கும்
16. 273/1939–40
17. முன்னாள் கல்வி அலுவலரும் இவ்வூரினருமான திரு. சிவசப்பிரமணியம் இத்தகவல் கூறினார்.

கோயில் வரைபடம்



1. திருத்தொண்டீஸ்வரம் – கருவறை
2. சண்டேஸ்வரர் – ஆலயம்
3. திருச்சுற்று மாளிகை
4. சிங்க மண்டபம்
5. நந்தி – பலிபீடம் – கொடிமரம் – பிள்ளையார்
6. சுந்தரர் – ஆலயம்
7. மடைப்பள்ளி (சிவன்)
8. அம்மன் – ஆலயம்
9. விஷ்ணு–ஆலயம்
10. மடைப்பள்ளி (விஷ்ணு)
11. யாகசாலை
12. திருக்கோபுரம்
13. ஸ்ரீ கலிநாரை
14. நாவல் மரங்கள் (தலவிருட்சம்)
15. நந்தவனம்

II. கோயில்கள்

1. திருத்தொண்டீஸ்வரம்

'ஆ'வாகிய உயிர் லயப்படும் இடமாகக் கோயிலமைந்த மையின் 'ஆலயம்' எனப்பட்டது. உயிர்களைக் கரையேற்றும் துறையாக கோவில் விளங்கியது. எனவே கோயிலானது 'துறை' யெனவும் வழங்கப்பட்டது. ஈசன் அமர்ந்திருப்பதால் கோயில் 'ஈச்சுரம்' எனப்பட்டது. இறைவன் வீரம் விளைந்தமையின் கோயில் வீரட்டானம் எனப்பட்டது. இறைவனின் மென்மையும், குளிர்ச்சியை விரும்பியமையாலும் 'தளி' எனவும் கோயில் கூறப்பட்டது. மக்கள் முறையீட்டு அருள நீதி வழங்கியதால் கோயில் அம்பலம் எனப்பட்டது. 'தானம்' என்பதும் கோயில் என்னும் பொருளில் வழங்கியது பேரழகு நிறைந்த கோயில் மாகாணம் எனப் பட்டது. மேலும் மாடக்கோயில், மணிக் கோயில், கொகுடிக் கோயில், ஆலக்கோயில் எனவும் பலபெயர்கள் இட்டு இறைவன் இருக்கும் இடத்தை இயம்பினர். நியமம், நகரம், கோட்டம், பள்ளி என்ற பெயர்களும் இலக்கியங்களில் காணப் படுகின்றன.[1]

''நுதல் விநாட்டத்து இமையோன் கோயிலும்
உவணச் சேவலுயர்த்தோன் நியமமும்
மேழிவலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்''

என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. கோவில்கள் பக்தியின் பொருட்டும், மன்னனின் வெற்றிச் சின்னமாகவும், குடிமக்களின் தேவைக்காவும் எடுக்கப்பட்டன.

திருத்தொண்டி ஸ்வரமான ராஜாதித்த ஈஸ்வரம்:—

திருத்தொண்டர்களான 63 நாயன்மார்களைக் குறிக்கும் விதமாகத் திருத் தொண்டிஸ்வரம் எனப்பட்ட இக்கோவில் பின்னாளில் அத்தமிழ்ச் சொல்லுக்கு ஈடாக வடமொழியில் பக்தசனேஸ்வரம் எனப்பட்டது. இன்றும் பக்தசனேஸ்வரர் கோவில் என்றே அழைக்கப்படுகிறது. முதலாம் பராந்தகனின் ஆட்சிக்காலத்தில் இவனின் மூத்த மைந்தனான இராஜாதித்தன் இக்கோவிலைக் கற்றளியாக்கினமையால் அவன் பெயரும் சேர்ந்து ''திருத்தொண்டிஸ்வரமான ராஜாதித்த ஈஸ்வரம்'' என்று கல்வெட்டுகளில் காணப்படுகிறது.[2]

ஈஸ்வரகிருகத்தின் அமைப்பு:—

மூலவர் கிழக்கு நோக்கிய வண்ணம் உள்ளார். விமானம், முன்மண்டபம், உள்மண்டபம், மகா மண்டபம் உடைய கற்கோவில் ஆகும் இது. கருவரையும், உள் மண்டபமும் முதலில் கட்டப்பட்டு (கற்றளியாக்கப்பட்டு) பின்னர் முன் மண்டபம் இணைக்கப் பட்டுள்ளது. அதன் பின்னர் மகா மண்டபம் எடுக்கப் பட்டு முன் மண்டபத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. முன் மண்டபம் வரை உள்ள பகுதிகள் முதலாம் பராந்தகன் (கி.பி.10) காலத்தவை எனலாம்.

அதிட்டானம், ஜகதி, யாளிவரி ஆகிய அங்கங்களுடன் உள்ளது. சோழர் காலக்கட்டடக் கலைப்பற்றிய டக்லஸ் பாரட் எழுதிய நூலில் இக்கோயிலின் அதிட்டான அமைதியை மூன்றாம் வகையில் (சி) அடக்குகிறார்.[3] இப்பிரிவினைச் சேர்ந்தவை கி. பி.866 – 940 காலத்தில் கட்டப்பட்டவை ஆகும். இக்காலக் கோயில்களில் கீழையூர், திருச்செந்துறை, வாலிகண்டபுரம், திருவையாறு, அல்லூர் ஆகியன அடங்கும்.

தேவ கோஷ்டங்கள் யாளிவரிக்கும் மேலாக அமைந்துள்ளன. பிரஸ்தரப் பகுதியில் (கூரை) பூதவரி உள்ளடங்கிய அமைப்பில் உள்ளது.கபோதம்,யாளிவரி ஆகியவை அதன்மேலாக அமைந்துள்ளன. சுவர்ப்பகுதியில் உள்ள அரைத்தூண்களின் பலகையையும் கூரையின் உட்பக் கத்தையும் இணைத்து சாய்ந்த நிலையில் நடனமாடும் நாட்டியப் பெண்களின் 1 அடி உயரச் சிற்பங்கள் வைக்கப் பட்டுள்ளன. கையால் சுழற்றினால் சுழலும் நிலையில் அவை உள்ளன. இவையும், மேற்பகுதியும் (விமானம்) சுண்ணமும் வண்ணமும் பூசப்பட்டு அழகுடன் விளங்குகின்றன.

விமானம் ஏகதலம் உடைய நாகரசிகர அமைப்புடையது. கீரிவத்தில் தெற்குப்பக்கம் தக்ஷிணாமூர்த்தி உருவம் (சுதை) அமர்ந்த நிலையில் உள்ளது. மேற்கு பக்கம் திருமால் தன் இரு தேவியருடன் உள்ளார். இடதுபக்கம் உள்ள தேவி உருவம் உடைந்துள்ளது. வடக்குப்பக்கம் உள்ள கிரிவத்தில் பிரம்மா இரு தேவியருடன் உள்ளார். கிழக்குப் பக்கம் யானைமேல் ஓர் உருவம் அமர்ந்த நிலையில் உள்ளது.சிதைந்துள்ளமையால் அவ்வுரு எதுவென அறிய இயலவில்லை. அவ்வுரு இந்திரனாகவோ முருகனாகவோ இருக்கலாம். கல்லால் ஆன விமானமும் பின்னர் சுதை கொண்டு பூசப்பட்டுள்ளன. உடைந்துள்ள சில இடங்களில் உட்பக்கம் கல் அமைப்பு தெரிகிறது. இச்சுதை பூசப்பட்ட காலம் கி.பி.15 அல்லது 16ம் நூற்றாண்டாக இருக்கலாம். பிரஸ்தரப் பகுதியின் மேல் நான்கு மூலையிலும் நந்திகள் உள்ளன. இந்நந்திகளும் கல்லால் ஆனவையே, அவற்றின் மேலும் சுதை பூசப்பட்டுள்ளது.

கருவறையில் உள்ள சிவலிங்கத்தை சுயம்புலிங்கம் என்கின்றனர். ஆவுடையார் பாகம் மட்டுமே கல்லால் ஆனது. ருத்ர பாகத்திலிருந்து அவ்வட்டப் பகுதி ஒரு சுற்று விலகியே (இடிக்காதவண்ணம்) உள்ளது. அபிடேகங்கள் ஆவுடையாருக்கு மட்டுமே நடைபெறுகின்றன.

வாயிலில் உள்ள துவாரபாலகர்கள் உருவங்கள் சிறிய அளவிலே உள்ளன. இவை கோயில் கட்டப் பட்ட காலத்தே அமைக்கப்பட்டவையாகும். சுமார் 5 அடி உயரம் உள்ளன. வலப்புறத்துவாரபாலகரின் இடக்கை தர்ஜனி முத்திரை காட்டியும், வலக்கை ஊன்றிய நிலையிலும் உள்ளன. காதில் பத்ரகுண்டலங்கள் உள்ளன. முகத்தில் சாந்தம் நிலவுகிறது. இடப்புறத் துவாரபாலகர் காதில் பிரேத குண்டலம் உள்ளது. கதையில் பாம்பு சுற்றி உள்ளது. அதன் மேல் கை ஊன்றிய நிலையில் அவருள்ளார். இடதினும் வலது துவாரபாலகர் முகம் கோப பாவனையுடன் காணப்படுகிறார்.

தேவ கோஷ்டத்தில் தெற்குப்பக்கம் மட்டுமே சிற்பம் உள்ளது. இதுபுதுமைக் கோலத்தில் அமைந்த தக்ஷினாமூர்த்தி சிற்பமாகும். தக்ஷிணாமூர்த்தி நின்ற நிலையில் உள்ளார். பின்புறம் காளை காட்டப்பட்டுள்ளது. தலையில் ஜடாமகுடமும் இடது காதில் மகர குண்டலமும், வலது காதில் பத்ர குண்டலமும் உள்ளன. வலது மேற்கையில் அக்கமாலையும், கீழ்க்கை காளையின் மீது ஊன்றியும் உள்ளன. இடது பக்கக்கைகளில் ஒன்று திரிசூலம் ஏந்தியும்,பிறிதொன்றில் ஏடுதாங்கியும் உள்ளன. காலில் வீரகழல் காணப்படுகிறது. தொடை வரை ஆடை அமைப்பு உள்ளது. இவ்வகை கக்ஷிணாமூர்த்தி மிகவும் அருகியே காணப்படும் ஒன்றாகும் என்று டக்லஸ் பாரட் தனது முற்காலச் சோழர் கட்டடமும் கலையும் என்ற நூலில் குறிப்பிடுகிறார். கோஷ்டத்திற்கு மேல் உள்ள மகர தோரணத்தின் மேலே நடராசர் உருவமும், கீழே பிள்ளையார் உருவமும் உள்ளன. மேற்குப் பக்க தேவ கோட்டத்தில் சிலை ஒன்றுமில்லை. ஆனால் மகர தோரணத்தில் மேல் பகுதியில் தன்மேல் யானை உருவம் ஒன்று ஒருவரைத் தாங்கி அமர்ந்த நிலையில் உள்ளது. கீழே திருமால் சுகாசனத்தில் இருக்க, அருகே சீதேவி, பூதேவி அமர்ந்துள்ளனர். வடக்குப் பக்கம் உள்ள தேவ கோஷ்டத்திலும் சிலை ஒன்றுமில்லை. மகர தோரணத்தில் உமையும் சிவனும் உள்ளனர்.

பின்புறம் காளை முகம் தெரிகிறது. சுற்றிலும் சில பெண்களின் உருவங்கள் தெரிகின்றன. துவாரபாலகர்கள், தேவகோஷ்டத்தில் உள்ள தக்ஷிணாமூர்த்தி ஆகிய அனைத்தும் கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையே. மகா மண்டபத்தின் வடக்குப் பக்க கோஷ்டத்தில் உள்ள துர்க்கை பிற்காலத்தியது ஆகும்.

கற்றளியான காலம் கி.பி.935.

கி.பி.9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் திருநாவலூர் இறைவன் மீது பதிகம் பாடியுள்ளார். எனவே கி.பி.9க்கும் முன்னர் இங்கு கோவில் இருந்திருக்கிறது. முதலாம் பராந்தகனின் காலத்தில் அவனின் 28வது ஆட்சியாண்டில் கற்றளியாக் கப்பட்டது இக்கோவில். இதனை இவ்வூர் கல்வெட்டு மூலமே அறியலாம். அக்கல்வெட்டு ''ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோபரகேஸரி பன்மர்க்கு யாண்டு இருபத்தெட்டாவது திரு முனைப்பாடித்திரு நாவலூர் திருத்தொண்டிஸ்வரத் திருகற்றளி செய்வித்த இராஜாதித்த தேவர்''[4] என்று உள்ளது. பராந்தகன் ஆட்சிக்கு வந்தது கி.பி. 907 ஆகும்.[5] கி.பி.907வுடன் 28ஆவது ஆட்சியாண்டு கூட்ட கி.பி.935ல் இக்கோயில் கற்றளியாய்ச் செய்யப்பட்டுள்ளது என அறிகின்றோம். பேராசிரியர் கீல் ஹார்ன் தனது கணக்குப்படி பராந்தகன் கி.பி.906 ஆம் ஆண்டு முதல் 946 வரை ஆண்டான் என்கிறார். எபிகிராபிகா இண்டிகா தொகுதி 7ல் திருநாவலூரின் ஆறு கல்வெட்டுக்களைப் புதிப்பித்த திரு ஹூல்ஷ்[6] கி.பி. 900 முதல் கி.பி.940 வரை பராந்தகன் காலம் என்கிறார். இங்கு சதாசிவ பண்டாரத்தார் கூற்றையே எடுத்துக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. குடந்தை திரு என். சேதுராமன் அவர்களும் டிசம்பர் 906 முதல் பிப்ரவரி 907 க்குள் பராந்தகன் ஆட்சிக் கட்டிலேறினான் என்ற முடிவுக்கே வருகிறார்.

திருச் சுற்று மாளிகை:–

இத்திருச்சுற்று மாளிகையில் பல்லவர் காலத்திய சில கற்சிலைகள் உள்ளன. இவ்வூரில் பல்லவர் காலத்தில் ஒரு

கோயில் இருந்தது என்பதற்கு கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. அவைகளை மெய்பிக்கும் விதமாக இச்சிலைகள் இங்கு உள்ளன. முதலில் இருப்பது பெரிய சிவலிங்கம். சுமார் 6 அடி உயரம் இருக்கும் இச்சிவலிங்கத்தையே மன்னன் நரசிங்க முனையரையர் வணங்கியதாகக் கூறுகின்றனர். இதற்கு 'ராஜா பூசித்த லிங்கம்' என்றும் பெயர் வழங்குகிறது. இதன் பின்புறம் ஒருசிறிய சிவலிங்கம் உள்ளது. அதற்கு அகத்தியர்லிங்கம் என்று பெயர் வழங்குகின்றது. இதனை அடுத்து வடக்குப் பார்த்த வண்ணம் 63 நாயன்மார்களின் கற்சிலைகள் வரிசையாக உள்ளன. இவை கி.பி.16ம் நூற்றாண்டாக இருக்கலாம் அடுத்து சப்தமாதர்கள் வீரபத்ரர் சிற்பங்கள் உள்ளன. இறுதியில் நாககன்னியும், சூலம் உள்ள கல்லும் உள்ளன. வீரபத்ரர்: சுகாசனதில் அமர்ந்து கைகளில் வஜ்ரம், மழு தாங்கியுள்ளார். காதில் பத்ரகுண்டலம் காணப்படுகிறது. ஆடை பிடத்தின் மேலும் வீழ்ந்துள்ளதுபோல் காட்டப்பட்டுள்ளது. சப்தமாதர்களின் சிலைகளிலும் இவ்விதம் பீடத்தில் மேல் ஆடை வீழ்ந்துள்ள நிலையில் செதுக்கப் பட்டுள்ளன. ஆனால் வாராகி சிலையில் மட்டும் அவ்விதம் இல்லை. தனியாக ஒரு சிறிய வாராகி சிலையும் இக்குழுவினின்று மாறிய உருவமைதியுடன் உள்ளது. இவை கி.பி.16ஆம் நூற்றாண்டுச் சார்ந்தனவாகவும் சிறிய வராகி சிலை கி.பி.18ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம்.

யானை முகத்தோன் கோவில்:–

மேற்குபுறத்திருச்சுற்று மாளிகையில் பிள்ளையாருக்கு சிறிய அளவில் கிழக்கு நோக்கி கோயில் அமைக்கப்பட்டுள்ளது. பிள்ளையார் அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் உள்ளார். வலது கையில் அக்கமாலையும் இடதுகை ஒன்றில் சங்கும் மற்றிருகைகள் தொடையில் வைத்த நிலையிலும் உள்ளார். சுமார் 4 அடி உயரமுள்ள இப்பிள்ளையார் சிலை பல்லவர் கால அமைப்புடையதாக உள்ளது.

ஆறுமுகத்தோன் கோவில்:–

கருவறையின் பின்புறம் கிழக்கு நோக்கி ஆறு முகங்களுடனும் 12 கைகளுடனும் மயில் மேல் அமர்ந்த ஆறு முகத்தோன் கோயில் உள்ளது. இது கி.பி.18ஆம் நூற்றாண்டு முருகன் சிலை எனலாம். வெளிச்சுற்றில் சிதைந்த ஒரு முருகன் சிலை உள்ளது. அதுவே முதலில் இவ்விடத்து இருந்திருக்க வேண்டும் சிதைவு பட்டதால் அதனை எடுத்து விட்டு வேறு ஒன்று செய்து இவ்விடத்து வைத்தனர் போலும். வெளியில் கிடக்கும் அச்சிலை கி.பி.15ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம். இரண்டும் ஒரே அமைப்பில் செய்யப்பட்டுள்ளன. திருப்புகழ் பாடிய அருணகிரியார் இவ்வூர் முருகனையும் பாடியுள்ளார் ஒருவேளை அவர் பாடிய முருகன் வெளிசுற்றில் கிடக்கும் முருகனாக இருக்கலாம்.

பல்லவர் காலக் கற்சிலைகள்:–

விஷ்ணு, பிரம்மன், சண்டேஸ்வரர் ஆகிய மூன்று சிலைகள் பல்லவர் காலக் கலைப் பாணியுடன் விளங்குகின்றன. இவை பல்லவர்காலத்திலிருந்த கோயிலில் இருந்திருக்க வேண்டும். அக்கோவில் அழிந்து பட்டதால் அங்கிருந்த சில சிலைகளை இங்குக் கொணர்ந்து வைத்திருந்திருக்கலாம். அவற்றில் விஷ்ணு சிலை சுமார் ஆறு அடி உயரம் உள்ளது. மிக மெல்லிய புடைப்பாகச் செதுக்கப் பட்டுள்ளது. வலக்கைகளில் சக்கரமும், அபய ஹஸ்தமும் உள்ளன. இடது கைகளில் சங்கேந்தியும் ஊருஹஸ்த்திலும் உள்ளன. மார்பு விரிந்து பரந்த நிலையில் உள்ளது. ஆடை கணுக்கால் வரை உள்ளது. கால்கள் நன்கு தெரியவில்லை. இதன்காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டுத் தொடக்கமாக இருக்கலாம். அடுத்துள்ள பிரம்மனின் சிலை சுமார் 5 அடி உயரம் உள்ளது. விஷ்ணுவின் சிலை அமைப்பையே பெற்றுள்ளது. மூன்று தலைகள் தெரிகின்றன. நான்கு கைகள் உள்ளன. வலது கைகளில் ஒன்று தாமரை தாங்கியும் மற்றொன்று அபய ஹஸ்மாகவும் உள்ளன. இடது கைகளில் ஒன்று அக்கமாலை ஏந்தியும் மற்றொன்று கடிஹஸ்தத்திலும் உள்ளன. அடுத்துள்ள சண்டேஸ்வரர் சிலை சுமார் 2 அடி உயரம் உள்ளது. முன்னிரு சிலைகளின் கலைப்பாணியிலேயே இதுவும் காணப் படுகிறது. எனவே இதுவும் கி.பி.9 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தது எனலாம். சுகாசன நிலையில் கையில் மழு ஏந்தி யுள்ளது. இங்கு கூறப்பட்ட விஷ்ணு, பிரம்மன் சண்டேஸ்வரர் ஒவ்வொன்றின் முன்னும் ஒருசிவலிங்கம் உள்ளது. அவை அவர்கள் பூசித்த லிங்கங்கள் என்று கூறுகின்றனர். நான்காவது ஆக உள்ள லிங்கதைச் சுந்தரர் பூசித்தது என்கின்றனர்.

நடனமாதர்கள்:–

ஒரு நடனமாதும் அவளின் இருபுறமும் மத்தளம் கொட்டுபவர்களுமாக சிற்பங்கள் திருச்சுற்று மாளிகை அதிட்டானப் பகுதியில் உள்ளன. இங்கு ஆடும் நடனமாது ஒரே கரணத்திலேயே பலமுறை காட்டப் பட்டுள்ளார் திருச்சுற்று மாளிகையின் மேற்குப்பக்கத்தின் அடிப்பகுதியில் இவை செதுக்கப் பட்டுள்ளன. இவை கி.பி. 16 ஆம் நூற்றாண்டின எனலாம்.

கஜலெஷ்மி:–

வடகோடியில் அமர்ந்திருக்கின்றாள். கி.பி. 16 அல்லது 17ஆம் நூற்றாண்டு எனலாம். இருபக்கமும் யானைகள் இருக்க நடுவில் தேவி அமர்ந்துள்ளாள். இவளுக்கு நேர் எதிரே ஏழு லிங்கங்கள் புதைந்த நிலையில் ஆவுடையார் இன்றி பெரிதும் சிறிதுமாக உள்ளன. திருச்சுற்றில் நவக்கிரகம் உள்ளது. இவை கி.பி. 18 ஆம் நூற்றாண்டின எனலாம்.

சூரியன்:–

நவக்கிரகத்தை அடுத்து உள்ளது. பல்லவர்ககாலப் பாணியில் உள்ளது. முன் கண்ட பல்லவ சிலைகளுடன் ஒற்றுமை

உடையது. சுமார் நான்கு அடி உயரம் இருக்கும். கைகளில் தாமரை மொட்டும், பின்பக்கம் ஒளிவட்டமும் உள்ளன. கி.பி.9ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலம் எனலாம்.

பைரவர்:—

இரண்டுள்ளது. ஒன்று மூன்று அடி உயரமும், மற்றொன்று இரண்டு அடிஉயரமும் உள்ளன. இரண்டும் ஒரே அமைப்பில் உள்ளன. ஒரே ஒரு மாற்றம் மட்டும் உள்ளது. அது நாயின் அமைப்பாகும். பெரிய சிலையில் நாயின் முகம் இடதுகைப் புறம் உள்ளது. சிறியதில் வலது கை பக்கம் உள்ளது. நான்குகைகள் உள்ளன. வலது கைகளில் உடுக்கையும் சூலமும் உள்ளன. இடதுகையில் கபாலம் ஏந்தி உள்ளது. மணிகள் கோர்த்தமாலை கால்வரை உள்ளது. பாம்பு இடையில் உள்ளது. சுடர்முடியுடன் உள்ளது. காலம் கி.பி.17ஆம் நூற்றாண்டு எனலாம்.

சிங்க மண்டபம்:—

விஜயநகர மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தில் மொத்தம் 12 தூண்கள் உள்ளன. முன்பக்கம் இரு தூண்கள் சிங்க(யாளி) வடிவில் உள்ளன. எனவே இம்மண்டபம் சிங்க மண்டபம் என அழைக்கலாயிற்று எனலாம். இம்மண்டபத்தில் உற்சவமூர்த்திக்கு அபிடேகம் நடைபெறுகிறது. எனவே அபிஷேக மண்டபம் என்றும் கூறுவர். வலது பக்கச் சுவரில் ஓர் ஓவியம் வரையப்பட்டுள்ளது. அதில் கிருஷ்ணன் கோபியர்களின் ஆடையை எடுத்துக் கொண்டு மரத்தில் அமர்ந்திருப்பது போல் வரையப்பட்டுள்ளது. மரத்தில் ஆங்காங்கே துணிகள் உள்ளன. சில குளிக்கும் பெண்களின் உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. இவ்வோவியம் கி.பி.19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வரையபட்டிருக்காலம், இம்மண்டபம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்டு இருக்கலாம்.

சண்டேஸ்வரர் ஆலயம்:—

மகாமண்டபத்தில் வடக்குபுறம் அதன் ஒரு பகுதியைத் தடுத்து அதில் இவ்வாலயம் அமைக்கப் பட்டுள்ளது. கல்வெட்டில் ''சாத்துக்குட்டி மாதேவன் என்னும் வாமசிவன்'' என்பவன் சண்டேஸ்வரர் கற்றளி அமைத்தான் என்று உள்ளது.[7] கல்வெட்டு ஆண்டறிக்கைக் குறிப்பில் இவ்வெழுத்துகள் கி.பி.10 நூற்றாண்டமைதியினதாக குறிக்கப் பட்டுள்ளது. இப்போது உள்ள சண்டேஸ்வரின் உருவம் கி.பி.12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம். மேலும் சண்டேஸ்வரர் ஆலயமும் கி.பி.12 ஆகவே இருக்கலாம். கல்வெட்டில் மன்னன், ஆட்சியாண்டு முதலியன குறிக்கப்படவில்லை. எனவே கல்வெட்டு குறிப்பிடும் சண்டேஸ்வரர் கற்றளி தற்போதுள்ளதாக இருத்தல் இயலாது.

தனி நந்தி:—

கருவறையின் வெளியே வடக்குச் சுற்றில் ஒரு நந்தி கிழக்குப்பக்கம் பார்த்த வண்ணம் தனித்து உள்ளது. அதன் முன்னர் ஒரு சதுரமான மேடை உள்ளது. இந்த நந்தி கி.பி.10 நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். சுமார் 1 அடி உயரம் உள்ளது.

சுந்தரர் ஆலயம்:—

வெளிச்சுற்றில் கோபுரத்தை அடுத்து, மேற்கு முகமாக அமைந்துள்ளது, இவ்வாலயம், சுந்தரர் தன்னிரு மனைவியர் களுடன் வீற்றிருக்கிறார். காலம் கி.பி.12 நூற்றாண்டாகும். சுந்தரர் கையில் தாளத்துடனும், தலையில் கொண்டை அமைப்புடனும் காணப்படுகின்றனர். அருகே பரவை, சங்கிலியார் நிற்கின்றனர். இச்சிலைகளும் கி.பி.12ம் நூற்றாண்டாகவே இருக்கும். இக்கோவிலைப் பிரித்துக் கட்டியுள்ளனர். பின்னாளில் சுந்தரருக்கு இவ்வூரிலன்றி கூகூரிலும் கோவில் உள்ளது. இராசராசன் காலத்தில் சித்திரைத் திருவிழாவும் நடந்துள்ளது. திருப்பதிகமும் ஓதப்பட்டது.[8]

மனோன்மனியம்மன் ஆலயம்:—

இக்கோயில் கருவறை, உள்மண்டபம், மகாமண்டபம், அலங்கார மண்டபம் ஆகியவற்றைக் கொண்டுவிலங்குகின்றது. கருவறையும் உள்மண்டபமும் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக இருக்கலாம். அதன் பின்னர் மகாமண்டபம் இணைக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து அலங்கார மண்டபம் விஜய நகர மன்னர்கள் காலத்தில் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு மகாமண்டபத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இக்கோவிலில் கல்வெட்டுகள் இல்லை.

அம்மன் நின்றநிலையில் சுமார் 4 அடி உயரம் உள்ளது. நான்கு கைகள் உள்ளன. வலது கைகளில் ஒன்றில் அக்கமாலையும், மற்றொன்று அபய ஹஸ்தத்திலும் உள்ளன. இடது கைகளில் பூக்குடை போன்ற அமைப்பு உள்ள சின்னமும், வரத ஹஸ்தமாகவும் உள்ளன. உள் மண்டபத்தில் துர்க்கை சிலை ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. இச்சிலை பல்லவர்கலைப் பாணியில் உள்ளது.

வரதராசப்பெருமாள் ஆலயம்:—

அரியும், சிவனும், ஒன்று என்பதற்கு ஏற்ப இங்கு சிவலாயத்திலலேயே விஷ்ணு ஆலயமும், உள்ளது. கல்வெட்டில் ''மேற்றளி விஷ்ணு'' என்ற குறிப்பு ஒன்று உள்ளது. ஆனால் பெருமாள் இருப்பதோ வடக்குப் பக்கம் ஆகும். சோபான அமைப்புடன் இருபக்கமும் ஏறிவர வசதியாகப் படிகள் உள்ளன. இது மிகச்சிறிய கோவில் ஆகும். கி.பி.14 ஆம் நூற்றாண்டில் இவ்வாலயம் கட்டப்பட்டு இருக்க வேண்டும். உள்ளிருக்கும் திருமால் தன் தேவியரான சீதேவி, பூதேவியுடன் சுமார் 6 அடி உயர அளவில் கம்பீரமாக நிற்கின்றார். திருமால் நான்கு கைகளுடையவராய் வலதுகையில் சக்கரமும், அபயஹஸ்தமும், இடது கைகளில் சங்கும், உருஹஸ்தமுடனும், ஆடை

முழங்கால்வரை தொங்க, தலையில் கிரீட மகுடம் தாங்கியுள்ளார். காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் சிவனும் விஷ்ணுவும் ஒரே ஆலயத்தில் இருப்பது இரண்டு ஊர்களில் மட்டுமே. அவைகளில் ஒன்று இவ்வூர் பிறிதொன்று சிதம்பரம் ஆகும். இதுபோல் வேறு கோவில்கள் இருப்பதாக தெரியவில்லை.

திருக்கோபுரம்:—

தமிழ்நாட்டில் கோயில் என்றாலே கோபுரங்கள் தான் கண்முன்னே தோன்றும். வேறு எந்நாட்டிலும் இல்லாத அளவுக்குத் தமிழகம் எங்கும் தெய்வீகச் சூழல் பரப்புவனவாக இக்கோபுரங்கள் விளங்குகின்றன. ''கோபுரம்'' என்னும் சொல்லே தமிழகத்தின் தனிச் சொல் என்பர்.[9] இக்கோயிற் கோபுரமும் கி.பி.13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு இருக்கலாம். இக்கோபுரமும் திருமண்டபமும் பின்னர் வீழ்ந்துவிட அண்ணமரசர் அவசரம் அலுவலகம் நரசிங்கராய உடையாரில் கி.பி.1480ல் திருப்பணிகள் செய்யப்பட்டதை கல்வெட்டுக் கூறுகிறது.[10] அவ்வாறு அவர்கள் திருப்பணி செய்தது கி.பி.14 ஆம் நூற்றாண்டில் ஆகும். மேலும் கோபுரத்தை யொட்டி நான்குபுறமும் உள்ள மதிலும் திருப்பணி செய்யப்பட்டது. என்று கல்வெட்டுக் கூறுகிறது. கோபுரத்தின் மேல் ஐந்து செப்புக்கலசங்கள் உள்ளன. சாலைவடிவில் அமைந்துள்ளது. ஐந்து நிலைமாடம் உடையது. துவாரபாலகர் ஐந்துநிலை மாடத்திலும் இருபுறமும் உள்ளனர். சுமார் 80 அடி உயரம் இருக்கும் .

இதனையடுத்து உள்ளே ஒரு பிள்ளையார் சிலையும் பலிபீடமும் துவஜஸ்தம்பமும் உள்ளன. துவஜஸ்தம்பத்தின் முன் நந்தி உள்ளது. சுமார் 4 அடி உயரம் கொண்ட இதற்குச் சிறு மண்டபம் உள்ளது. இந்நந்தி கி.பி. 10 நூற்றாண்டினது எனலாம்.

சுந்தரமூர்த்தி மடம்:—

சுந்தரர் இவ்வூரில் பிறந்தார், அவர் பிறந்தவுடனே நம்பப்படும் இடத்தில் 'சுந்தரர் மடம்' என்ற ஒன்றினைக் கட்டியுள்ளனர். அம்மடத்தில் சுந்தரர் சிலை வைத்து வழிபாடும் நடந்து வருகிறது. இது 20 ஆம் நூற்றாண்டின் பக்தி பெருக்கால் ஏற்பட்டதாகும்.

நரசிங்கமுனைரைய நாயனார் மடம் :

வரதராஜ பெருமாள் கோவிலின் சோபான மேடையில் ஒருகல்வெட்டு உள்ளது. அதில் நரசிம்ம முனையரைய நாயனார் மடம், நந்தி கேசுரன் நிறைந்த தேவரையனார் மடம் என்ற இரண்டு மடங்கள் குறிக்கப்படுகின்றன. ஆனால் தற்போது இம்மடங்கள் இல்லை. இக்கல்வெட்டு சமீபத்தில் ஒரு நூற்றாண்டுக்கு முன் வெட்டப்பட்டிருக்க வேண்டும்!''

உதிரிச் சிற்பங்கள் :

இக்கோவிலில் முருகன், பிள்ளையார், சிவலிங்கம், நடுகல் அமைப்பில் ஓர் வீரன் 'கலிநாரி, சண்டேஸ்வரர், ஆக ஆறு சிலைகள் உதிரியாக வழிபாடின்றி உள்ளன. இவற்றில் முருகன் சிலை முன்னரே குறிக்கப்பட்டது. பிள்ளையார் சிலை அமர்ந்த நிலையில உள்ளது. சுமார் 2 ½ அடி உயரம் இருக்கும். காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கூறலாம். சிவலிங்கம் ஆவுடையாருடன் சுமார் 3 அடி உயரத்தில் உள்ளது. நடுகல்லில் செதுக்கப்படும் வீரனின் அமைதியில் ஒரு சிலை வடிக்கப் பட்டுள்ளது. சுமார் 2 அடி உயரம் உள்ள இதில் எழுத்துகள் எதுவும் இல்லை. வீரனின் இடதுகையில் கேடயம் உள்ளது. வலது கையில் ஒரு ஆயுதத்தைப் பிடித்துள்ளான். இடுப்பில் கத்தி உறையுடன் உள்ளது. வலதுகாலை மண்டியிட்டு மடக்கியும் இடது காலை ஊன்றியும் உள்ளான். தலைமுடி தோள்வரை வீழ்ந்துள்ளது. காலில் வீரக்கழல் காணப்படுகிறது. இச்சிலையின் பின்புறம் துணின் கும்ப பஞ்சர அமைப்புக் காணப்படுகிறது. எனவே கோயிற் கட்டடப் பகுதியான கும்பபஞ்சரக் கல்லொன்றின் பின்புறம் இச்சிலை வடிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. இவ்வீரன் உருவம் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டுள்ளது. சண்டேஸ்வரர் சிலை கையில் மழுவுடன் காணப்படுகிறது. ராஜலீலா ஆசனத்தின் அமர்ந்துள்ளார்.

உதிரிச் சிற்பங்களுள் குறிப்பிடத்தக்க தொன்று உள்ளது. சுமார் 6 அடி உயிரமுள்ள, இச்சிற்பம் தற்போது வெளிப்பிரகார மேற்குச் சுவரினிடையே வைத்துக் கட்டப்பட்ட நிலையில் உள்ளது. இச் சிற்பம் இருபகுதிகளாக ஒரே கல்லில் உள்ளது. கீழுள்ள பகுதி சுமார் மூன்றடி உயரத்தில் யானையின் அமர்ந்த முன்புறத் தோற்றமாக அமைய, அதன் தலைக்கு மேலே பட்டை யான பகுதியும், அதற்கு மேல் கிரீவத்தோடமைந்த கூடு போன்ற பகுதியும் மீதமுள்ள மூன்றடியினை உடையதாக உள்ளது. இப்பட்டையான நடுப்பகுதியில் ''ஸ்ரீ கலி நாரை'' என்ற பெயர் (?) பல்லவ கிரந்த எழுத்தமைதியுடன் பொறிக்கப்பட்டுள்ளது.[12] அக்கூட்டமைப்பினுள், ஓர் உருவம், இடக்காலைக் குத்திட்டு, வலக்காலை மடக்கி அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. இவ்வுருவம் பல்லவ அரசனாக இருக்க வேண்டும் என்று எபி இண்டிகா 7ல் கருத்துரைக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இதனைக் கி.பி. 7ஆம் நூற்றாண்டு எனலாம். அண்மையில் வேலூர் மாவட்டம் கீழ் அரசம்பட்டில் கிடைத்துள்ள கற்படுக்கைக் கல்வெட்டு நந்தீ சுவரபர்மனது 4 வது ஆட்சி ஆண்டில் ''ஸ்ரீ கலிக் குறி அரசர் செய்வித்த பாழி'' ஒன்றினை குறிப்பது இங்கு நோக்கத்தக்கது (ஆவணம் 7 பக்கம் 16) இதேபோல் புதுக்கோட்டைப் பகுதியில் 'கலி மூர்க்கன்' என்ற பெயருடைய சிற்றரசர் காணப்படுவதும், கொங்குச் சோழரில் தொடக்ககால மன்னர் – இப்பெயரில் உள்ளமையும் சேரமன்னர் பிரிவில் ஒருவர் 'கலிகுலதிலக' என்று[13] சிறப்புப் பெயர் கொண்டுள்ளதும் நோக்கத் தக்கதாகும். மேலும் விருதாச்சலம்

வட்டம் இராசேந்திரபட்டணத்தில் ''ஸ்ரீ மகேந்திர'' சாரிபுத்ர'' ''ஸ்ரீ சாந்தமதி'' ஆகிய பெயர்கள் கி.பி. 7–8 ஆம் நூற்றாண்டு பல்லவ கிரந்த எழுத்தில் எழுதப்பட்டிருப்பதும்[14] இவ்வூர் திருநாவலூரி லிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ளதும் இங்கு நோக்கத் தக்கது. எனவே கி.பி. 7–8ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் மன்னர் களது பெயர்கள் இப்படி அங்கங்கு பொறிக்கப்படும் வழக்கு இருந்தமையும் தெரியவருகிறது. கலி நாரீஸ்வரம் என்ற பெயரில் இவ்வூரில் கோவில் இருந்தது என்பதை முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டின் மூலம் அறிகின்றோம். எஸ். ஆர். பாலசுப்பிர மணியன் அவர்களும் இதனைத் தனது நூலில் குறித்துள்ளார்.

***

தமிழிசைச் சுவடிகள் நூலகம்
- 4 SEP 2012
சென்னை-5.

2. ஈஸ்வரங்கள்

திருநாவலூரில் மூன்று சிவன் கோவில்களும் ஒரு விஷ்ணு கோவிலும் இருந்ததாகக் கல்வெட்டு மூலம் தெரிகிறது. அவை கலிநாரீஸ்வரம், திருவகத்திஸ்வரம், திருத்தொண்டீஸ்வரமான ராஜாதித்தீஸ்வரம், திருமேற்றளி மகாவிஷ்ணு கோவில் ஆகியன ஆகும். தற்போழுது உள்ளது, திருத்தொண்டீஸ்வரமான ராஜாதித்தீஸ்வரமே' அதுவும் பெயர் மாறிப்பக்த சனேஸ்வரம் என்று வழங்குகிறது.

கலிநாரீஸ்வரம் :

பல்லவர்கள் காலத்தில் இக்கோவில் கட்டப்பட்டு இருக்க வேண்டும் அக்கோவில் பின்னர் என்ன காரணத்தினாலோ அழிந்து விட்டது. ஆனால் அக்கோவிலிருந்த கற்சிலைகள் சில இன்னமும் அக்கோவில் உள்ளன. (இவை பற்றி முன்னர் குறிக்கப் பட்டுள்ளது).

முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலம் வரை அக் கோவிலிருந்திருக்க வேண்டும். அதன் பின்னர் அழிந்திருக்க கூடும். எபி. இண்டிகா தொகுதி – 7ல் கலிநாரி என்ற பல்லவ மன்னன் இக்கோவில் கட்டியிருக்கலாம் என்றும் அவன் உருவமே யானை மேல் அமர்ந்திருக்கும் உருவம் என்றும் கருத்துரைக்கப் பட்டுள்ளது. முதலாம் குலோத்துங்கனின் 21வது ஆட்சியாண்டில் இக்கோயிலுக்கு இருவர் இரு நொந்தா விளக்கெரிக்க 240 காசு தானமாகக் கொடுத்துள்ளனர். அக்கல்வெட்டில் ''திருகலி நாரீஸ்வரமுடையார் என்னும் பெரிய நாயனார்'' என்று இறைவன்

குறிக்கப்படுகின்றன.[15] அடுத்து இதே மன்னனின் 30 வது ஆட்சியாண்டில் கலிநாரீஸ்வர முடையாற்கு காட்டுப் பருக்கல் (இன்று பரிக்கல் என்று வழங்குகிறது) வேட்டைக்காறன் அத்தி மல்லன் என்பவன் (அரை) விளக்கெரிக்க 48 ஆடுகளைக் களமிருதூர்ப் பள்ளி பெருமான் தொண்டர் என்பவரைச் சாத்தி அளித்துள்ளான். அவ்வாடுகளை அவன் மன்றாடி ஆராமுதின் மகன் குணபரன் என்பவனிடம் அளிக்கின்றான்.[16]

''சுந்தரர் கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டு திருவெண்ணெய் நல்லூரில் பதிகம் பாட ஆரம்பித்தார். அதனையடுத்து திருநாவலூர் வந்து பதிகம் பாடினார் என்று பெரியபுராணம் கூறுகிறது.[17] எனவே, சுந்தரர் பாடிய காலத்தில் இக்கோயில் இருந்திருக்க வாய்ப்புள்ளது.

''கலிநாரை' என்றால் என்னபொருள் என்றும் விளங்க வில்லை. பல்லவ மன்னன் இராஜசிம்மனின் (400க்கும் மேற்பட்ட) பட்டப் பெயர்களிலும் இவ்விதம் பெயர் எதுவுமில்லை. யானைமேல் அமர்ந்திருப்பவன் மன்னன் எனக்கொண்டால் அவன் கலிநாரி என்ற மன்னன் ஆகலாம். ஆனால் ஊரில் உள்ளோர் இக்கற்சிலையை சுந்தரர் வெள்ளையானையின் மீதேறி கையிலைச் செல்கிறார் என்று கூறுகின்றனர்.

திருவகத்திஸ்வரம் :

முதலாம் பராந்தகனின் 29வது ஆட்சியாண்டு கல்வெட்டு களில் இவ்வாலயம் குறிக்கப்படுகிறது. ''எண்ணை நடையன், வண்ணக்கன் வடுகன்'' என்பவன் ராஜாதித்தாஸ்வர மஹாதேவர்க் கொன்றும் திருவகத்திஸ்வரத்து மஹா தேவர்க்கொன்றுமாக இரண்டு நொந்தாவிளக்கெரிக்க வகை செய்கின்றான்.[18] இதே ஆட்சியாண்டில் இன்னொரு கல்வெட்டில் திருநாவலூர் திருவகத்திஸ்வரத்து மஹா தேவர்க்குப் பன்மருந்திடுநசேநன்

என்பவன் நந்தா விளக்கெரிக்க ஆடு நூறு அளிக்கின்றான்.[19] எனவே திருவகத்திஸ்வரம் பராந்தகன் காலத்தில் இருந்திருக் கிறது என்று தெரிகிறது. ஆனால் இவன் பின்னர் ஆட்சி செய்த மன்னர்களின் கல்வெட்டுக்களில் இக்கோவில் பற்றி எவ்வித குறிப்பும் இல்லை. எனினும், இவ்வூர் மக்கள் இன்றும் கோவிலில் திருச்சுற்று மாளிகையில் உள்ள ஒரு சிவலிங்கத்தைக் காட்டி இது அகத்தியர் வழிபட்டது என்று கூறுகின்றனர். அகத் தீஸ்வரம் என்ற பெயரே இதற்கான காரணம் எனக் கொள்ளலாம். எனவே, அக்கோயில் இன்றில்லை எனினும், அகத்தீஸ்வரம் என்ற பெயரின் நினைவு இன்றும் மக்கள் நம்பிக்கையிலும் வழக்கிலும் உயிருடன் உள்ளது எனக் கருதலாம்.

திருமேற்றளி மஹாவிஷ்ணு ஆலயம் :

இராஜாதித்ததெவரின் கரணநாகன்குமாரடி திருவரங்கன் என்பவன் திருநாவலூர் திருமேற்றலி மஹாவிஷ்ணுவுக்கு நொந்தாவிளக்கெரிக்க ஆடு 100 அளித்துள்ளான். இச்செய்தி பராந்தகனின் 32 வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிக்கப் படுகிறது.[20] இப்பொழுது ஆலயத்தில் உள்ள விஷ்ணு கோவில் வடக்குப்பக்கத்தில் உள்ளது. மேலும் இக்கோவின் கட்டிட அமைப்பை நோக்கும்போது அது கி.பி. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக உள்ளது. மேற்றளி என்பதால் மேற்குப்பக்கம் என்பது தெளிவாகுகின்றது. திருநாவலூருக்கு மேற்கே 7 கி.மீ. தூரத்தில் விஷ்ணு ஆலயம் ஒன்று உள்ளது. (அவ்வூர் பரிக்கல் எனப் படுகிறது. கல்வெட்டுகளில் பருக்கல் என்று உள்ளது) எனவே இக்கல்வெட்டில் குறிக்கப்படும் விஷ்ணு பரிக்கல் ஆலயமாகவும் இருக்கலாம். தற்போது பரிக்கல் ஆலயத்தில் உள்ள விஷ்ணு திருமேனியில், திருநாவலூர் என்று எழுதியிருப்பதும் இங்கு சிந்திக்கத்தக்கது.

முதலாம் இராசேந்திர சோழனின் 12வது ஆட்சியாண்டு கல்வெட்டில் விளியூருடையான் ஆயப்பாடி குணநிதி என்பவன்

கண்காணிநாயகன் ஆவான். இவன் இத்திருத்தொண்டீஸ்வரத்து கோயிலில் உள்ள 16 சிறு ஆலயங்களைப் பழுதுபார்த்துள்ளான். அப்பதினாறு ஆலயங்களில் சில அக்கலீஸ்வர, அருண சலீஸ்வர, கட்டீஸ்வர, ஜோசீஸ்வர, கருமாணிக்கதேவதஸ்வர கலிநாரீஸ்வர போன்ற ஆலயங்கள் குறிக்கப்படுகின்றன.[21] இக்கல்வெட்டில் குறிக்கப்படும் சிறு ஆலயங்களில் பல இன்று இல்லை. இன்று இருப்பது ஒரே ஆலயம். அது ராஜாதித்தனால் கற்றளியாக்கப் பட்ட திருத்தொண்டீஸ்வரம் (பக்தசனேஸ்வரம்) கோவிலே ஆகும்.

★

3. பிற ஆலயங்கள்

இவ்வூரில் அங்காளம்மன் கோவில் மாரியம்மன், கோவில், சேரிப்பகுதியில் ஓர் அம்மன் கோவில், ஒரு முருகன் கோவில் என நான்கு கோவில்கள் பக்தசனேஸ்வரர் கோவிலைச் சுற்றி ஊரில் அமைந்துள்ளன.

அங்காளம்மன் கோவில்:—

செம்படவர்கள் கோவிலாக இருந்துவருகிறது. கற்றளி யாகும் பக்தசனேஸ்வரர் கோவிலிருந்த கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. சிறிய அளவில் அம்மன் அமர்ந்த நிலையில் உள்ளது. வலது கைகளில் உடுக்கையும் கத்தியும் இடது கைகளில் சூலமும் கபாலமும் ஏந்தியுள்ளது. சுகாசனநிலையில் உள்ளது. காலின் கீழ் மூன்று தலைகள் உள்ளன. கோரைப்பற்கள் உள்ளன. காலம் கி.பி.15 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம். செப்புத் திருமேனிகள் நான்கு உள்ளன. அங்காளம்மன், மாரியம்மன், கோபுரம் போன்ற அமைப்பில் சிவன் பார்வதி உருவங்கள் பாவாடைராயன் ஆகியனவாகும் அவை. இவையனைத்தும் கி.பி.19 ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவை.

மாரியம்மன் கோவில் (திரௌபதியம்மன்):—

கோவில் கிழக்குப்பக்கம் பார்த்தவண்ணம் உள்ளது. தற்காலத்தில் கட்டப் பட்டுள்ளது. பலிபீடத்தில் மாரியம்மனுக்கு காவல் தெய்வமாக ஓர் அரசன் இருப்பதாகக் கூறுகின்றனர். இக்கோவில் விழா மிகச் சிறப்பாக மக்களால் கொண்டாடப் படுகிறது.

முருகன் கோவில்:—

வயல்வெளியில் மிகச் சிறிய கோவிலாக அமைதியான சூழலில் விளங்குகிறது. இவ்வூர் சாமியார் ஒருவரின் சமாதியும் இக்கோவிலில் உள்ளது அவர் வழிபாடு செய்துவந்த திரு வுருவத்தை அவருக்குப் பின் அவர் வழியினர் வைத்து கோவிலாக்கி வணங்கி வருகின்றனர். கி.பி.20 ஆம் நூற்றாண்டின் பக்திக்கு அடையாளமாக உள்ளது இக்கோவில்.

4. செப்புத் திருமேனிகள்:—

செம்பில் உருவங்களைப் படைக்கும் கலை சங்க காலத்திலிருந்தே உள்ளது. தமிழ்நாட்டில் கோயில்களில் உள்ள செப்புத்திருமேனிகள் உலகப் புகழ் வாய்ந்தவையாகும்.[22] இவ்வூர் கோவிலில் பதினெட்டுக்கும் மேற்பட்ட செப்புத்திரு மேனிகள் உள்ளன.

பிக்ஷடானர்:—

இங்கு இருக்கும் திருமேனிகளில் இதுவே பழமை வாய்ந்தது, மிகவும் உயரமானதும் ஆகும். கி.பி.10ஆம் நூற்றாண்டுக் கலைப்பாணியில் இத்திருமேனி உள்ளது. சுமார் 4 1/2 அடி உயரம் உள்ளது. நான்கு கைகள்; ஜடாமண்டலமும், அதில் கபாலமும், காதில் மகர, பத்ரகுண்டலங்கள் அணிந்து நிற்கின்றார். வலது கைகளில் உடுக்கையும், சின் முத்திரையும், இடதுகைகளில் சிம்மகர்ண முத்திரையும், கபாலம் ஏந்தும் கையாகவும் உள்ளன. திறந்த மேனியராய் அரைதனில் நாகம் சுற்றியிருக்க, கால்களில் பாதரட்சைகள் அணிந்து உள்ளார். வயிற்றில் உதரபந்தனமும், மார்பில் பிரம்ம முடிச்சுடன் கூடிய உபவீதமும் அணிந்துள்ளார். நான்கு கைகளிலும் பாகுவளையம் உள்ளது. கழுத்தில் மாலையணி ஒன்று உள்ளது. சற்றே சிரித்த வண்ணம் கம்பீரமாக நடந்து செல்லும் தோற்றத்துடன் உள்ளது. இவ்வூர்க் கல்வெட்டு களில் கூத்தப்பெருமான் குறிக்கப் படுகிறதேயன்றி பிக்ஷடானர் குறிக்கப்படவில்லை.

நரசிங்க முனையரையர்:–

சுமார் 3 அடி உயரம் உள்ளது. பிக்ஷாடனர் திருமேனியின் பாணி இதிலும் காணப்படுகிறது. இத்திருமேனியினை மன்னர் நரசிங்கமுனையரையர் என்கின்றனர். ஆனால் இவ்வுரு வீணாதரர் (சிவன்) ஆகவும் இருக்கலாம். தலையில் கீரிடம் உள்ளது. கைகள் வீணையை மீட்டுவது போன்ற அமைப்பிலே உள்ளது. இத்திருமேனியின் காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டனிதாக கொள்ள இடமுண்டு. இடது காலில் மட்டும் கழல் உள்ளது. அரையில் தொடைவரை மெல்லிய ஆடை அதில் அணிகலன்கள் உள்ளது.

சுந்தரர் இருமனைவியருடன்:–

சுந்தரர் நின்ற நிலையில் உள்ளார். வலதுகை சின்முத்திரை காட்டியும் இடதுகை ஊன்றிய நிலையிலும் உள்ளது. தலையில் கொண்டை அமைப்பு உள்ளது. மார்பில் உபவீதமும் உள்ளது. காலம் கி.பி.12 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

பரவை, சங்கிலியின் திருமேனிகள் கி.பி.14 ஆம் நூற்றாண்டாகும்.

சம்பந்தர், அப்பர், சடையநாயனார், இசை ஞானியார் திருமேனிகள் உள்ளன. இவைகளின் பீடத்தில் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. இவை கி.பி.18ஆம் நூற்றாண்டில் செய்யப் பட்டவையாக இருக்கலாம். பரிக்கல் என்ற ஊரில் (திருநாவலூரிலிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ளது.) உள்ள நரசிம்மர் திருமேனியின் பீடத்தில் "திருநாவலூர்" என்று எழுதப் பட்டுள்ளது. இங்குள்ள வரதராசப் பெருமாள் கோவிலில் இருக்க வேண்டிய திருமேனியோ என எண்ண இடமுண்டு.

கூத்தப்பெருமான்:–

கல்வெட்டுகளில் குறிக்கப்படும் இப்பெருமான் திருவுருவம் இன்று இல்லை. பராந்தகன் கல்வெட்டில் இப்

பெருமானுக்குத் திருநாவலூர் வியாபாரி முருகன் விச்சியன் என்பவன் விளக்கெரிக்க ஆடுதானம் கொடுத்துள்ளான். இன்று இருக்கும் நடராசர் திருமேனியின் காலம் கி.பி.14 எனலாம்.

மற்றும் சோமாஸ்கந்தர், பிரதோஷ மூர்த்தி, சூலதேவர், தனிஅம்மன், பிள்ளையார், தன்னிரு தேவியுடன் முருகன் அதிகார நந்தி, சேரமான்பெருமான் நாயினார் போன்ற செப்புத்திருமேனி களும் உள்ளன. இவைகளின் காலம் கி.பி.15,16 ஆம் நூற்றாண டினதாகலாம்.

★

சுவடிகள் நூலகம் மற்றும்
4 SEP 2012
சென்னை-5

5. ஓவியமும் வாகனமும்

சங்க காலம் முதலே ஓவியக்கலை நம் நாட்டில் பெரு வளர்ச்சியடைந்திருந்தது என்பதைச் சங்கநூல் கொண்டு காணலாம். ஓவியர், ஓவம், கண்ணுள்வினைஞர், வட்டிகைச் செய்தி, புனையா ஓவியம், எழுது நிலைமண்டபம், சித்திரக்கூடம், சித்திரமாடம், ஓவிய மாக்கள், துகிலிகை இன்ன பிற சொல்லாட்சி யினைச் சங்க நூல்களில் காணலாம். தொல்காப்பியத்தில் நடுகல் வணக்கம் குறிக்கப்படுகிறது. சிற்பிதான் செதுக்கவிருக்கும் உருவத்தை வரைந்து பார்த்தபின்னே அவ்வோவியத்தைக் கொண்டு கல்லில் செதுக்குவான். ஓவச்செய்தியின் ஒன்று நினைந்து ஏற்றி என்று அகநானூறு ஓவிய உவமையைக் கூறும். நற்றினை, பரிபாடலில் ஓவியம் பற்றிய செய்திகள் உள்ளன.[23]

ஓவியங்கள்:—

திருத்தொண்டீஸ்வரம் கோயிலின் முதல் சுற்றில் முன் வாயில் பக்கம் உள்ள மேல்கூரையில் (விதானத்தில்) ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அவை கி.பி.18ஆம் நூற்றாண்டின் வண்ண ஓவியங்களாக இருக்கலாம். இன்று மிகவும் பழுதடைந்து அனைத்தும் உதிர்ந்துவிட்ட நிலையில் ஆங்காங்கே திட்டுத் திட்டாக உள்ளது. ஒரு உருவம் கூட முழுமையான நிலையில் இல்லை. காணப்படும் சில பகுதிகளைக் கொண்டு ஓவியச் செய்தியை உய்த்துணர வேண்டியுள்ளது. நீண்ட செவ்வக வடிவில் 4X10 அடி அளவில் பகுதி பகுதியாக ஓவியம் வரையப் பட்டுள்ளது. மகா மண்டபத்திலும் ஓவியங்கள் இருந்ததற்கான அடையாளம் உள்ளது.

ஓவியம்காட்டும் சில காட்சிகள்:—

சிவன் தன்கையில் உமையைப் பற்றியிருக்கின்றார் விஷ்ணு பக்கத்தே நடந்து செல்வது போல் உள்ளது. இக்காட்சியின்

பின்புலம் கொண்டு நோக்கும் போது சிவன் பார்வதி திருக்கலியாணமாக இருக்கலாம். அடுத்து மீன் உருவங்கள் நிறையப் பொறிக்கப் பட்டுள்ளன. பசுமாடு ஒன்று துள்ளி மிரண்டு ஓடுவதுபோல் ஓர் ஓவியம், பிரம்மா மூன்று தலைகளுடன் உள்ள வண்ண ஓவியம், விஷ்ணு தனது இருகைகளையும் வாழ்த்துவது போல் உயரே தூக்கிய நிலையில் ஓர் ஓவியம் உள்ளது. பெண்கள் கட்டம் போட்ட புடைவையினை அணிந்துள்ளனர். நிறைய அணிகள் அணிந்துள்ளனர். விரல்கள் நீண்டுள்ளன. கண்களில் உயிர்த்துடிப்பு இல்லை. மேலும் உருவத்திற்குப் பொருந்தா வண்ணம் விழித்த நிலையில் கண்கள் வரையப் பட்டுள்ளன. சிலபகுதிகள் கட்டங்கள் போடப்பட்டும், பூக்கள் வரையப்பட்டும் உள்ளன. ஆனால் அவை ஒரு கருத்துடனே வரையப்பட்டவை யாதல் வேண்டும். இன்று பழுதடைந்தமையால் நம்மாள் புரிந்து கொள்ள முடியவில்லை.

வாகனங்கள்:—

இறைவர் வீதியுலா வருவதற்காகச் சில வாகனங்கள் இக்கோயிலில் உள்ளன. குதிரை வாகனம், யானை வாகனம், அசுரன் (முயலகன்) கைகளை மேல்தூக்கிய நிலையில் உள்ளவாகனம் போன்ற பல இருந்ததாகவும். காலமாற்றத்தில் இவைகளில் சில அழிந்தன என்றும், இன்று ரிஷப வாகனம் மட்டுமே நல்லநிலையில் உள்ளது. மரத்தால் ஆன இவ்வாகனம் சுமார் 8 அடி உயரம் உடையது. மரவிளக்கு ஒன்றும் இருக்கின்றது.

தேர்:—

மரத்தேர் ஒன்று உள்ளது. 1964 வரை இத்தேர் ஓடியதாகவும் அதன் பிறகு ஓடவில்லை என்றும் இவ்வூர் மக்கள் கூறுகின்றனர். அத்தேரில் இறைவனை ஏற்றி இறக்க ஒருமண்டபமும் உள்ளது. அம்மண்டபத்தில் நான்கு சிங்க முகத்தூண்கள் உள்ளன. மரத்தேரில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைய உள்ளன. நடன மாதர்கள் சிற்பமும், சில பாலியல் காட்சிகளும் செதுக்கப் பட்டுள்ளன. தேர் சுமார் 20 அடி உயரம் உள்ளது.

***

6. திருவிழாக்கள்

என்றும் விழாக்கோலம் பூண்டு நின்ற இக்கோயிலில் இன்று பெயருக்கு அவ்விழாக்களில் சில நடந்து வருகின்றன.

“ இலகிடுதுவார பூசனை பிரிங்தெண்ணெய் மாவோடிர
சவர்க்கங்
கலவை கௌவியம் பஞ்சாமிர்த நெய் பாறயிர் மதுக்
கருப் பிரதங்தீம்
பலவர்க்க மிளநீர் மற்றிவை யளவை சருக்கரை முதலாம்
பலவும்
விலமணி தங்தோத கமர்ச்சித்து வலம்புரிநீர்
விருப்பினாட்டி”

என்று இராசப்பக் கவிராயர் திருநாவலூர் புராணத்தில் அபிடேகங்கள் என்னென்ன நடந்தன என்கிறார்.

விழாக்கள்:—

சித்திரை தொடங்கி பங்குனி வரை தொடர்ந்து பலவிழாக்கள் நடக்கின்றன.

01. சித்திரை	–	பிரம்மோற்சவம்.
02. சித்திரை	–	அப்பர்சாமி குருபூசை
03. ஆடி	–	ஆடிசுவாதி – சுந்தரர் குருபூசை
04. ஆவணி	–	சுந்தரர் அவதார உற்சவம்
05. புரட்டாசி	–	நவராத்திரி
06. கார்த்திகை	–	தீபம்
07. மார்கழி	–	நடராசர் தரிசனம்

08. மாசி		சிவன் ராத்திரி
09. பங்குனி	–	சூரிய பூசை.

ஆடிச் சுவாதி விழா:—

“ வயது பதினெட்டுலிரு மங்கையை மணந்தும்
பயனுதவுமீசர் பதிகம் பலவுரைத்து
மியலு ணருமாருரணி தய மகிஷ்வாய் வெண்
கய மிசையுகங்தொளி செய் கயிலை வரையுற்றான்”

வெள்ளையானையில் கயிலை அடைந்த சுந்தரர் விழாவே இங்குச் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. ஆவணி மாதத்தில் சுந்தரர் அவதார விழாவினை அனைத்து குருக்களும் (பக்கத்து ஊர்களில் உள்ள குருக்கள்) சேர்ந்து நடத்துகின்றனர்.

“ .... நாவல் வளம்பதி வாழரனைப்
போற்றும்
பத்தி யொழுக்கம் பொறுமை பண்பறிவு செரிந்துள்ள
பாரத்துவாசன்
அத்திரியங்கிரகசிய கௌசிக கோத்திரத்தாதி சைவர்
தமிமிற்
சுத்தமுறு கௌசிக கோத்திர வாருரப் பெயரோன் சுருதி
யாய்ங்தோன்”

சுந்தரர் கௌசிக கோத்திரம் என்றும் ஆதிசைவர் மரபினர் என்றும் இராசப்பக் கவிராயர் கூறுகிறார். எனவே ஆதிசைவர் பிரிவினைச் சேர்ந்த அனைத்துக் குருக்களும் தம்குலத்து உதித்த சுந்தரர் விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

★

1. தமிழக கோயிற் கலைகள் டாக்டர். ஆர். நாகசாமி.பக் – 28
2. Ep. Ind.vol.VII page 133.81/3
3. Early chola Architecture and sculptune Douglas Barrett - 57-58
4. Ep. Ind.vol.VII page 132 -137.965/7
5. பிற்கால சோழர் வரலாறு பண்டாரத்தார். பக் –34.
6. Ep. Ind.vol.VII page 132.
7. 241/1939-40
8. 299/1917& 275/1917
9. தமிழக கோயிற்கலைகள் – தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை 1976 பக்.72
10. 249&250 / 1939-40
11. 269/1939-40
12. Vol.VII 1006/7, Ep. Ind. vol. VII p.132.
    12அ. ஆவணம் 7 பக்கம் , 16.
13. யார் இந்த கலிமூர்க்கன்? திரு நடன காசிநாதன் கட்டுரை. கோவை வரலாற்றுக் கருத்தரங்கு 1976; 'களப்பிரர்' – நடன காசிநாதன் தொல்லியல் துறை வெளியீடு.
14. 139 -141 / 1940-41 & sp. Ind. vol VII page-132
15. 268 / 1939 - 40
16. 995 / 7
17. பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம் பாடல் 7:8
18. 954 /7
19. 979 /7
20. 978 / 7
21. 228 / 1939 –40 - பக். 239
22. தமிழகக் கோயிற்கலைகள், பக்.93, தமிழ்நாடு தொல்லியல் துறை 1976
23. நற்றிணை, பாடல் : 118, 146,177,182,268; பரிபாடல் : 21 வரி 27.28

T. 7334.

III. கல்வெட்டுச் செய்திகள்

1. நாட்டுப்பிரிவுகள்

திருநாவலூர் பக்தஜனேஸ்வரர் கோயிலுள்ள கல் வெட்டுகள் அக்காலத்தில் இவ்வூர் அமைந்திருந்த நாடு, வளநாடு, பற்று ஆகிய நிருவாகப்பிரிவுகளைப் பற்றியும் பிற ஊர்களைப் பற்றிய செய்திகளையும் தருகின்றன. பல்லவர், சோழர் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் வரி விதிப்பு முறையை முன்னிட்டுப் பேரரசு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. அவை நாடு அல்லது சுற்றம் எனப்பட்டது. நாடு எனும் வருவாய்த் துறைப்பிரிவு பல ஊர்களை உள்ளடக்கியதாக இருந்தது.[1] முதலாம் இராசராசசோழன் தனது 17–வது ஆட்சி யாண்டில் (கி.பி. 1001) சோழப் பேரரசு முழுவதையும் நில அளவை செய்து நாட்டைப் பல மண்டலங்காளகவும், வளநாடு களாகவும் பிரித்து ஒவ்வொன்றுக்கும் தனது பட்டப்பெயரைச் சூட்டினார்.[2]

முனைப்பாடி நாடு

தமிழகத்தில் வாணர், மலையமான்கள் (மலையர்), மழவர், இருங்கோவேள் போன்ற சிற்றரசு மரபினர் ஆட்சிபுரிந்த பகுதிகள் அவ்வக்குடும்பங்களின் பெயரால் வாணகோப்பாடி, மிலாடு, மழபாடி, இருங்கோளப்பாடி என அழைக்கப்பட்டன. இது போன்றே திருநாவலூர் அமைந்துள்ள பகுதி முனையர் அல்லது முனையதரையார் எனும் பட்டங்கொண்ட சிற்றரசு மரபினரால் ஆளப் பட்டதால் முனைப்பாடி அல்லது திருமுனைப்பாடி நாடு என அழைக்கப்பட்டது.[3]

சுந்தரரின் வளர்ப்புத் தந்தையான நரசிங்க முனையரையர் எனும் சிற்றரசர் இப்பகுதியினை ஆண்டதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது.

முனைப்பாடி நாட்டில் மேலூர் நாடு, ஆமூர் நாடடு, கீழாமூர் நாடு, குன்றத்தூர் நாடு, பெருகனூர் நாடு போன்ற சிறுநாட்டுப் பிரிவுகள் இருந்தன.[4]

முதலாம் பராந்தசோழனின் (கி.பி. 907–955) 16 – ஆவது ஆண்டு (கி.பி. 923) முதல், முதலாம் இராசேந்திரசோழரின் (கி.பி. 1012–1044) மூன்றாவது ஆட்சியாண்டுவரை (கி.பி. 1015) எழுதப்பெற்றுள்ள கல்வெட்டுகளில் இவ்வூர் 'திரு முனைப்பாடி மேலூர் நாட்டுத் திருநாவலூர்' எனவும் 'திருமுனைப் பாடித் திருநாவலூர்' எனவும், 'மேலூர் நாட்டுத் திருநாவலூர்' எனவும் குறிப்பிடப்படுகிறது.[5]

முதலாம் இராசேந்திர சோழனின் மூன்றாம் ஆண்டிலிருந்து இப்பகுதி 'செயங்கொண்டசோழ மண்டலத்துத் திருமுனைப்பாடி மேலூர் நாட்டுத்திருநாவலூர்' என கல்வெட்டுகளில் குறிக்கப் படுகிறது.[6] செயங்கொண்ட சோழன் என்பது முதலாம் இராசராசனின் பட்டப் பெயராகும். தென்னார்க்காடு, வடார்க்காடு, செங்கற்பட்டு உள்ளிட்ட தொண்டைமண்டலப் பகுதிக்கு செயங்கொண்ட சோழ மண்டலம் என்ற பெயர் முதலாம் இராசராசனால் வைக்கப்பட்டது என அறிகிறோம்.[7]

திருமுனைப்பாடிப் பகுதி வீரராசேந்திர சோழனின் காலத்தி லிருந்து முதலாம் குலோத்துங்க சோழனின் 31–ஆம் ஆட்சி யாண்டுவரை 'இராசேந்திர சோழ வளநாடு' என்ற வாளநாட்டுப் பிரிவின் கீழ் இருந்துள்ளது.[8] இம்மன்னனின் 32–ஆம் ஆட்சியாண்டில் இப்பெயர் 'கங்கை கொண்ட சோழ வளநாடு' எனப்பெயர் மாற்றம் அடைந்துள்ளது.[9] இவ்வளநாட்டின் பெயர் இரண்டாம் குலோத்துங்க சோழனின் 3–ஆம் ஆட்சியாண்டு முதல் (கி.பி. 1136) 'இராஜராஜவளநாடு' என மீண்டும் பெயர் மாற்றம் அடைந்துள்ளது.[10] இப்பெயர் மூன்றாம் இராசராச சோழனின் 19–ஆம் ஆட்சியாண்டுவரை நடைமுறையிலிருந் துள்ளது.[11] நாடுவகை செய்யும் அதிகாரி என்போர் நாட்டு நிருவாகத்தை நடத்தினர் என்ற முதலாம் இராசராசனின் கல்வெட்டால் அறியமுடிகிறது.[11அ]

நடுவில் மண்டலம்

பாண்டியரின் ஆட்சிக்காலத்தில் திருநாவலூர் அமைந் துள்ள பகுதி 'நடுவில் மண்டலம்' (நடுநாடு) என அழைக்கப் பட்டதை கி.பி. 1252, 1255 மற்றும் 1258 ஆகிய ஆண்டுகளில் எழுதப்பெற்ற இரண்டாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியனின் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.[12]

உசாவடி – பற்று

விசயநகர மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழகம் 'உசாவடி எனும் பெரிய நிருவாகப் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டன. அவை படைவீட்டு உசாவடி, வழுதிலம்பட்டு உசாவடி, திருச்சிராப்பள்ளி உசாவடி, திருவாரூர் உசாவடி ஆகும்.

இவற்றில் திருநாவலூர்ப் பகுதி வழுதிலம்பட்டு உசாவடி என்ற நிருவாகப்பிரிவின் கீழ் இருந்தது என விசயநகர மன்னன் மல்லிகார்ச்சுனரயரின் (கி.பி. 1470) கல்வெட்டால் அறிகிறோம்.[14] இவ்வுசாவடியின் கீழ் இவ்வூர் 'கருமஊர்ப்பற்று' என்ற வருவாய்த்துறைப்பிரிவின் கீழ் இருந்துள்ளது.[15] கி.பி. 1535 முதல் எழுதப்பெற்றுள்ள விசயநகர மன்னர்களின் கல்வெட்டு களில் இவ்வூர் 'திருநாவலூர் சீர்மை' என்ற வருவாய்த்துறைப் பிரிவின் தலைமையிடமாக விளங்கியது என அறியமுடிகிறது.[16]

திருநாவலூர் கல்வெட்டுகள் மூலம் இவ்வூர் சோழர், பாண்டியர், விசயநகர மன்னர் ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் எந்தெந்த நாடு, வளநாடு, பற்று, சீர்மை, உசாவடி உள்ளிட்ட வருவாய்த்துறை நிருவாகப்பிரிவின் கீழ் அமைந்திருந்தது என அறிகிறோம்.

அடிக்குறிப்புகள்

1. தி.வை. சதாசிவப்பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974, பக். 472 – 474.
2. மேலது, பக். 472.
3. Y. Subbarayalu, the political geography of the Chola country, Department of Archaeology, 1974, Madras, Page 76.
4. மேலது, பக். 78
5. க.ஆ.அ. எண். 380–1902, தெ.இ.க.ம.7, 1010, 369–1902, 7/999.
6. க.ஆ.அ.எண். 360/1902
7. தி.வை. சதாசிவபண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு பக். 472.
8. க.ஆ.அ. எண். 371/1902, 260/1939–40
9. க.ஆ.அ. எண். 233/1939–40, 350, 361/1902.
10. க.ஆ.அ. எண். 233/1939–40, 350, 361 – 1902
11. க.ஆ.அ. எண். 257/1939 – 40 அ, மேலது.
12. க.ஆ.அ. எண். 252, 253, 254/1939 – 40
13. கோ. தங்கவேல், இல. தியாகராசன், சம்புவராயர் வரலாறு, சென்னை–1990, பக். 104.
14. க.ஆ. அ. எண். 250 / 1939 – 40
15. மேலது, 249, 250/1939 – 40
16. மேலது, 266, 273/ 1939 – 40

"திருமனைப்பாடி நாட்டில் திருநாவலூர்"



2. இராஜாதித்தன்:—

கி.பி. 907 ல் பராந்தக சோழன் தஞ்சை மாநகரில் சோழச் சக்கரவர்த்தியாக முடி சூட்டப்பெற்றான். இவன் ஆட்சியேறிய போது சோழப் பேரரசு வடக்கேயுள்ள திருக்காளத்திவரையில் (தொண்டை மண்டலம்) பரவியிருந்தது. மேலும் கொங்குமண்டல மும் இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை அங்குக் காணப்படும் இவன் கல்வெட்டுகளால் உணரமுடிகிறது.[1] இவன் நாற்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளான்.[2] இவனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ''மதுரைகொண்ட கோப்பரகேசரிவர்மன்''[3]என்று தன்னைக் கூறுகிறான். எனவே 910ல் மதுரையைக் கைப்பற்றியிருத்தல் வேண்டும். இவனது ஆட்சியில் 37ஆம் ஆண்டுக்கல்வெட்டுகள் இவனை ''மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பர கேசரி வர்மன்''[4] என்று குறிப்பிடுகின்றன. ஆதலால் ஈழநாட்டுப்போர் கி.பி.944க்கு முன் நடந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஆனால் 16ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று இவனை மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன் என்று குறிப்பிடுகிறது. இவ்வாறு குறிப்பிடுவது இவன் வெள்ளூர்ப்போரில் ஈழ நாட்டுப் படையையும் வென்று புறங்காட்டியோடச் செய்தமைபற்றி அவ்வாறு குறிப்பிட்டது போலும் என்கிறார் பண்டாரத்தார்.[5]

திருநாவலூரில் மொத்தம் 105 கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் 31 கல்வெட்டுகள் பராந்தகன் கல்வெட்டுகள் ஆகும்.[6] அவனின் 16ஆம் ஆட்சி ஆண்டு தொடங்கி 39ஆம் ஆட்சி யாண்டு வரை இவை அமைகின்றன. மேலும் இவன் மூத்தமகன்

இவ்வூரில் படையோடு தங்கியுள்ளான். அக்காலத்தில் இவ் வூர்க்கோவில் கற்றளி ஆக்கப் பட்டது. எனவே பராந்தகனின் வரலாறும், இராஜாதித்தவன் வரலாறும் இங்கு விவரிக்கப் படுகிறது.

பராந்தகனின் குடும்பம்:—

இவனுக்குப் பலமனைவியர் இருந்தனர் என்பது கல்வெட்டுகள் மூலம் தெரிகிறது சுமார் 8 மனைவிகளின் பெயர்கள் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றன. அவர்களுள் கோக் கிழானடியே பட்டத்தரசியாக விளங்கினாள். இவள் சேரமன்னன் மகள் என்று உதயேந்திரச் செப்பேடு கூறும்[7]. இப்பட்டத்தரசிக்குப் பிறந்தவனே இராஜாதித்தன். பராந்தகனுக்கு நான்கு புதல்வரும் இரு மகளிரும் இருந்தனர். இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன்[8]. உத்தமசீலி[9] என்ற நால்வரும் புதல்வர் ஆவர் வீரமாதேவி, அனுபமா என்ற இருவரும் புதல்வியர் ஆவர். பராந்தகனின் மகன் அரிகுலகேசரியின் மனைவி பூதிஆதித்த பிடாரியால் உறுமூர்க்கோயில் கற்றளியாக்கப்பட்டது என்று அங்குள்ள கல்வெட்டு கூறுகிறது.[10]

பராந்தகனின் பக்திப்பெருக்கு:—

பராந்தகன், தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்து அதனைப் பொன்னம்பலமாக்கினான். இதனை ஆனைமங்கலச் செப்பேட்டிலும் திருவாலங்காட்டுச் செப்பேட்டிலும் காணலாம்[11].

'' வெங்கோல் வேந்தன் தென்னனாகும் ஈழமும் கொண்ட திறற்
செங்கோற் சோழன் கோழிவேந்தன் செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடும் அணிதில்லையம் பலம்''[12]

என்று கண்டராதித்தன் தன் தந்தையினைப் புகழ்வான்

''கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றங்
காதலாற் பொன் வேந்த காவலனும்''

என்று கவி ஒட்டக்கூத்தனும் கூறுவான்[13].

இவனின் ஆட்சிக்காலத்தில் திருவிடைமருதூர்.[14] திருவாவடுதுறை, திருச்செந்துறை, உறுமூர், திருநாவலூர் ஆகிய கோயில்கள் கற்றளியாக்கப் பட்டன.

சோழப் பெருமானடிகள்:–

பராந்தகனுக்கும் சிறப்பு பெயர்கள் பல உள்ளன. அவை வீரநாராயணன், வீரசோழன், பண்டிதவற்சலன், குஞ்சரமல்லன், சங்கிராமராகவன், இருமடிசோழன், சோழப்பெருமானடிகள் ஆகியனவாகும். சோழப் பெருமானடிகள் என்ற பட்டப்பெயர் திருநாவலூர் கல்வெட்டில் ஓரிடத்தில் குறிக்கப்படுகிறது.[15] பராந்தகனின் தந்தை ஆதித்தனையும் சோழப்பெருமானடிகள் என்று அழைத்துள்ளனர். ''சோழபெருமானடிகள் மகளுர் ஆதித்தன் கன்னரவேன்'' என்று ஆதிதஹன் கல்வெட்டு குறிக்கும்[16]. திருவொற்றியூர்க் கல்வெட்டும் பராந்தகனைச் சோழப் பெருமானடிகள் என்று குறிப்பிடும்.

கோதண்டராமர்:– (தாத்தாபெயர் பேரனுக்கு)

பராந்தகனின் மூத்தமகனான இராஜாதித்தன் கோதண்ட ராமன் எனப்படுவான். திருவொற்றியூர்க் கல்வெட்டு.

''..........சோழப் பெருமாநடிகள் பரஸெரிவர்மர்
திருமகனார் முத்த பிள்ளையார் ஸ்ரீ கொதண்டராமர்''[17]

என்றும் குடுமியாமலைக் கல்வெட்டு, பிள்ளையார் கோதண்ட ராமர் என்றும் இராஜாதித்தனைக் குறிக்கிறது[18]. திருநாவலூரில் உள்ள ஒரு கல்வெட்டிலும் ''சோழபெருமானடிகள் திருமகனார் கோதண்டராமர்'' என்று உள்ளது[19]. எனவே, கோதண்டராமர் என்ற பெயரும் இராஜாதித்தனுக்கு உ ண்டு என்பது தெரிகிறது.

ஆதித்தனுக்கும் கோதண்டராமர் என்ற பெயர் உண்டு என்று கன்னியாகுமரிக் கல்வெட்டு கூறும்.[20] பராந்த சோழன் தன் தந்தையை நினைவு கூர்தற்பொருட்டுப் பள்ளிப்படையாக ஒரு கோயில் எடுத்தான். தொண்டமான் பேராற்றூரில் (இன்று தொண்டை மானாடு என்று வழங்குகிறது). உள்ள அக்கோவில் ஆதித்தேசுவரம் என்றும் கோதண்டராமேசுவரம் என்று அந் நாளில் வழங்கியுள்ளது என்று கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.[21]

பராந்தகன் தன் தந்தையின் பெயரான கோதண்டராமர் என்ற பெயரினை தனது மூத்த மகனுக்குச் சூட்டினான். தாத்தா பெயரினைப் பேரனுக்கு வைத்தல் என்ற மரபுப்படி வைத்தான் எனலாம்.

பகை வளர்ந்த விதம் :

ஆதித்தன் காலத்தில் சோழரும் இராஷ்டிரகூடரும் நெருங்கிய உறவினராக இருந்தனர். இரண்டாம் கிருஷ்ணதேவன் தன் மகள் இளங்கோப்பிச்சியை ஆதித்தனுக்கு மணம் செய்துகொடுத்தான். பராந்தகனும் தன் மகள் வீரமாதேவியை இராஷ்டிரகூட இளவரசன் நான்காம் கோவிந்தனுக்கு மணம் செய்து கொடுத் தான்.[22] இவன் குந்தள நாட்டில் முடிசூடி ஆட்சி செய்த காலத்தில் இவனின் ஆட்சியில் மக்கள் வெறுப்புற்றனர். இவனது ஆட்சியினைக் குறுநிலமன்னர்களும், அரசு அதிகாரிகளும் வெறுத்து அவன்பால் அன்பில்லாதவராய் இருந்தனர் இத் தருணத்தில் கீழைச் சளுக்கிய மன்னர்களாகிய யுத்தமல்லனுக்கும், இரண்டாம் வீமனுக்கும் பகை உண்டாகியது. நான்காம் கோவிந்தன் கி.பி. 934ல் யுத்தமல்லனுக்குப் போரில் உதவிபுரியச் சென்று இரண்டாம் வீமனிடம் தோற்றான்.[23] அப்போது அச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு மூன்றாம் கிருஷ்ணதேவன் தன் தந்தையை இராஷ்டிரகூட அரசனாக முடிசூட்டினான். சிறிது காலமே மூன்றாம் அமோகவர்ஷன் ஆட்சி செய்தான். கி.பி. 939ல் இறந்து விட்டான். ஆட்சியினை இழந்த நான்காம் கோவிந்தன் தன் மனைவியுடன் மாதுலன் பராந்தகனிடம் வந்து

தஞ்சையில் தங்கியிருந்தான். அமோகவர்ஷன் இறந்தவுடன் அதுவே தக்கதருணம் என்று கருதி பராந்தகன் துணைகொண்டு இரட்ட மண்டலத்தை நோக்கி பெரும படையுடன் தன்நாட்டை மீண்டும் பிடிக்கக் கருதி கோவிந்தன் சென்றான். மூன்றாம் கிருஷ்ணதேவனின் தமக்கையின் கணவனும் கங்கநாட்டு வேந்தனுமாகிய பூதுகன் என்பான் கிருஷ்ணதேவனுக்கு உதவி புரிய வந்தான். கி.பி. 940ன் ஆரம்பத்தில் போர் நடைபெற்றது. கோவிந்தன் தோற்கவே, மூன்றாம் கிருஷ்ணதேவன் வெற்றி பெற்று கி.பி. 968 வரை இரட்ட மண்டலத்தை ஆட்சி செய்து வந்தான். இதனை அந்நாட்டில் காணப்படும் செப்பேடுகள் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது.[24] இந்நிகழ்ச்சிகளால் பராந்தகனுக்குப் பகைவர்கள் மிகுந்தனர். இதனால் சோழ இராச்சியத்தின் வடக்குப்பகுதியில் எல்லைப் பாதுகாப்பில் தேவை மிகுந்தது.

எல்லைக் காவலில் மகன்கள் :

திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூரில் தங்கிச் சோழ இராச்சியத்தின் வடபகுதியைப் பெரும்படையுடன் தன் மூத்த மகன் இராஜாதித்தன் கண்காணித்து வரும்படி ஏற்பாடு செய்தான் பராந்தகன். இராஜாதித்தன் படைத்தலைவனான சேரநாட்டு நந்திக்கரைப் புத்தூரின் ஆகிய வெள்ளன் குமரன் என்பவன் பெண்ணையாற்றங்கரையில் உள்ள முடியூரில் (இன்று கிராமம் என்றழைக்கப்படுகிறது) தன் படையுடன் கி.பி. 936ல் தங்கியிருந்தான்.[25] இராஜாதித்தன் தம்பியான அரிகுலகேசரியும் பெரும்படையுடன் தங்கியிருந்தான் என்று திருக்கோவலூர்க் கல்வெட்டுகள் கூறுகின்றன.[26] வடபுலத்திலிருந்து பகைவர்கள் படையெடுத்து வரக்கூடும் என்றுணர்ந்து முன்னேற்பாடாகத்தன் மகன்களைக் கொண்டு வட எல்லையைக் காத்துவந்தான் பராந்தகன்.

கற்றளியாக்கல் :

திருநாவலூரில் இராசாதித்தன் தங்கியிருந்த காலத்தில் பராந்தகனின் 28வது ஆட்சியாண்டில் அதாவது கி.பி. 935ல் திருத்தொண்டிஸ்வரத்தினை கற்றிளியாக்கினான். கற்றளியாக்கிய தனை இவ்வூர்க் கல்வெட்டுத் ''திருமுனைப்பாடித் திருநாவலூர் திருத்தொண்டிஸ்வரம் திருகற்றளி செய்வித்த இராஜாதித்த தேவர்'' என்று குறிப்பிடுகிறது.[27] இவ்வூரில் பராந்தகனின் 16வது ஆட்சியாண்டு முதல் கல்வெட்டுகள் உள்ளன. 28வது ஆட்சியாண்டு வரை உள்ள கல்வெட்டுகள் இக்கோவில் இறைவனை திருத்தொண்டீஸ்வர மஹாதேவர் என்றே குறிப்பிடுகின்றன. அதன்பின்னர் வரும் கல்வெட்டுகளில் திருத்தொண்டீஸ்வரமான ராஜாத்தீஸ்வரத்து மஹாதேவர் என்று குறிப்பிடுகின்றன. 29வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் கற்றளியாக்கும் பணிசெய்த கல்தச்சனின் பெயர் உள்ளது. ஆனால் அப்பெயர் முழுவதுமாக கிடைக்கவில்லை கல்வெட்டு சிதைந்துள்ளது.

> **'' இச்சாதநஞ் செதானிக் கற்றளி செய்த தலைச்சங்... இவையென்னெழுத்து''[28]**

என்று உள்ளது.

இதே போன்று படைத்தலைவன் வெள்ளன் குமரனும் முடியூரில் ஆற்றுத்தளி என்ற சிவன் கோவிலைக் கி.பி. 943ல் எடுப்பித்தான்.[29]

இராஜாதித்தன் படை வீரர்களுடன் திருநாவலூரில் தங்கியிருந்தபோது அவனின் படை வீரர்கள் பெரும்பாலோர் அக்கோவிலுக்குப் பல நிவந்தகள் அளித்துள்ளனர். படைவீரர்கள் பெரும்பாலும் மலையாளன் என்ற பெயர்களுடன் குறிக்கப்படுகின்றனர். எனவே, மலையாள நாட்டைச் சேர்ந்த வீரர்கள் படையில் அதிகம் இருந்தனர் என்பது தெரிகிறது.

இராஜாதித்தனின் குதிரைச் சேவகன் :

கடம்பூர் முர்க்கண்டிரதர் என்பவன் குதிரைச்சேவகனாக இருந்திருக்கின்றான். இவன் இவ்வூர்க் கோவிலுக்கு நொந்தா விளக்கெரிக்க ஆடு 100 கொடுத்துள்ளான். கல்வெட்டில்

''ராஜாதித்ததவர் குதிரைச்செவகன் கடம்பூர் முர்க்கண்டிரதர்'' என்று உள்ளது.[30]

இராஜாதித்தனின் ஆனையாளன் :

இராஜாதித்தனின் ஆனையோட்டியின் பெயர் ஆனையாள் அழிசிகுலன் ஊரன் சிங்கன் ஆகும். இவனும் நொந்தாவிளக் கௌரிக்க ஆடு 100 தானமாகத் தந்தான்[31] மேலும் ஈழவிளக் கொன்றும் தந்துள்ளான்.

இராஜாதித்தனின் தேவி :

இவ்வூர் கல்வெட்டு ஒன்றில் ''இராஜாதித்ததேவர் தேவியார் இலாடராயர் மகளார் மகாதேவடிகள்'' என்று உள்ளது. இலாடராயர் குறுநில மன்னனாக இருத்தல் வேண்டும். இலாட நாடு இன்றைய குஜராத்பகுதியாக இருக்கலாம்.[32]

மகாதேவடிகள் தன்தமையனார் அரையர் இராஜாதித்தன் புகழ்விப்பவர் கண்டனைச்சாத்தி வைத்த நொந்தா விளக்கு ஒன்றுக்கு ஆடு 100 கொடுத்துள்ளனர்.[34]

முதலாம் இராசராசன் காலத்தில் வீரசோழன் இலாடப் பேரரையன் என்பவன் ஒரு குறுநில மன்னாக ஆண்டு வந்தான். இவன் தந்தை இலாடராசன் புகழ்விப்பவர் கண்டன் என்பதும் இவன் முன்னோர் தொண்டை மண்டலத்தில் படுவூர்க் கோட்டத்திலுள்ள பெருந்திமிரி நாட்டையாண்டவர் என்பதும் வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பஞ்சபாண்டவர் மலையில் காணப்படும் கல்வெட்டில் அறியமுடிகிறது.[33]

இதன் மூலம் இலாட அரசர்கள் சோழ அரசர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது தெரிகிறது. முதலாம் இராசராசனின் மனைவியரில் இலாடமா தேவியும் ஒருத்தியாவர்.[35]

இராஜாதித்தனின் தாய் :

இவனது தாயார் பராந்தகனின் பட்டத்தரசியான கோக்கிழா னடிகளே ஆவர். இதனை இவ்வூர் கல்வெட்டில் உள்ள ''இராஜாதித்த தேவர் தாயார் நம்பிராட்டியார் கோக்கிழனடிகள்.'' என்ற பகுதி உணர்த்தும்.[36]

ஆனைமேல் துஞ்சினான்

கி.பி. 949ல் மூன்றாம் கிருஷ்ணதேவன் பெரும்படையுடன் கங்கமன்னன் பூதுகனுடன் சேர்ந்து சோழ நாட்டின் மீது போர் தொடுக்க வந்தான். திருநாவலூரில் படையுடன் தங்கி யிருந்த இராஜாதித்தனும் எதிரிகளை முறியடிக்கக்கிளம்பினான். இருவர் படையும் அரக்கோணத்திற்குத் தென் கிழக்கே ஆறுமையில் தொலைவில் உள்ள தக்கோலம் என்னும் ஊரில் போரிட்டன.[37] போரில் இராஷ்டிர கூடப்படை வெற்றிபெற்றது. சோழ இளவல் இராஜாதித்தன் யானை மேலிருந்து போர் செய்யும் போது கங்க மன்னன் பூதுகன் விடுத்த அம்பொன்று மார்பில் தைக்க யானை மேலிருந்த வண்ணமே உயிர்துறந்தான். இப்போர் நிகழ்ச்சிகளை ஆனைமங்கலச் செப்பேடும், திருவாலங்காட்டுச் செப்பேடும் கூறும்.[38] தக்கோலத்தில் போர் நடந்ததை ஆதக்கூர் கல்வெட்டு கூறும்.[40]

யானை மேலிருந்து இறந்தமையால் இவன் ''ஆனை மேற்றுஞ்சினதேவர்' எனப்பட்டான். இவனைக் கும்பகோணம், திருவிடைமருதூர், திருவெள்ளறை ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுகள் 'ஆனைமேற்றுஞ்சினார்' என்றே குறிப்பிடும்.[41] இவனைப்போன்றே பின்வந்த முதலாம் இராசாதிராச சோழனும் யானைமேலிருந்து கொப்பத்துப்போரில் போர் புரிய அப்போது பகைவர் அம்புமார்பில் பட யானைமேல் இறந்தனன். எனவே,

அவனையும் கல்வெட்டுகள் ''கல்யாணபுரமுங் கொல்லாபுரமும் எறிந்து யானை மேற்றுஞ்சின உடையார்'' என்று குறிப் பிடுகின்றன.[42]

இவ்வாறு இராஜாதித்தன் இளவரசனாகவே இருந்து இறுதியில் இறந்து விடுகின்றான். போரில்வெற்றியெய்திய கன்னரதேவன்.[43] தொண்டை நாட்டையும், திருமுனைப்பாடி நாட்டையுந் தன் ஆட்சியின் கீழ் கொண்டுவர சில காலம் ஆகின்றது. அவ்விடைக்காலத்தில் குறுநிலமன்னனாக திரு முனைப்பாடி நாட்டை முனையதரையன் குலமாணிக்கன் இராமதேவன் கி.பி. 953, 954லில் ஆள்கின்றான்.[44]

அடிக்குறிப்புகள் :

1. Mysore Gaetter Vol. II Part II. Page 917
2. 570/5
3. 157/1928. 11/1931
4. 553/1920
5. பிற்காலச்சோழர் வரலாறு – பக். 35
6. பட்டியல் பின்னிணைப்பு.
7. 76/2
8. 205, 96, 101,104, 105/3 (இவனுக்கு அரிகுல கேசரி என்ற பெயரும் உண்டு. அரிகுலகேசரியும் அரிஞ்சயனும் ஒருவரல்லர் என்பாரும் உண்டு. இதனை சாஸ்திரி அவர்கள் Cholas 2ம் பதிப்பில் பக்– 134ல் காணலாம்
9. 573/3
10. 364/1913.
11. Ep.Ind. Vol. XXII No.34 verse 17. 205/3 Verse 53
12. ஒன்பதாம் திருமுறை – கோயிற் பதிகம் பா. 8

13. விக்கிரமேசோழன் உலா – வரிகள் 31, 32.
14. A.R.E. 258/1907
15. 1009/7
16. 595/5
17. 105/3
18. 101/7
19. Travancore, Archaelological Series Vol III No. 34
20. இராஜாதித்தன் பராந்தகனின் 16வது ஆட்சியாண்டில் இவ்வூர் இறைவனுக்கு நொந்தாவிளக்கெரிக்க 400 ஆடு கொடுத்துள்ளான்)
21. Ep. Ind. Vol XXvi - Pages 230 -235
22. Ep. Ind. Vol XXVI - P.232
23. The Rashtrakutas & Their times 107. Ep. nd. XXVI - p. 164
24. மேற்படி பக். 117 122. பிற்காலச் சோழர் வரலாறு பக்.44–47
25. 739/1905
26. 280/1902 Ep. Ind Vol VII No. 20 E& F
27. Ep. Ind. Vol VII No. 19A
28. 963/7
29. 739/1905. Ep. Ind. Vol VIII p.261
30. 956/7
31. 959/7
32. Raja Rajachola I L. Ulaganatha Pillai 1941 p.16
33. Ep. Ind. Vol IV No. 14 'B'
34. Ep. Ind. Vol. VII No. 19 'B'
35. Page 467 & 472/4
36. Ep. Ind. Vol VII No.19 'A'
37. The Rashtrakutas and their times p-117

38. 205/3 verse 54.
(திருவாலங்காட்டுச் செப்பேட்டு இராசாதித்தன் மூன்றாம் கிருஷ்ணனை வென்று பின்னர் வானுலகடைந்தான் என்று கூறுகிறது.

39. Ep. Ind. Vol VI pp 50 to 57

40. 132 & 201/3. 720/5

41. 39/3 & 647/5

42. 647/5

43. கிருஷ்ணதேவன் என்பது தமிழில் கன்னரதேவன் என்று வழங்கும்.

44. Ep. Ind. Vol VII No. 136 & 137

***

3. சிற்றரசர்கள்

சிற்றரசர்கள் அரசியல் நிலைக்கேற்ப மாமன்னர்களுக்கு அடங்கியும் மாறுபட்டும் வாழ்ந்தனர். பிற்காலச் சோழப்பேரரசு நிலைப்பதற்கு இருக்குவேளிர் போன்ற குறுநில மன்னர்கள் துணைநின்றதும் உண்டு. அதேபோன்று அப்பேரரசின் வீழ்ச்சிக்குக் கோப்பெருஞ்சிங்கன் போன்ற சிற்றரசர்கள் காரணமாக இருந்ததும் உண்டு.

அதியர், அருவர், ஆவியர், இருக்குவேளிர், ஓளியர், கங்கர், களப்பாளர், காடவராயர், குறுக்கையர், சம்புவராயர், திரையர், பழுவேட்டரையர், போசளர், மலையர், மழவராயர், முத்தரையர், முனையதரையர், வாணகோவரையர் முதலான குறுநில மன்னர்கள் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் பல்வேறு காலங்களில் தமது அரசை நிறுவி இருந்தனர். இவர்களில் சிலர் முற்காலச் சேர, சோழ, பாண்டிய, பல்லவர்களின் வழித் தோன்றல்களாகவும், இருந்தனர். சங்ககாலம் முதல் பிற்காலம் வரை இவர்களில் சிலரைப்பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.[1]

முதலாம் நரசிம்மவர்மன் :

மலையமான்களில் பார்கவ கோத்திரத்தான் என்று குறிக்கப்பெறும் முதல் மன்னன் இவனே. நரசிம்மவர்மன் என்பது இவனின் அபிடேகப்பெயர் ஆகும். இவனுக்குச் சத்திநாதன், சித்தவடவன், மிலாடுடையார், சித்தவடத்து அடிகள், சாமுண்ட தேவன் முதலான பெயர்களும் உண்டு. கோவில் ஆள்வோன்,

மலை குலோத்பவன் என்றும் இவன் புகழ்ப்படுகிறான். நரசிம்மவர்மன் என்னும் பெயரில் இரு மலைமான்கள் காணப்படுகின்றனர். அவர்களுள் முதல் பராந்தகச் சோழன் ஆட்சியின் இறுதிப் பகுதியிலிருந்து உத்தம சோழன் ஆட்சியின் தொடக்கப்பகுதிவரை ஒருவன் இருந்துள்ளான். சிவன் கோவிலுக்கும், சமணக் கோவிலுக்கும் சமய வேறுபாடின்றி நிவந்தகள் வழங்கிச் சமயப் பொறையுடையவனாக விளங்கிய மலையகுலச்சிற்றரசனான முதலாம் நரசிம்மவர்மன். திரு நாவலூர்த் திருத்தொண்டீச்சரத்து மகாதேவர்க்கு விளக்கெரிக்க பதின் கழஞ்சு பொன் கொடுத்துள்ளான். இவனே சோழவாண்டிபுரத்து ஆண்டி மலையில் செதுக்கப் பெற்றுள்ள பத்மாவதியம்மன், கோமத் தீச்சரர், பார்சுவநாதர், மகாவீரர் ஆகிய சமணத்திருமேனிக்குப் பனைப்பாடி என்னும் சிற்றுரைத் தானமாக வழங்கியுள்ளான்.[2]

முதற் பராந்தகனுக்கும், இராஷ்டிரகூட மூன்றாம் கிருஷ்ணனுக்கும் இடையே தக்கோலத்திற் போர் நடந்தபோது, இந்த நரசிம்மவர்மன் மலையமன்னனாக விளங்கினான். இவன் சோழ மன்னனுடன் நெருங்கிய நட்புக் கொண்டு விளங்கியமை யால் இராஷ்டிரகூடரின் படை மலையநாட்டையும் தாக்கியது. வீரசோழபுரம் என்னும் இடத்தில் போர் நடந்திருக்கவேண்டும். இப்போரில் சோழப்படை மலையமானுக்கு உதவி புரிந்திருக்க வேண்டும், அதன் காரணமாக நரசிம்மவர்மன் போரில் வெற்றி பெற்றான். இப்போர் கி.பி. 952க்கு முன்பே நிகழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில் இவன் கி.பி. 952 ஆம் ஆண்டிலும் பராந்தகனின் மகனான கண்டராதித்த சோழனுக்கு அடங்கி ஒழுகிய மன்னனாகவே இருந்துள்ளான். வீரசோழபுரப் போரில் இவன் யாருடன் போரிட்டான் என்று கல்வெட்டு கூறவில்லை. எனினும் இவன் இராஷ்டிரகூடருடன் போரிட்டான் என்றே கொள்ளவேண்டும். இப்போருக்குப்பின் இவன் ''கோவல் ஆள்வோன், தமிழ்க்காவலன், பகைவர்க்கு அச்சம் தருபவன், வீரசோழப்புரப்போரில் தன் பகைவர்களைப் புற முதுகு காட்டி

ஓடச்செய்தவன், தன் தோள்வலியால் பகைவர்களின் காளை களைக்கவர்ந்தவன்'' என்றெல்லாம் கல்வெட்டுகள் புகழ்ந்து கூறும்.[33] முதலில் இராஷ்டிரகூடர்களை வெற்றிக்கொண்டாலும் பின்னர் தோல்வியையே தழுவினான். கன்னரதேவனின் 17வது ஆட்சியாண்டு கல்வெட்டில் இவன் அளித்த தானங்கள் குறிக்கப்படுகின்றன.[4] கன்னரதேவனின் ஆட்சியாண்டினைக் குறிப்பதால் இவன் அடங்கிய சிற்றரசனானன் என்பது தெளிவாகிறது. கல்வெட்டு வருமாறு.

''ஸ்வஸ்திஸ்ரீ கன்னர தேவர்க்கு யாண்டு பதினேழாவது முனைப்பாடித் திருநாவலூர்த் திருத்தொண்டீஸ்வரத்து மஹா தேவர்க்கு ஸ்வஸ்தி சுக்ரான்வய உதயாசல ஆதித்ய சக்திநாத சிம்உறத்வஜ சகிமகர லாஞ்சன மலைய குலோத்பவ மலையகுல சூளாமணி ஸ்ரீ மத் நரஸிம் உறவர்ம மிலாருடைய நாட்டான் சித்தவடவன் ஆகிய நரஸிம்ஹவன் மன் வைத்த நொந்தா விளக்கொன்று''

இராசேந்திர சோழ மலைமான் :

கிளியூர் மலையமான் மல்லன், கிளியூர் மலையமான் சதிரன் மலையன், போன்ற வேறு பெயர்களும் இவனுக்கு உண்டு. மலையகுலராயர் என்னும் பட்டமுடைய சில தலைவர்கள் இவனுக்குக் கீழ்ப்படிந்த அதிகாரிகளாக இருந்தனர். இவன் முதலாம் குலோத்துங்க சோழன், அவன் மகன் விக்கிரமசோழன் ஆகியோர் ஆட்சிகாலங்களில் வாழ்ந்தவன்.[5] குலோத்துங்கனின் 10வது ஆட்சியாண்டில் (கி.பி. 1080). இராசேந்திர சோழ மலையமானைச் சார்த்தி பலரும் சிவன், திருமால் கோவில் களுக்குப் பல்வேறு நிவந்தங்கள் அளித்துள்ளனர். இதனை நோக்கும் போது இவன் நோய்வாய்ப்பட்டிருந்திருக்கலாம் அதனால் இவன் உடல்நலம் தேற கோவிலுக்கு நிவந்தங்கள் அளித்திருக்கலாம் எனக்கொள்ள இடமுண்டு. இவன், சித்தலிங்க மடம் சிவன் கோயிலுக்குப் பலதானங்கள் செய்துள்ளான்.[6]

இம்மலையமானைச் சார்தி மலையமான் சூரியந் பிரமந்ஸஹாயநான மலைய குலராசன் என்பவன் திருநாவலூர் திருத்தொண்டிஸ்வரமுடைய மகாதேவர்க்கு நான்கு நொந்தா விளக்கெளிக்கச் சாவா முலாப் பெரும்பசு 128 தானமாகக் கொடுத்துள்ளான்.[7]

முனையதரையன் குலமாணிக்கன் இராமதேவன் :

இவன் திருமனைப்பாடி நாட்டை ஆண்ட ஒரு குறுநில மன்னன் ஆவன். இவனின் இருகல்வெட்டுகள் இவ்வூரின் கிடைக்கின்றன. அவற்றில்பேரரசன் பெயர் குறிப்பிடப்படாமல் சகரயாண்டு மட்டுமே குறிக்கப்பட்டுள்ளன. அவ்வாண்டுகள் 875, 876 ஆகும். (கி.பி. 953, 954 ஆகும்). சகரயாண்டு குறிப்பிடும் மிக பழைய கல்வெட்டுகள் சிலவேயாகும். அவற்றில் இவ்வூர் இவ்விருகல்வெட்டுகளும் அடங்கும். முனையர்கோன் என்பவன் விக்கிரமசோழனுடைய அமைச்சர் களுள் ஒருவன் என்பதை விக்கிரம சோழனுலாவினால் அறிய முடிகிறது. இவன் அரசனிடமிருந்து முனையதரையன், முனையரையன் என்றபட்டங்களுள் ஒன்றைப்பெற்றவன், என்று பண்டாரத்தார் கூறுகிறார். பெரியபுராணத்தில் சுந்தரரை வளர்த்த மன்னனாக நரசிங்க முனையரையர் கூறப்படுகிறார். அவரும், திருமுனைப்பாடி நாட்டு மன்னன் ஆவர். முனையதரையர் என்ற பெயரில் கல்வெட்டிலும் இலக்கியத்திலும் பலர் காணப் படுகின்றனர். (பின் இணைப்பு – முனையர்கள்)

தக்கோலப் போரில் வென்று மூன்றாம் கிருஷ்ணதேவன், தன்னாட்சியின் கீழ் உடனே தொண்டை நாடு முழுமையும் கொண்டுவரமுடியவில்லை என்பதை இக்கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. கி.பி. 949க்கும் கி.பி. 955க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வெள்ளாற்றிற்கு வடக்கேயுள்ள திருமுனைப் பாடி நாட்டிலும் அதற்கு வடபால் அமைந்துள்ள தொண்டை நாட்டிலும் பேரரசு ஆட்சியில்லை. அதன்பிறகு கி.பி. 955 முதல் 968 வரை அவ்விரு நாடுகளும் இராஷ்டிரகூடர் வசம் ஆயின

என்பதை அந்நாடுகளில் காணப்படும் கன்னரதேவன் கல் வெட்டுகள் உணர்த்துகின்றன.[8]

கி.பி. 953, 954 ஆம் ஆண்டுகளில் குறுநில மன்னனாக இருந்த முனைய தரையன் குலமாணிக்கன் இராமதேவன் பழைய சோழர்க்குத்திறை கொடாமலும் புதிய இராஷ்டிர கூடர்க்குத் தலைவணங்காமலும் சுயேட்சையாகத் தன் நாட்டை ஆட்சி புரிந்துள்ளான். இவன் திருநாவலூர்த் திருத்தொண்டீஸ்வர முடையார்க்கு நொந்தாவிளக்கொன்றிற்கு ஆடு 100 தானமாக கொடுத்துள்ளான்.[9] இவன் தேவியார் அக்கிணங்கையார் ஒரு நொந்தாவிளக்கு இக்கோவிலில் எரிய 100 ஆடு தானமாகக் கொடுத்துள்ளார்.[10] மற்றொரு பரகேசரி வர்மனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் முனையதரையன் அபராயிதன் குலமாணிக்க பெருமானார் என்றுள்ளது.[11] அன்றியும் மன்னன் பெயர், ஆட்சியாண்டு ஆகியன கிடைக்காத மற்றொரு கல்வெட்டிலும்[12] முனையதரையன் ஆன அபராயிதன் குலமாணிக்க மகாதேவன் என்ற இவனே(?) திருத்தொண்டீஸ்வர இறைவனுக்கு அருச்சனா போகமாக நிலக்கொடை அளித் துள்ளான்.

அடிக்குறிப்புகள் :

1. மலையமான்கள் – புலவர் சு. குப்புசாமி 1936 – 37
2. 251–252 / 1936 – 37
3. 1936 – 37 பார்ட் 2 பக். 22
4. Ep Ind Vol. VII No. 19C
5. மலையமான்கள் புலவர் சு. குப்புசாமி பக். 81
6. 373 / 1908
7. 989 / 7
8. 799, 802, 803, 894, 899, 994/ Ep. Ind. Vol III No 38- C& D
9. 324 & 374/6
10. P. 137-138/6
11. 999/7
12. 230 / 39-40

4. அதிகாரிகள்

தொல்காப்பியம் புறத்திணையியலில் காணப்படும் ''மாராயம் பெற்ற நெடுமொழி'' என்னும் வஞ்சித்திணைக்குரிய துறையொன்றால் பண்டைத் தமிழ் வேந்தர்கள் தம் அதிகாரி களுள் தக்கோர்க்குப் பட்டம் அளித்துச் சிறப்பித்துள்ளனர் என்பது தெரிகிறது. அப்பழைய வழக்கத்தைப் பின்பற்றி பின் வந்த சோழ மன்னர்கள் தம் அரசியல் அதிகாரிகளுக்கு வழங்கிய பட்டங்கள் மாராயன், பேரரையன், அரையன், மூவேந்த வேளான், முதலியனவாம். இப்பட்டங்களைப் பெரும்பாலும் தம் இயற்பெயர் அல்லது சிறப்புப் பெயர்களோடு இணைத்தே சோழமன்னர்கள் தம்அரசியலில் சிறப்புடையோர்க்கு அளித்த வந்தமை குறிப்பிடத்தக்கதொன்று ஆகும். இராசராச மாராயன், விக்கரம சோழமாராயன், இராஜேந்திரசோழ மூவேந்த வேளான் என்பன போல அவை வழங்கப்பட்டுள்ளன. மாராயன், பேரரையன் ஆசிய இரண்டும் அரசாங்க அலுவலர்களுக் கேயன்றி வேறு துறைகளில் மேம்பட்டவர்களுக்கும் அளிக்கப் பட்டுள்ளன. இதனை வாச்சியமாராயன், கடிகை மாராயன், நாடகப் பேரரையன், நிருத்தப் பேரரையன் போன்ற பட்டங்களால் அறியலாம். பிரம்மாராயன், பிரமாதிராசன் என்ற பட்டங்கள் பிராமண குலத்தினராகிய சில அதிகாரிகளுக்குக் கொடுக்கப் பட்டன. மேலே குறிக்கப்பட்ட பட்டங்கள் எல்லாம் ஒன்றுக் கொன்று உயிர்ந்தவையாகவோ தாழ்ந்தவையாகவோ கருதப் படாமல் சமமாக மதிக்கப்பட்டன, என்றும் தெரிகிறது.[1] மேற்குறித்த அடிப்படையில் திருத்தொண்டீஸ்வரம் கோயிற்

கல்வெட்டுகள் மூலம் அறியவரும் அதிகாரிகளைப் பற்றி இப்பகுதியில் காணலாம்.

அரையன் சோழ மாராயன் :

அரையன், மாராயன் என்னும் இரு பட்டப் பெயர்களை நோக்கும் போது, இவன் ஒரு பெரிய அதிகாரியாக இருந்திருக்க வேண்டும். முதலாம் பராந்தகனின் 37வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இவன் குறிக்கப்படுகிறான். திருநாவலூர்த்திருத் தொண்டீஸ்வரத்து மாதேவற்கு நொந்தா விளக்கொன்று எரிப்ப தற்காகப் பொன் பதின் கழஞ்சினைக் கிழான்மூர் நாட்டுத் திருக் குமாரமங்கலத்துச் சபையிடம் கொடுத்து எரிக்கச் செய்தான்.[2]

விக்கிரமாபரணப் பல்லவரையன் :

பரகேசரி வர்மனின் மூன்றாம் ஆட்சி ஆண்டுகல்வெட்டில் ''செம்மணங் கூருடைய நம்பூரன் பெருமுகிலன் விக்கிரமா பரணபல்ல வரையன் காடு வெட்டித்திருத்தினபூமி இருணீக்கி''.. என்று கல்வெட்டில் வருகிறது.[3] செம்மணங்கூரைச் சேர்ந்த நம்பூரன் பெருமுகிலன் ஓர் அதிகாரியாக இருந்திருக்க வேண்டும். விக்கிரமாபரண பல்லவரையன் எனும் சிறப்பு பெயரினையும் பெற்றுள்ளான். இவ்வதிகாரியும் இன்னொரு வனும சேர்ந்து திருநாவலூர் ஆழ்வார்க்குத் திருவமுதுக்குக் குத்தல் (கைகுத்தல்) அரிசி பன்னிரு நாழியும், நெய் முப்பிடியும், கறியமுதுக்கு நெல் முன்னாழியும் பெறும் வகையில் நிலத்தினை இறையிலியாகச் செய்து குடுத்துள்ளனர்.

சேனாபதி மும்மடி சோழ பிரம்மாராயர் :

பிரம்மாராயன் என்னும் பட்டம் உடையதால் இவர் அந்தணர் குலத்தினராக இருத்தல் வேண்டும். இவர் வெண்ணாட்டு அமன்குடியினராவார். இராசராசன்னுடை படைத் தலைவர்களில் ஒருவர் இவர் தஞ்சைப் பெரிய கோயிலின் திருச்சுற்று

மாளிகையை எடுப்பித்தவர். இதனை தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் உள்ள மூன்று கல்வெட்டுகளின் மூலம் அறியலாம்.[4] இவர் திருமந்திர ஓலை நாயகமாகவும் இருந்திருக்கிறார் என்பதை ஆனைமங்கலச் செப்பேட்டால் அறியலாம்.[5] கிருஷ்ணன்இராமனான இவர் மன்னனால் அளிக்கப் பட்ட மும்மடி சோழப்பிரம்மாராயன் என்ற பட்டத்தையும், படைத் தலைவராக இருந்தமையால் இவர் ''சேனாபதி கிருஷ்ணன் இராமனான மும்மடி சோழ பிரம்ம மாராயர்'' என்னும் அழைக்கப் பட்டார். இராசராசனின் மகனான முதலாம் இராசேந்திரன் காலத்திலும் படைத் தலைவராக இருந்திருக்கிறார்.[6] இவன் காலத்து 'இராசேந்திர சோழ பிரம்ம மாராயன் என்றபட்டமும் பெற்றுள்ளார்.[7]

இராசராசனின் 21 மற்றும் 24ம் ஆட்சியாண்டினைச் சேர்ந்த இவ்வூர் கல்வெட்டுகளில் இம்மும்முடி சோழப் பிரம்மராயர் குறிக்கப்படுகிறார்.[8] 21வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ''மும்முடி சோழ பிரம்மராயர் கந்மி கரும்பருடையான் சித்திரகுத்தன் ஐய்யக்கு (மரடி) இவ்வூரிற் பலவகையாலுந் தெண்டங்கொண்டு திருநாவலூர்க் கல்லால் இடுவித்தபட்டம்'' என்று கூறுகிறது. அடுத்த 24 வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இராஜராஜனின் 13,19வது ஆட்சியாண்டுகளில் கோவிலுக்காகக் கொடுக்கப்பட்ட பொற்பட்டங்கள் அப்போது சிலாலேகை செய்யப்படாமையால் அவை இப்போது சேனாபதி மும்முடி சோழபிரம்ம மாராயர்க்காக இத்தேவர் ஸ்ரீ காரியங்கடைக் காண்கின்ற வீரசோழ வணுக்கனால் சிலாலேகை செய்யப் பட்டதைக் குறிக்கிறது.

உத்தமசோழ நென்மலிநாட்டு மூவேந்தவேளான் :

ஆனைமங்கலச் செப்பேட்டில் இவன் பெயர் காணப் படுகிறது இராசராச சோழனிடத்தில் திருமந்திர ஓலை நாயகமாக இருந்தவன் இவன்.[9] அருமொழிதேவ வளநாட்டு நென்மேலி

நாட்டு பருத்திக் குடியினைச் சேர்ந்தவன் ஆவான். மதுராந்தக மூவேந்த வேளான் என்ற சிறப்பு பட்டமும் பெற்றவன். இவன் இவ்வூர் இராசராசனின் 18வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிக்கப் படுகிறான்.[10] இரண்டு தங்கப்பட்டங்களை இவ்வூர் இறைவனுக்குக் கொடுத்துள்ளான்.'' உத்தம சோழ நென்மலிநாட்டு மூவேந்த வேளார்'' என்று இவன் வயர் கல்வெட்டில் உள்ளது.

நாரக்கன் ஸ்ரீ அரங்கன் இராமன் எனும் சேனாபதி இராசேந்திர சோழப் பிரம்மராயர் :

பிரம்மராயர் என்னும் பட்டம் உடைமையால் இவர் அந்தணர் ஆக இருத்தல் வேண்டும் – சேனாபதி என்றும் குறிக்கப் படுவதால் இவன் படைத்தலைவன் ஆவான். முதலாம் இராசேந்திரனின் 6வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ''கோவி லுக்குத் தேவதானமாக நிலம் நகரத்தாரிடமிருந்து வாங்கி இவர் கொடுத்த செய்தி குறிக்கப்படுகிறது.[11] இவரின் துணை அதிகாரியான வீரசோழ அணுக்கர், இவ்வூர் கோயிலில் உள்ள ஆடவல்லாருக்கும், நம்பியா ரூரக்கும் கணபதிக்கும் காலை அபிடேகத்திற்காகத் (ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும்) தானமாகப் பெரிய வெண்கலப்பாத்திரமும் ஆடுகளும், பசுக் களும் கொடுத்துள்ளார். இத்துணை அதிகாரி முதலாம் இராசராசனின் காலத்தில் ஸ்ரீ காரியங்கடைக் காண்கிறவராகப் பணிபுரிந்தவர் ஆவார்.

அழகிய திருச்சிற்றம்பல உடையார் மளவராயர் :

கோனேரின்மை கொண்டான் எனக் தொடங்கும் (வீர ராசேந்திரன்?) ஒரு கல்வெட்டின் மூலம் இக்கோயிலுக்குக் கெடில நதிக்குத் தெற்கேயுள்ள கான நாட்டைச் சேர்ந்த ஏகதீரகளத் தூர் என்னும் கிராமத்தைத்தானமாக இவர் கொடுத்த செய்தியினை அறிகிறோம்.[12] மாளவராயர் என்ற சிறப்புப் பெயர் பூண்டுள்ள மையால் இவர் ஓர் அதிகாரியாக இருத்தல் வேண்டும். இவருக்குக் குலசேகர மளவராயர் என்றும் பெயர் உண்டு.[13]

கரிகால சோழ இருங்கொளப்பாடி நாடாழ்வான் :

நாடாழ்வான் என்ற சிறப்புப்பெயர் இருங்கோளப்பாடி யோடிணைந்து இவன் பெயரில் இருப்பதால் இருங்கோளப்பாடி நாட்டின் தலைமைப் பொறுப்புடையவனாக இருக்கலாம். முதலாம் குலோத்துங்கனின் 10 வது ஆட்சியாண்டுக் கல் வெட்டில் இவன் குறிப்பிடப்படுகிறான். பருதூர் நாட்டுச் சேந்தமங்கலத்து வேட்டைக் காறன் மாணியான கலக்கி என்பது இவனது சொந்த ஊர் மற்றும் இயற்பெயர் ஆகும். திருநாவலூர் கோவிலுக்கு சந்தி விளக்கெரிக்க 103 ஆடுகளும், தயிர்மிர்துக்கு பசு ஒன்றும், வெண்கலத்தளிகை ஒன்று இவனால் கொடுக்கப் பட்டது.[14] கரிகால சோழ இருங்கொளப்பாடி நாடாழ்வான் என்று குறிக்கிறது. சேந்தமங்கலத்து வேட்டைக்காரன் என்று கூறுவதால் இவன் அரசியல் அதிகாரி அல்லன் என்றும் கொள்ள இடமுண்டு. ஆனால் நாடாழ்வான் என்ற பெயரும் இருக்கிறது. பிறிதொரு இவ்வூர் குலோத்துங்கனின் 30 வது ஆட்சியாண்டு கல்வெட்டில் காட்டுப்பருக்கல் வேட்டைக்காரன் அத்திமல்லன் விளக்கன் என்றொருவன் குறிக்கப்படுகின்றான்.[15] இவனுக்குச் சிறப்புப் பெயர்கள் எதுவும் காணப்படவில்லை. எனவே, கரிகால சோழ இருங்கொளப்பாடி நாடாழ்வான் முதலில் வேட்டைக்காரனாக இருந்து பின்னர் அரசியல் அதிகாரியாக உயர்வு பெற்றிருக்கலாம்.

பெறுகனூர் நாட்டு கூடலூர்ப்பள்ளி ஆளப்பிறந்தான் மோகநான குலோத்துங்க சோழ கச்சியராயன் :

இவன் பல்லவர் குலத்தில் தோன்றிய ஒரு தலைவன் கி.பி. 1136ல் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருமாணி குழியைச் சார்ந்த நிலப்பரப்பில் நாடுகாவல் புரியும் அரசாங்க அதிகாரியாய் நிலவியவன், அரசனால் அளிக்கப்பெற்ற குலோத்துங்க சோழக் காடவராயன், கச்சியராயன் என்னும் பட்டங்கள் பெற்றவன். இவன் ஆளப்பிறந்தான் எனவும் அரசநாராயணன் எனவும் தன்னைக் கொண்டான். எனவே

அழிந்தொழிந்த பல்லவப் பேரரசை மீண்டும் நிறுவுறுதற்குக் காலங்கருதிக் கொண்டிருந்த பல்லவ அரச குமாரர்களுள் இவன் முதல்வனாதன் வேண்டும் எனவும், இவன் தொடங்கிய அம்முயற்சி மூன்றாம் இராசராச சோழன் ஆட்சியில் கி.பி. 1232ல் இப்பல்லவன் வழியினாகிய கோப்பெருஞ் சிங்கனால் நிறைவேற்றப்பட்டது எனவும் கருத்துரைப்பர் அறிஞர்.[16]

இவன் சிறந்த சிவபக்தன் ஆவன். ஏனெனில் திருநாவலூர் சிவாலயமன்றி மற்றும் திருவதிகை,[17] திருமுதுகுன்றம்[18] (விருத்தாசலம்) சிவாலயங்கட்கு நிவந்தங்கள் அளித்தும், அணி கலன்கள் வழங்கியும், சிவத்தொண்டுகள் புரிந்துள்ளான். அரசியலில் படிப்படியாக உயர்ந்து, பட்டம், பதவிகள் பெற்றுத் திருமுனைப்பாடி நாட்டில் ஒரு சிற்றரசனாயிருந்தான் என்பது இவன் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.[19]

இரண்டாம் குலோத்துங்கனின் ஏழாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இவன் குறிக்கப்படுகிறான்.[20] திருத்தொண்டீஸ்வர மகாதேவருக்கு மகர தோரணமும், பிறையும் கூத்தாடும் தேவர்க்கு வெள்ளித்தாரிகை ஒன்றும், வெள்ளிக்கச்சுக்கோரம் ஒன்றும், வெண்கலத்தளிகை ஒன்றும் திரு அட்டணைக்கால் ஒன்றும், இன்னபிறவும் கொடுத்துள்ளான். அரசநாராயணன் வெள்ளிக்கச் சக்கோரம் என்றும், ஆளப்பிறந்தான் தளிகை என்றும், இவனளித்த கலன்கள் இவன் பெயரால் குறிக்கப்பட்டன.

அரையன் முனையன் மோகன் என்னும் ராஜேந்திர சோழக்காடவராயன் :

இரண்டாம் குலோத்துங்க சோழனின் 14ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் பெருங்கனூர் நாட்டுக் கூடலூரைச் சேர்ந்தவன் இவன் என்று கல்வெட்டுக் கூறுகிறது.[21] திருத் தொண்டீஸ்வரர் கோவிலில் திருப்பள்ளியெழுச்சிக்காக நிலம் தானம் அளித்துள்ளான், இவன்.

இராஜராஜக்காடவராயன் :

இரண்டாம் குலோத்துங்க சோழனின் காலத்தில் தென்னார்க் காடு மாவட்டத்தில் ஒரு பகுதியினை நாடு காவல் புரிந்த கூடலூர்ப் பள்ளி ஆளப்பிறந்தான் மோகநான குலோத்துங்க சோழ கச்சியரானின் தமையன். கல்வெட்டுக்களில் கூடலூர் ஆளப் பிறாந்தான் மோகன் ஆகிய இராஜராஜ காடவராயன் என்றும் வருகிறது.[22] இவன் சில வரிகள் மூலம் பெற்ற வருமானத்தைத் திருநறுங்கொன்றை சமணக்கோவிலுக்கும்.[23] எலவானாசூர்க் கோயிலுக்கும்[24] தானமாகக்கொடுத்தான்.

இரண்டாம் இராஜராஜன் எட்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருமுனைப்பாடி நாட்டுத்திருநாவலூரன் இராஜாதித்தபுரத்து நகரத்தாற்குத் தங்களுரிற் காணியுடைய வியாபாரிகளாய் பலவிடங்களிலும் போயிருந்தாரை இராஜராஜக் காடவராயன் அழைப்பித்து இவ்வூரிலே குடியேற்ற'' என்று உள்ளது. என்ன காரணத்தாலோ இவ்வூர் வியாபாரிகள் வெளியூரியே தங்கிவிட அவர்களை மீண்டும் இங்கே வந்து குடியேறுமாறு செய்தான் இவன்.

குலோத்துங்க சோழ மகதை நாடாழ்வான் :

நாடாழ்வான் என்பதால் இவன் அரசியல் அதிகாரியாக இருத்தல் வேண்டும். தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திட்டக்குடியிலுள்ள மூன்றாம் குலத்துங்கனின் மூன்றாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் செம்பை நாயகன் ராசராசதேவன் ஆகிய ராசராச[25] மகதை நாடாழ்வான். என்று ஒருவன் குறிப்பிடப் படுகிறான். இவ்வூரில் உள்ள மூன்றாம் குலோத்துங்கனின் ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு செம்பை நாயகன் ஆன குலோத்துங்க சோழ மகதை நாடாழ்வான் என்பான், தங்கப்பட்டம் ஒன்றளித்ததைக் குறிக்கிறது[26] இவ்விரு வரும் ஒருவர் என எடுத்துக் கொண்டால், இவன் இரண்டாம் இராசராசன் காலத் திலிருந்து அரசியல அதிகாரியாக விளங்கினான் என்றாகிறது.

மேலும் காலிங்கராஜப்பேரிரையன், குலோத்துங்கசோழ கச்சியராயன் என்ற இரு அதிகாரிகள் பெயர்கள், திரிபுவனச் சக்கரவத்திகள் குலோததுங்க சோழ தேவர் என்று குறிப்பிடும் இரு இவ்வூர் கல்வெட்டுகளில் முறையே 37வது, 7வது ஆட்சியாண்டு களில் காணப்படுகின்றன.

காலிங்கராஜப்போரரையன் :

மேற் குறித்த மன்னனின் ஏழாம் ஆட்சியாண்டில் இவன் பெயர் இடம் பெறுகிறது. திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத் துங்க சோழ தேவரின் 37ஆவது, ஆட்சியாண்டு கல்வெட்டில் இவன் குறிக்கப்படுகிறான். பேரரையன் எனப்படுவதால் அதிகாரியாக இவன் இருத்தல் வேண்டும். இவன் இவ்வூர் ஆடவல்லாருக்கு நொந்தா விளக் கெரிக்க சாவாமூவாப் பெரும்பசு 32 கொடுத்துள்ளான்.[27]

குலோத்துங்க சோழ கச்சியரராயன் :

இவனும் ஒரு அரசியல் அதிகாரி ஆவான். இவன் திருமுனைப்பாடி கிழாமூர் நாட்டு பெருந்தாம நல்லூரில் உள்ள திரு மகிழ்ந்துறை ஆளுடையார் கோவிலில் உள்ள ஏழிசை மோகன் மடத்திற்கு ஒருவேலி நிலமும் மற்றும் சில நிலங்களையும் தானமாகக் கொடுத்துள்ளான். இதனைத் திருநாவ நல்லூரில் உள்ள திருத்தொண்டீஸ்வரர் கோவிலில் பொறித் துள்ளான்.[28]

பாடிகாவல் :

நாடு காவல் அதிகாரி என்போர் தன் நாட்டிலுள்ள ஊர்களில் களவு, கலகம் முதலான தீய செயல்கள் நிகழாமல் காத்து, உள்நாட்டில் அமைதி நிலவுமாறு கண்காணிக்க வேண்டியவர் ஆவர். அச்செயலுக்காகப் பொதுமக்களிடம் நாடுகாவல் அல்லது பாடி காவல் என்ற வரி ஒன்று வாங்கப்பட்டு வந்தது.

பிற்காலத்தில் சோழர்களின் ஆட்சி வீழ்ச்சியுற்றமைக்குரிய காரணங்களுல் நாடுகாவல் அதிகாரிகளின் படை வலிமையும் துரோகச் செயல்களும் குறிப்பிடத் தக்கவை எனலாம்.[29] முதல் குலோத்துங்க சோழன் 42–வது ஆட்சியாண்டு கல்வெட்டில் திருநாவலூர் திருத்தொண்டீஸ்வரமுடையார்க்குத் தானம் வழங்கியோனாக இவ்வூர் பாடிகாவலுடையானான விரட்டன் வளந்தான் என்பான் குறிக்கப்படுகிறான்.[30]அடுத்து இரண்டாம் குலோத்துங்கனின் ஏழாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இரண்டு ஊர்களின் பாடிகாவல் செய்வாரளித்த நிலதானத்தினைக் குறிக்கிறது. கல்வெட்டு வருமாறு ''திருநாவலூரான இராசாதித்த புரம் இத்தோடும் கூடி நகாராணையான வீரசோழ நல்லூரும் இவ்விரண்டூரில் பாடிகாவலுடையார் திருத்தொண்டீஸ்வர முடையார்க்கு வேண்டும் நிமந்தங்களுக்கு விட்டேந் ஆளப் பிறந்தான். மோகநான குலோத்துங்கச் சோழ கச்சியராயநேன் வில்லிடை பிடித்தான் இது அழிவான்'' என்று உள்ளது.[31]

கரண நாயன் :

கரணத்தான் என்பதே கரணநாயன் என்றும் கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. எனலாம். கரணத்தான் என்பவன் கணக்கு எழுதுபவன் ஆவன். நல்வழியில் ஈட்டிய பொருளும நல் லொழுக்கமும் உடையவனையே கரணத்தானாக நியமனஞ் செய்வது வழக்கம், இவன், தான் எழுதிய கணக்கைச் சபையார் விரும்பியபோது தானே நேரில் காட்டல் வேண்டும். இவன் சபையாரது நன்மதிப்பைப் பெறாவிட்டால் அடுத்த ஆண்டில் இவனுக்கு அவ்வேலை அளிக்கப்படமாட்டாது. ஒரு நாளைக்கு நானாழி நெல்லும் ஓராண்டிற்கு ஏழு கழஞ்சு பொன்னும் இரண்டு கூறையுங் கரணத்தானுக்குச் சம்பளமாகக் கொடுக்கப்படுவது வழக்கம். இவன், தான் எழுதிய கணக்கை அவ்வாண்டின் இறுதியில் சபையாரிடம் கொடுக்கும்போது, சிவக்கக் காய்ச்சிய மழுவைக் கையில் ஏந்தி, உறுதிமொழி, கூறிக்கொடுத்தல்

வேண்டும். அங்ஙனம் கொடுக்குங்கால் கையில் ஊறுபாடு நேராதாயின், கணக்கனுக்கு ஏழு கழஞ்சிற்கு மேல் கால்பங்கு பொன் சேர்த்துக் கொடுக்கப்படும். ஊறுபாடு நேர்ந்து விடு மாயின், சபையாரால் பத்துக் கழஞ்சு பொன் தண்டம் விதிக்கப் படும். பெரிய ஊர்களில் கணக்கனுக்கு உதவியாகக் கீழ்க் கணக்கனும் இருந்துள்ளான். இவ்வாறு பண்டாரத்தார் விளக்குவார்.[32]

முதலாம் பராந்தகனின் முதல் மகனான இராஜாதித்த தேவனின் கரணநாயனான குமாரடி திருவரங்கன் என்பவன் திருத்தொண்டீஸ்வரத்து மகாதேவர்க்கு இருகழஞ்சு நிறையுள்ள ஒருபட்டம் ஒன்று கொடுத்துள்ளான். இது பராந்தகனின் 31வது ஆட்சியாண்டு கல்வெட்டில் உள்ளது.[33] அடுத்து இவனே 32 வது ஆட்சியாண்டில் இவ்வூரில் மேற்றளி மகா விஷ்ணுக்கு ஒரு நொந்தாவிளக்கெரிக்க ஆடு 100 தருகிறான். பிறிதொரு பராந்தகனின் 32வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இராஜாதித்த தேவர் ஸ்ரீ கரணத்தார் வைத்த நொந்தாவிளக்கு ஒன்றுக்கு வைத்த பொன் பதின்கழஞ்சு குறிக்கப்படுகிறது.[34]

அடிக்குறிப்புகள்

1. பிற்காலச் சோழர் வரலாறு பண்டாரத்தார் பக்கம் – 485
2. 969/7
3. 999/7 238/1939–40.
4. 31, 33, 45/2
5. Ep. Ind. Vol. XXII, No. 34.
6. 217/1911
7. Ep. Ind.Vol. XXII, No. 34.
8. 988, 998/7
9. Ep. Ind.Vd. XXII No. 34.
10. 240/1939 - 40
11. 225/1939 - 40

12. 254/1939 - 40
13. 256/1939 - 40
14. 989/7
15. 995/7
16. பிற்கால சோழர் வரலாறு பண்டாரத்தார். பக். 354.
17. 391/1921.
18. 150/7.
19. 467/1921
20. 1004/7
21. 234/1939 – 40
22. 295/1939 – 40 & 166/1906
23. 313/1939 – 40
24. 166/1906
25. 283 & 284 – 40
26. 265/1939 – 40
27. 991/7
28. 267/1939 – 40.
29. பிற்காலச் சோழர் வரலாறு – பண்டாரத்தார். பக். 481
30. 982/7
31. 1004/7
32. 362/6 (77/1898)
33. 964/7
34. 978/7

***

5. கொடைகள்

கோயிலை நல்ல நிலையில் நிர்வகிக்கவும், தங்கள் வேண்டுதல் பேரிலும் கோவிலுக்கு நிவந்தங்களாக நிலம், ஆடு, பொன், இன்னபிற பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. கோவிலில் விளக்கெரித்தல் என்பது ஒரு சிறந்த பணியாகக் கருதப்பட்டது. அக்காலத்தில் கொடையளிக்கப்பட்ட விளக்கு களில் ஈழவிளக்கு, மலையாண்விளக்கு, ஆரிக்குட விளக்கு, சோழச்சியில் விளக்கு, அனந்தலைவிளக்கு, பஞ்சரத்திருவிளக்கு என்ற பல வகை விளக்குகள் இருந்தன என்று கல்வெட்டுகள் மூலம் தெரியவருகிறது.

ஆடுகள் :

இக்கோயிலின் பராந்தகனின் 16–ஆம் ஆட்சியாண்டு முதல் 39–ம் ஆட்சியாண்டு வரை உள்ள கல்வெட்டுகளில் பல கல்வெட்டுகள் நொந்தாவிளக்கெரிக்க ஆடு தானமாக தரப்பட்ட செய்தினையே கூறுகின்றன. ஒரு விளக்கெரிக்க 100 ஆடுகள் வீதம் மொத்தம் பத்தொன்பது விளக்குகளிக்கப்பட்டுள்ளன. ஆக (19து100= 1900 ஆடுகள்) ஒரு விளக்கெரிக்க 90 ஆடுகள் வீதம் மொத்தம் 5 விளக்குகளிக்கப்பட்டுள்ளன. (ஆக 5து90 = 450 ஆடுகள்) ஒரு பகல் நொந்தா விளக்கெரிக்க 45 ஆடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 2475 ஆடுகள் ஆகும்.

இவை சாவா மூவாப்பேராடு என்பதால் 2475 ஆடுகளும் கி.பி. 946–ல் வழங்கப்பட்டன வாயினும் தொடர்ந்து இக்

கோயிலுக் குரியதாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டன.

விளக்குகள் :

இவ்வூர் கல்வெட்டுகளில் ஈழவிளக்கு, மலையான் விளக்கு ஆகிய விளக்கு வகைகள் நொந்தாவிளக்கு, சந்திவிளக்குகளாக எரிக்கப்பட்டன. ஈழவிளக்கு பராந்தகன் காலத்தில் நான்கும் கன்னரதேவன் காலத்தில் ஒன்றும் கொடுக்கப்பட்டுள்ளன. ஈழவிளக்கின் நிறை 120 என்ற குறிப்புள்ளது. (நிறு'த்தலளவைப் பெயர் இல்லை 962/7) இரு மலையாண் விளக்குகள் பராந்தகன், கல்வெட்டில் குறிக்கப்படுகின்றன. இவ்விளக்கின் நிறை 147 ஆகும்.[985/F]

ஒரு நொந்தா விளக்கின் நிறை 70 பலம் என்று பராந்தகன் கல்வெட்டில் உள்ளது. இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் தராவினால் ஆன நொந்தாவிளக்கு நாராயம் உட்பட 170 பலம் என்று குறிப்பு உள்ளது. முதலாம் இராஜராஜன் காலத்தில் வழங்கப்பட்ட தராவிளக்கின் எடை 60 பலம் ஆகும் (998/7)

ஒரு விளக்கெரிக்க ஆகும் செலவில் பாதியை ஏற்று நிவந்தம் அளிப்பதைக் கல்வெட்டுகள் 'அரை விளக்கு' என்று கூறும். அத்தகைய அரைவிளக்கு வைத்ததை மூன்று கல்வெட்டுகள் குறிக்கின்றன. (944, 997, 232/7)

பொன் : தங்கத்தால் செய்யப்பட்ட பாத்திரங்கள், அணி கலன்கள் (பட்டம், மாலை) போன்றவை இக்கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தங்கப்பட்டங்கள், பொற்பூ ஒன்று, நற்பொன் கழஞ்சரையால் ஆன தங்கமாலை ஒன்று, தங்கத் தால் ஆனபாத்திரம் ஒன்று ஆகியவை தானமாகக் கொடுக்கப் பட்டுள்ளன. (238இ 265இ 988/1939–40) எபி இண்டிகா VII எண் : 19 எஃப்) மாற்றுக் குறைந்த பொன்னால் செய்த மகரதோரணம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அந்த பொன்னின்

அளவு குறித்துக் கூறும்போது, ''மகரதோரணம் ஒன்றினால் ஒன்பதெமு (ககால்மா) றி பொன் நூற்றுக் கழஞ்சும், பிறை ஒன்றினால் எட்டெமுக்கால் மாறிடபொன் முக்கழஞ்சும்'' என்று பொன்னின் தரம் குறித்த குறிப்புடன் கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (1004/7) பல்லக்கும், குடையும் இறை வனுக்குத் தூக்குவதற்காக மேட்டு உறத்தூர் என்ற கிராமத் திலிருந்து உம்பளிமூலம் வரும் பொன் 50 அளிக்கப்பட்டது. (266/1939–40)

வெள்ளி : வெள்ளித் தளிகை ஒன்றும், வெள்ளிக் கச்சுக்கோரம் ஒன்றும், கோவிலுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. (1004/7)

வெண்கலம் : 60 பலம் நிறையுடைய தளிகை ஒன்றும், 'ஆளப் பிறந்தான் தளிகை' என்ற பெயரில் தளிகை ஒன்றும், பாத்திரம் ஒன்றும் வெண்கலப் பொருள்கள் மூன்று தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. (989, 227, 1004/7)

நிலங்கள்

நிலதானங்கள், அவை அளிக்கப்படும் கோயில் மற்றும் தேவைகளுக்கேற்ப பெயர் பெறும் தேவதானம், திருவிடை யாட்டும், பள்ளிச் சந்தம் முற்றூட்டு, சாலாபோகம் போன்றவை இவ்வகையின. பிறிதொருவகை நிலக்கொடைகள் சில குறிப் பிட்ட காரியங்களைச் செய்தற் பொருட்டு அவற்றைச் செய்து வருவோர்க்குக் கொடுக்கப்பட்டன. அவை சீவிதம், போகம், விருத்தி, காணி, எனப்பட்டன.

திருநாமத்துக்காணி என்பது சிவன் கோவிலுக்கு அளிக்கப் பட்ட நிலத்தைக் குறிக்கும். முதலாம் இராசேந்திரன் காலத்தில் இக்கோவிலின் வெளிச் சுவரினைச் சுத்தப்படுத்த ஐவர் ஒன்றாக சேர்ந்து நிலம் அளித்துள்ளனர். இது இவனின் 3வது

ஆட்சியாண்டில் நடந்துள்ளது. 6வது ஆட்சியாண்டில் இக் கோவிலில் உள்ள சூரியதேவர், நம்பியாரூரான் ஆகிய இறைவர் களுக்காக நிலதானத்தை இவ்வூர் நகரத்தார் கொடுத்துள்ளார். மேலும் சபையிடமிருந்து நிலத்தினை வாங்கித் தேவதானமாகவும் கொடுத்துள்ளனர். (225,226/39-40) குலோத்துங்கனின் 3வது ஆட்சியாண்டில் அவியனூர் என்ற கிராமம் பிரம்தேயமாக விடப்பட்டது. அதற்கு முன் இவ்வூர் கலிகடிந்த கோழ நல்லூர் என்ற பெயரில் திருநாமத்துக் காணியாக விடப்பட்டு இருந்தது. பின்னர் அதனை மாற்றி பிரமதேயமாகக் கொடுத்தனர். 14வது ஆட்சியாண்டில் இறைவனின் திருப்பள்ளியெழுச்சிக்காக நிலம் தானம் கொடுக்கப்பட்டுள்ளது. 32வது ஆட்சியாண்டில் இவ்வூர்க் குளம் நிருவகிக்க நகரத்தரிடமிருந்து நிலம் வாங்கி ஏரிப்பட்டியாக அளிக்கப்பட்டுள்ளது. (260, 234, 233/39-40)

கோப்பெருஞ்சிங்கனின் 6வது ஆட்சியாண்டில் திருமுனைப்பா நாட்டிலுள்ள கோவளை குறும்பூர் நிலத்திற்கு வரிவிலக்கி திருநாமத்துக் காணியாக இவ்வூர் கோவிலில்தான் எழுந்தருளிவித்த விஸ்வேஸ்வர தேவர்க்குக் கங்கோலி ஞானசிவர் என்னும் சுவாமிதேவர் கொடுத்தார். விக்கிரம பாண்டியனின் இரண்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் சேந்த மங்கலப் பற்றில் உள்ள ஓகூர்கிராமம் இறையிலி திருநாமத்துக் காணியாக விடப்பட்டது. கோனேரிண்மை கொண்டானின் வீரராஜேந்திரன் 5வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் பாண்டி நாட்டு செவ்விருக்கை செம்பிநாட்டுக்கு குறிச்சியைச் சேர்ந்த திருச்சிற்றம்பலமுடையார் மழவராயர் என்பவர் கெடிலநதியின் தென்கரையில் உள்ள ஏகதீரக் களத்தூரிலுள்ள நிலத்தைத் தானமாகக் கொடுத்துள்ளார். (242, 252, 254/ 39.40)

தணிக்கை :

தேவதானமாக விடப்பட்ட திருநாவலூர், பெரும்பாக்கம், ரகதீரச்சதுர் வேதிமங்கலம் ஆகிய ஊர்களிலிருந்து வரியாக வரும் நெல்லும். பொன்னும் முதலாம் இராசராசன் காலத்தில் அரசியல் அதிகாரியால் கணக்குக்கேட்கப்பட்டது. (தணிக்கை செய்யப் பட்டது இவ்வூர்களில் திருநாவலூரும், பெரும்பாக்கமும், ஆகிய ஊரார்கள். நெல்லும், பொன்னும் கொடுக்க முதலிலாமை தெரிவிக்க, அதனை அளிக்கத் திருநாவலூர் நகரத்தார் பொறுப் பேற்றுக் கொண்டனர். திருநாவலூர் அருமொழிதேவன் எண்ணாழி காலாலளக்கப்பட்டு அதன்படி நெல் பெற்றுக் கொள்ளப்பட்டது. ''இத்தேவர் தேவதானமான மேலூர் நாட்டு திருநாவலூரு மிந்நாட்டுப் பெரும்பாக்கமும் மங்கல நாட்டு ஏக தீரச்சதுவேதி மங்கலமும் முன்பித்தெவற்கிறுத்து வரும்படி நெல்லும், பொன்னுங் கணக்குக்கெட்டு இவ்வூர்களில் மேலூர் நாட்டுத் திருநாவலூரும் பெரும்பாக்கமும் ஊர் முதலுள்வரி இவ்வூர்கள் வரியில் நெல்லும், பொன்னும் முதலிலாமையில் திருநாவலூர் நிலமெப்பேர்ப்பட்டது மளந்து வரியிட்டபடி திருநாவலூர் நகரத்தாரிவ்வூர் அருமொழி தேவனான எண்ணாழி காலாலணக் கடவநெல்லு எழுநூற்றுக் கமுங் காசு நிறை கல்லாற் பொன் முப்பதிந் கழஞ்சு'' (1000/7) என்றிருப்பதிலிருந்து அறியலாம்.

***

6. திருநாவலூர் வணிகர்கள்

ஒரு நாட்டின் வளர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் வணிகர்களுக்கப் பெரும் பங்குண்டு, வணிகர்களுக்குள் நாநாதேசி திசையாயிரத்தைஞ்ஞூற்றுவர். மணிக்கிராமத்தார், நகரத்தார், வளஞ்சியர், அஞ்சு வண்ணத்தார் என்று பல குழுவினர் அந்நாளில் இருந்தனர் என்பதைக் கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள் மூலம் அறியலாம். பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் ஆட்சிக்காலத்தில் சயாம் தேசத்தில் தமிழ் மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்றில் மணிக்கிராமத்தார் என்ற வணிகக்குழுவினர் குறிக்கப்படுகின்றனர்.[1] சுமத்திராவில் உள்ள முதல் குலோத்துங்கன் கல்வெட்டு ஒன்றில் ''திசையாயிரத்தைஞ் ஞூற்றுவர்'' என்ற வணிகக் குழுவினர் பற்றிக்குறிப்பு உள்ளது.[2] நாநாதேசிகள் என்பதைப் பல தேயங்களுக்கும் சென்று வாணிபம் நடத்தியவர்கள் என்று கொள்ளலாம். அஞ்சு வண்ணத்தார் பற்றி அறிஞர்களிடம் கருத்துவேறுபாடு உண்டு. டாக்டர் குண்டர்ப், டாக்டர். பர்னர் இரு அறிஞர்களும், அஞ்சுவண்ணத்தார் யூதர்கள் என்றனர். எல்லிஸ் என்பவர் ஐவகை உரிமைப்பட்டங்களை உணர்த்தும் என்றார். கல்வெட்டிலாகாவின் தலைவராயிருந்த வெங்கையா என்ற அறிஞர் அஞ்சுவண்ணத்தார் ஒருவாறு சுயேட்சை பெற்று நிலவிய வாணிகக்குழுவினர் என்றார்.[3] இவ்வாறு பலரும் பலவிதமாகக் கூறியுள்ளனர். பல்சந்தமாலை என்ற பழைய நூலின் சில பாடல் களைக் கொண்டு டி.வி. சதாசிவபண்டாரத்தார்'' இயவனராசன் கலுபதிதா முதலெண்ண வந்தோர் – அயன்மிகு தானையர் அஞ்சுவண்ணத்தவர்'' என்றும் ''எழ்பெருந்தேரங்கத்திவனர்கள் அல்லா எனவந்து'' என்று காணப்படும் தொடர்களால் இவர்கள் முகமதியராயிருத்தல் வேண்டும். என்கிறார்.[4] வாணிகம் செய்து அதன்மூலம் ஈட்டிய பொருளை பல நல்லறங்கள் செய்ய இவ்வணிகர்கள் பயன்படுத்தியுள்ளனர். நகரங்களிலும் பேரூர்களிலும் உள்ள திருக்கோயில்களின் வழிபாட்டிற்கும் விழாவிற்கும், திருவிளக்கினுக்கும் நிவந்தம் வழங்கியும், ஏரி, குளம், முதலியவற்றைச் சீர்த்திருத்திப் பாதுகாத்தற்கும் பொருளும் நிலமும் அளித்துள்ளனர் என்பதைப் பலகல்வெட்டுகள் மூலம் உணரலாம்.[5]

T. 7334

இவ்வூரில் உள்ள 105 கல்வெட்டுகள் பத்து கல் வெட்டுகளில் வணிகர்கள் குறிக்கப்படுகின்றனர். அவர்கள் சிலர் கோயிலில் விளக்கெரிக்கதானமும், ஒரு வியாபாரி ஊரில் பொதுத்தொண்டும் செய்துள்ளனர். மற்றொருவர் கோவிலில் திருமண்டபம் கட்டிவைத்தார்.

இன்னிப்பரன் இராமன் சீராளன் என்னும் திருகோவலூர் வியாபாரி, நகரத்தாரிடமிருந்து நிலம் வாங்கித் திருநாவலூர் என்னும் ராஜாதித்தபுரத்தின் தெற்கேயுள்ள குளத்தைப் பராமரிக்கத் தானம் செய்தான். இச்செய்தியினைக் குலோத்துங்கனின் 32வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் காணலாம்.[6]

மன்னன் பெயர் எதுவும் குறிப்பிடாமல் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு ஒன்றில் ''பள்ளிபட்டணசுவாமி பெரியான்'' என்பவன் இக்கோயிலில் இரண்டு திருமண்டபமங்கள் எடுத்து, அதில் கீழைத்திருவாசலும் திறந்து வைத்துள்ளான் என உள்ளது இதில் பட்டண சுவாமி என்ற அடை இவண் வணிகத் தலைவன் என்பதைக் குறித்து நிற்கிறது. இதன் திருநாவலூரில் வணிகக் குழுவொன்று இருந்தது என்பதும் உறுதிபடுகிறது.[7]

க்ஷேத்திரபாலருக்கு சந்திவிளக்கு

க்ஷேத்திரபாலபிள்ளையார் என்பது பைரவரைக் குறிக்கும் என்பர். இப்பைரவருக்குச் சந்தி விளக்கெரிக்கும் பொறுப்பேற்று இக்கோயிலினைச் சேர்ந்த ஒரு சிவபிராமணன் தன் பூசைப் பங்கினைப் பிணையாக்கி 4 கழஞ்சு பொன்னை ஒரு வியாபாரி யிடமிருந்து பெற்றுள்ளார். இச்செய்தியினை குலோத்துங்கனின் 21வது ஆட்சியாண்டு கல்வெட்டில் காண்கிறோம்.[8] இதே ஆண்டில் மருதுளன் பாக்கன் சாத்தன் என்னும் இவ்வூர் வியாபாரி இக்கோயிலில் விளக்கெரிக்க வகைசெய்கிறான்.[9] முதலாம் பராந்தகனின் 38வது ஆட்சியாண்டில் முருகன் விச்சியன் என்னும் வியாபாரி கூத்தப்பெருமனுக்கு விளக்கொன்றினை வைத்து அதனை எரிக்கச் சாவாமூவாப் பேராடு 90 கொடுத்துள்ளான்.[10] இவ்வூர் வியாபாரி முனைய மாத்தாண்டன் கலிஇராமன் என்பவரும் விளக்கெரிக்க ஆடுதானமாக வழங்கியுள்ளான்.[11]

திருநாவலூர் வியாபாரியான பெருவலமுடையான் பெண்ணை நெதிவானந்திருச் சிற்றம்பலமுடையான் திருத் தொண்டீஸ்வர முடையாருக்குத் திருநொந்தா விளக்குகெரிப் பதற்காக இவ்வூர் கோயில் உள்ள சிவபிராமணர்களிடம் 32 பசு தானமாகக் கொடுத்தான். இதனை இரண்டாம் குலோத்துங்கனின் 5வது ஆட்சியாண்டு கல்வெட்டில் காணலாம்.[12] நெற்குணம் ஊரைச்சேர்ந்த திருஞானசம்பந்தன் பெரியநாயன் என்னும் வியாபாரி இக்கோவிலில் இருசந்திவிளக்கு எரிக்க 240 காசு கொடை கொடுத்துள்ளான்.

இராஜராஜனின் 13வது ஆட்சியாண்டில் இவ்வூர் வியாபாரி நாவலூர் திருப்பூவணமும் பட்டாலகன் விதி விடங்கனும் பொன் பதின்கழஞ்சே யெழுமஞ்சாடியங் குன்றி எடையுள்ளப்பட்டம் ஒன்றினைத் அளித்துள்ளனர்.

இவ்வாறு இவ்வூர் வியாபாரிகள் மிகச் சிறப்புடன் இருந்திருக்க, என்ன காரணத்தினாலோ இரண்டாம் இராசராசன்

காலத்தில், இவ்வூரின் காணியுடைய வியாபாரிகள் பலவிடங் களிலும் போயிருந்தாரை இராஜராஜக்காடவராயன் என்பவன் மீண்டும் அழைப்பித்து வந்து குடியேற்றினான் என்று கல்வெட்டில் உள்ளது.[13]

அடிக்குறிப்புகள்

1. Ep Ind. Vol XVII No Journel Oriented Research VI Page .299-310
2. The Cholas by. K.A.N. Page 596
3. T.A.S Vol. II Page - 74
4. பிற்கால சோழர் வரலாறு பண்டாரத்தார் பக். 583.
5. 205, 228, 241/13 151, 233, 239, 258, 259/1940
6. 233/1939-40
7. 1002/7
8. 259/1939-40
9. 258/1939-40
10. 972 / 7
11. 239/1939-40
12. 1003/7
13. 1005/7

***

7. பராந்தகனின் இலச்சினை

தொல்காப்பிய காலத்திற்கு முன்னரே தமிழ்நாட்டில் சேர, சோழ, பாண்டியர் அரசாண்டு வந்துள்ளனர். இதனைத் தொல்காப்பியம், ''வன்புகழ் மூவர் தன் பொழில் வரைப்பு''[1] என்று கூறும். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிச் சின்னங் களும் மாலையும் உண்டு. ''போந்தை வேம்பே ஆரென வருஉப் மாபெருந்தானையர்''[2] எனவும் போதரும் தொல்கப்பியக் சூத்திரம். இம்மூவருள் சோழர் குடியினர் சூரிய குலத்தினர் ஆவர் என்று இலக்கியமும்,[3] கல்வெட்டுகளும், செப்பேடுகளும் கூறும். சோழர்களது மாலை ஆத்திமாலை, அவர்களது கொடியும் இலச்சினையும் புலியுருவம் ஆகும். பட்டினப்பாலை, கரிகால் வளவன் என்ற சோழனின் நாட்டுப் பெருமையினைக் கூறும் போது, ஏற்றுமதி செய்யக் குவிந்த பொருள்களின் மீது அவனின் ஏவலர்கள் அவனது புலிப் பொறியை இடுவது வழக்கம். அப்படியிடப்பட்ட பொருட்கள் குன்றுகளைப் போல காட்சி தருகிறதெனக் கூறும்பட்டினப்பாலை.

'' அளந்தறியாப் பல பண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
புலிபொறிந்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்,
பொதி முடைப் போரேறி'' 131–37

எனவே இலச்சினை என்பது அரசின் பெருமையையும் சிறப்பையும், காப்பையும் துலக்கி நிற்கும் ஓர் அடையாளமாகும்

இவ்வாறு புலியினைத் தம் இலச்சினை (முத்திரை) யாகப் பயன் படுத்தும் வழக்கம் பிற்காலச் சோழர் காலத்திலும் தொடர்ந்தது.

பிற்காலச் சோழர் இலச்சினையை நாம் வேலஞ்சேரி, திருவாலங்காடு, கரந்தை போன்ற செப்பேடுகளில் காண்கிறோம். இவ்வூரில் இரண்டு கைப்பிடிச் சுவர்களில் ஒரே அமைப்பான கற்சிற்பங்கள் கோபுரத்தின் அருகே காணக்கிடைக்கின்றன. இது குறித்துக் கல்வெட்டு ஆண்டறிக்கை....Two wing stones with an inscription of the chola king Parantaka and bearing in relief at either and ths Chola emblem of a seated tiger along with a Parasol[4]

என்று கூறுகிறது. இது பராந்தகனின் இலச்சினை என்பது ஏற்றுக் கொண்டால் அது ஒரு புதிய செய்தியேயாகும்.

இவ்வுருவம் பொறித்த கல்லின் மேல் பராந்தகன் கல்வெட்டு ஒவ்வொன்றிலும் இரண்டு வீதம் மொத்தம் நான்கு உள்ளன. அக்கல்வெட்டு பராந்தகனின் 16ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். இராசேந்திர சோழனின் கரந்தைச் செப்பேட் டிலுள்ள புலியுருவமும் இங்குள்ள புலியுருவமும் ஒப்பிடும்படி உள்ளது. பின்னரு கால்களில் அமர்ந்த நிலையிலும், முன் காலினை உயர்த்தியும், முகத்தில் கோபம் கொப்பளிக்கக் காட்சி தருகிறது. பூச்செண்டு போன்ற வடிவில் குடை ஒன்றும் காணப் படுகிறது.

அடிக்குறிப்புகள் :

1. தொல்காப்பியம் – பொருள் – செய்யுளியல் சூ. 75.
2. தொல்காப்பியம் – பொருள் – புறத்திணையியல் சூ. 5
3. மணிமேகலை – பதிகம் – வரிகள் 9–12
4. A.R.E. Reports for 1939-40 Part 1

8. சிறப்புச் செய்திகள்

பகல் நொந்தா விளக்கு : பகல் நொந்தா விளக்கு கல்வெட்டுகளில் அதிகம் காணப்படவில்லை. முதலாம் பராந்தகனின் இவ்வூர்க் கல்வெட்டுகள் மூன்றில் பகல் விளக்கெரிக்க ஏற்பாடு செய்த செய்தியுள்ளது. திருத்தொண்டீஸ்வர முடையாருக்குப் பகல் நொந்தா விளக்கெரிக்கத் துறத்துளாருடையாள் சேரி காறாயிலடிகள் என்பவர் 45 ஆடு கொடுத்துள்ளார்.[1]

கூத்தப்பிரானின் செப்புத் திருமேனி : முதற்பராந்தக்ன் காலத்திலிருந்தே கோயில்களுக்குச் செப்புத் திருமேனிகள் செய்தளித்து அதனைக் கல்லிலே பொறிக்கப்படும் வழக்கம் இருந்துள்ளது.[2] திருநாமநல்லூர் (கி.பி. 945) விருத்தாசலக் கல்வெட்டுகள் (கி.பி. 981) கூத்தப் பெருமானைக் குறிக்கின்றன. இராஜராஜனின் கோவிந்தப்புத்தூர் கல்வெட்டும் (கி.பி. 992) கூத்தாடும் பெருமாள் என்றே கூறுகிறது. ஆனால் இராஜராஜேச்சுரத்துக் கல்வெட்டுகள் அவனை ஆடவல்லான், ஆடவல்லார் என்று கூறுகின்றன.[3]

இவ்வூர் பராந்தகனின் 38வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு திருநாவலூர் வியாபாரியான முருகுன் விச்சியன் என்பவன் தான் அட்டுவித்த கூத்தப்பெருமாளுக்கு வைத்த விளக்கினைக் குறிப்பிடுகிறது.[4] இங்குக் கூறப்படும் கூத்தப்பெருமாள் செப்புத்திருமேனியே ஆகும். இக்கோயிலில் ஆடியருளுகின்ற கூத்தர்க்குத் தராவினால் பாதபிடம் (1750 பலம்) இடப்பட்டது.[5] எனவே இராஜராஜன் காலத்தில் பாதபீடம் செய்யப்பெற்ற கூத்தர், பராந்தகன் காலத்தில் செய்தளிக்கப்பட்டவராக இருக்கலாம். கூத்தப்பெருமானின் செப்புத் திருமேனியைக் குறிக்கும் காலத்தால் முந்திய செய்தி இதுவேயாகும்.[6] ஆனால் இத்திருமேனி இன்று கோயிலில் இல்லை.

முதலாம் இராஜேந்திர சோழனின் 6வது ஆட்சியாண்டில் ஆடவல்லாருக்கு பாலபிஷேகத்திற்கு ஆடு, மாடுகள் கொடுக்கப் பட்டுள்ளன.[7] மேலும் இவன் காலத்தே உடையார் படை வீரநாராயணத் தெரிந்த வில்லியான் மாராயன் பழுவூர்நத்தன் இத்திருமேனிக்கு முத்து, ஸ்படிகம், நீலம் ஆகியன இடை இட்டுக்கட்டின பொன் மாலை ஒன்றினையும் இடுவித்தான்.[8] இரண்டாம் குலோத்துங்க சோழனின் 7வது ஆட்சியாண்டில் இத்திருமேனிக்குக் கூடலூர் பள்ளி ஆளப்பிறந்தான் மோகநான குலோத்துங்க சோழ கச்சியராயன் என்பவன் மகரதோரணம் செய்து இடுவித்தான்.[9] இவ்வாறு பல மன்னர்களின் காலத்தும் சிறப்புப் பல பெற்று வீற்றிருந்த கூத்தப்பெருமானின் திருமேனி இன்று இல்லாதது பெருங்குறையேயாகும்.

பயிரேற்றுதல் : கோப்பரகேசரியின் 3வது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்றில் குறிப்பிட்ட நிலத்தில் பயிரேற்றி அதன்மூலம் திருநாவலூர் ஆழ்வார்க்கு திருவமுதினுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட செய்தி குறிக்கப்படுகிறது. ஏரிநீரை நீர்ப்பாச்சா மலே வேண்டாம் என்று சொல்ல பவனிடம், அன்றாள் கோவெ ஐந்து கழைஞ்சுப் பொன் தண்டமாகப் பெறலாம் என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டு பின்வருமாறு:

காராணை எரிநீரை நீர்க்கிசைஞ்ச வண்ணம்
திருவுண்ணாழிகை சபையே இப்பூமி அடுக்கவும்,
உழவும் பெறுவதாகவும், காலிலெ பாச்சப் பெறுவதாகவும்,
நீர்பாச்சாமே வேண்டா வென்றானை அன்றாழ்

கோவெப் ஐங்கழைஞ்சு பொன் கொள்வதாகவும், இது சந்திராதித்தவற் இறையிலியாகச் செய்து குடுத்தோம்.[10]

கடைகுறைவு : முதலாம் இராஜராஜனின் 18வது ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் உத்தம சோழ நென்மலிநாட்டு மூவேந்த வேளார் என்பவரால் கொடுக்கப்பட்ட இரண்டு பொற்பட்டங் களின் எடை குறைந்தமை கண்டுபிடிக்கப்பட்டு, கோவில் அதிகாரிகளால், மங்கலம் கிழான் காளப்பன் பாழிநக்கள் என்பவரிடம் தெரிவிக்கப்பட்டு விசாரணைக்குப் பின் சரி செய்யப்பட்டது.[11]

குற்ற தண்டம் : குற்றம் செய்தவனைத் தண்டிக்க முதலாம் இராஜராஜன் காலத்தில், கோவிலுக்கு விளக்குக் கொடுக்குமாறு கட்டளையிடப்பட்டது. இராஜராஜசோழனின் 23வது ஆட்சி யாண்டுக் கல்வெட்டு ஒன்றில் ''அவியானூர்சபை, செங்கன் அடிகன் குட்டேறன், காமன் எழுவன் ஆன பெருங்குளத்தூர் வீரசுந்தர பேரரையன் என்று இருவரும் செய்த குற்றங்களுக்குத் தண்டனையாகத் திருத்தொண்டீஸ்வரமுடையாருக்கு ஒரு விளக்கும், பெருங்களத்தூர் தேவர்க்கு அரைவிளக்கும் வைக்கும் படி கூறியது. அவ்விருவரும் செய்த குற்றம் என்னவென்று கல்வெட்டுக் கூறவில்லை. இவ்வாறு குற்றத்தண்டமாக விளக்குக் கொடுக்க வேண்டும் என்பது அன்றைய நீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை தெரிய வருகிறது.

பகைவிலக இறைவனுக்கு விளக்கு: முதலாம் குலோத்துங்க சோழனின் 41வது ஆட்சியாண்டில், கங்கை கொண்ட வளநாட்டு திருமுனைப்பாடி மேலூர் நாட்டு ஆர்வலத்து ஆர்வலமுடையயான் அண்ணாமலை என்பவன் இந்நாட்டு புருக்கனுடையான் உலகனுக்காக இவன் மகன் தன் பகை தொடராமலிருக்க இவ்வுலகனைச் சாத்தி இப்பகை தீர திருத்தொண்டிசுவர முடையார்க்குத் திருநொந்தா விளக்கெரிக்க சாவாமுவாப்பெரும்பசு[12] கொடுக்கின்றான். இருவர் கொண்ட

பகை மேலும் தொடராமலிக்க வேண்டித் தெய்வத்திற்கு விளக்குக் காணிக்கையாக்குகிறான் ஒருவன்.

காதற்பரத்தை காரணமாக ஒரு கொலை : திருநாவலூரைச் சேர்ந்த ஒருவன் ஐம்பை என்னும் ஊரில் உள்ள தன் காதற் பரத்தையை விரும்பி நள்ளிரவில் செல்ல, அதனைக் கண்ணுற்ற வணிகன் ஒருவன் அவனைக் கொலை செய்தான். கொலைபுரிந்த வணிகனுக்குக் கொலைத் தண்டனை கொடுக்காது, அவ்வூர் தான்றோன்றியாழ்வார் ஆலயத்தில் விளக்கொன்று வைப்ப தற்குப் பொன் கொடுக்குமாறு ஏற்பாடு செய்ததாக ஒரு கல் வெட்டில் கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு இராசராசனது 28ஆம் ஆண்டினைச் சேர்ந்தது. இது தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஜம்பை என்னும் ஊரில் உள்ளது.[13] ஐம்பை என்ற ஊர், கல்வெட்டுகளில் சண்பை என்றும் குறிக்கப் படுகிறது.[14]

பின்னாளில் சிலாலேகை செய்தல் : முதலாம் இராசராசனின் 13வது, 19வது ஆட்சியாண்டில் திருத்தொண்டீஸ் வரமுடையாருக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டவைகள் அப்போது சிலாலேகை செய்திலாமையில் அவனது 24வது ஆட்சியாண்டில் சிலாலேகை செய்யப்படுகின்றன என்ற குறிப்போடு ஒரு கல்வெட்டு அமைகிறது. தானம் கொடுக்கப் பட்ட 11 ஆண்டுகளுக்குப் பின் அவை கல்லில் பதிவு செய்யப் பட்டுள்ளன. மேலும், அரண்மனை அதிகாரிகள், குறிப்பிட்ட கால இடைவெளியில், ஊர்க் கணக்குகள், கடமைகள் (வரிகள்) ஆகியவற்றைச் சரிபார்த்தல், விட்டுப்போன நிவந்தங்களைப் பதிவு செய்தல் ஆகிய பணிகளை செய்தனர் என்பதையும் அக்கல்வெட்டு தெரிவிக்கிறது. கல்வெட்டு வருமாறு: ''யாண்டு – 29ஆவது இன்நாடு வகை செய்கின்ற ஆக்கூருடையான் திருவரங்க... திருநாவலூரில் திருதேர்கீழண்டைக் கணக்குக் கண்டு கடமை நேராகக் கொண்ட பொன்னும் இத்தெவர் கொயிலுக்கு

நிவந்தப்பணி செய்யக் கடவாரைக் குற்றத் தடைங் கொண்ட பொன்னும் பொற்பூ வொன்றுஞ் சுட்டி மூன்றுமாகப் பொன் இருப்பத்திருகழஞ்செயரைக் காலால் ராஜராஜன் பட்டமொன்று மியாண்டு 13ஆவது இவ்வூர் வியாபாரி நாவலூர் திருப் பூவணமும் பட்டாலகன் விதிவிடங்கனும் பொன் பதின் கழஞ் செயெழு மஞ்சாடியுங் குன்றியாலிட்ட பட்டமொன்றுமாகப் பட்டமிரண்டும் முன்பு சிலாலெகை செய்திலாமையில் யாண்டு 24ஆவது செனாபதி மும்மடி சொழபிரம்ம மாராயற்காக இத்தெவர் ஸ்ரீ காரியங்கடைக்காண்கின்ற வீரசோழ வனுக்கனக்கன் .... பட்டமிரண்டுஞ் சிலாலேகை செய்வித்தார்.''[15]

திருத்தொண்டீஸ்வரத்தின் திருப்பெயர்கள் :

இக்கோயில் மற்றும் இறைவன் பெயர் கல்வெட்டுகளில் பலவாறாகக் குறிக்கப்பட்டுள்ளது. திருநாவலூர் திருத்தொண்டீஸ் வரத்து மகாதேவர், திருநாவலூர் மகாதேவர், திருத்தொண்டீஸ்வர கரத்து தேவர், திருநாவலூர் திருத்தொண்டீஸ்வரம் இராஜாதித்த ஈஸ்வரகரத்து மகாதேவர், திருத்தொண்டீஸ்வரமான இராஜாதித்த ஈஸ்வரத்து மகாதேவர், திருத்தொண்டீஸ்வரத்து ஆழ்வார், திருத்தொண்டீஸ்வரமுடைய நாயனார். திருத்தொண்டீஸ்வர முடைய பரமசுவாமிகள், திருநாவலூர் உடையார் தொண்டர்கள் நாயனார், திருநாவலூர் நயினார் தொண்டர்கள் நயினார் எனப் பல்வேறு திருப்பெயர்களைக் காலங்கள் தோறும் பெற்று வந்துள்ளதைக் காண்கிறோம்.

உசாவடி – பற்று : விசயநகர மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழகம் உசாவடி எனும் பெரிய நிருவாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. அவை படைவீட்டு உசாவடி, வழுதிலம்படி உசாவடி, திருச்சிராப்பள்ளி உசாவடி, திருவாரூர் உசாவடி ஆகும். அதனுள் அடங்கிய பிரிவு பற்று எனப்படும். இவற்றில் திருநாவலூர் பகுதி, வழுதிலம்பட்டு உசாவடி என்ற நிருவாகப் பிரிவின் கீழ் இருந்தது என விசயநகரமன்னன்

கல்வெட்டால் அறிகிறோம். இவ்வுசாவடியின் கீழ் இவ்வூர் கருமாவூர்ப்பற்று என்ற பிரிவின் கீழ் இருந்துள்ளது. (250/ 1939–40). கி.பி. 1535 முதல் எழுதப்பெற்றுள்ள விசயநகர மன்னர்களின் கல்வெட்டுகளில் இவ்வூர் ''திருநாவலூர் சீர்மை'' என்ற வருவாய்த் துறைப் பிரிவின் தலைமையிடமாக விளங்கியது எனவும் அறிய முடிகிறது. (273/1939–40).

அடிக்குறிப்புகள் :

1. 1008/7
2. தமிழ்நாட்டு செப்புத் திருமேணிகள் மே. சு. இராமசாமி பக்.49
3. மேற்படி பக். 45
4. 972/7
5. தமிழ்நாட்டு செப்புத் திருமேணிகள் மே.சு. இராமசாமி பக்.34
6. 998/7
7. 227/1939–40
8. Ep. Ind. Voll VII 19 F.
9. 1001/7
10. 999/7
11. 240/1939–40
12. 980/7
13. இராசராசசோழன் எல் உலகநாதன் பிள்ளை 1941–பக். 71
14. Ins. 84, 86 / 1906
15. 988 / 7

9. உதிரிப்பூக்கள்

நிவந்தம் புதுப்பிக்கபடல் :

வழிபாட்டுக்கும் நிவேதனங்களுக்காவும் வழங்கப்பட்ட கொடை இடையீடுபட அது மீண்டும் அவ்வண்ணமே நடந்துவர நிலக்கொடையினைப் புதுப்பிக்க வழிசெய்யப்பட்டதாக ஒரு கல்வெட்டில் உள்ளது. எழுத்தமைதி கொண்டு இது கி.பி. 17ஆம் நூற்றாண்டு என இக்கல்வெட்டினை கூறலாம். (246/F)

திருவலகு, திருப்பள்ளித்தாமம் : இராஜகேசரி வர்மனின் மூன்றாம் ஆட்சியாண்டில் வீரசோக பண்டிதர் என்பவர் கோவில் திருவலகு இடும் பணியாளர் நால்வரையும், திருபள்ளித்தாமம் தொடுக்கும் பணியாளர் இருவரையும் நியமித்துத்தாம் கொடுத்த பொன் நாற்பதின் கழஞ்சின் ஆண்டு வட்டியாக வரும் ஆறுகழஞ்சு பொன்னைக் கொண்டு அப்பணியினைச் செய்து வருமாறு வகை செய்தார். இதனை

> ''**வீர சொக பண்டிதர் குடுத்த பொன்னார்ப்பதின் கழஞ்சு ஆட்டை விட்டம் அறுகழஞ்சு திருவலகு இடுவானால் வரும் திருப்பள்ளித்தாமம் தொடுப்பார் இருவரும் இப்பொலி கொண்டு பணிசெய்யக் கடவார்**'' (983/4)

என்கிறது கல்வெட்டு.

திருமெய்க்காவல் உரிமையை விற்றல்

திருநாவலூர் திருமெய்க் காவல் உரிமையைக் கோயில் நிர்வாகத்தினர். செல்லப்பெருமாள் மகன் திருமலைக்கொழுந்தர் என்னும் ஆலகால சுந்தர வாணவதரையருக்கு விற்று விடுகின்றனர். இதே போன்று இன்னொரு திருமெய்க்காவல் வரியினையும் உரிமையும் விற்றமை குறிக்கப்பட்டுள்ளது. இருக்கல்வெட்டுகளிலும் மன்னர் பெயர் எதுவுமில்லை எழுத்தமைதிக் கொண்டு கி.பி. 16 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளாகக் கருதலாம். (251, 255/39–40)

வேற்றூர் நிவந்தம் : இக்கோயிலில் பதிவு : ராஜராஜவளநாட்டுக் திருமுனைப்பாடிக் கிழான்மூர் நாட்டுப் பெருந்தாம நல்லூரில் உள்ள திருமகிளந்துரை ஆளுடையார் கோவிலில் அமைந்துள்ள ஏழிசை மோகன் மடத்திற்குப் பக்தர்கள் உணவருந்துவதற்காகப் பேரிங்கூரில் ஒரு வேலி நிலத்தினை மடப்புற இறையிலியாகக் கொடுத்தான், குலோத்துங்க சோழ கச்சியராயன் (267 / 39–40). இச் செய்தி திருத்தொண்டீஸ்வரத்தில் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது. (பேரிங்கூர் சிவன் கோயில் துறையின் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னம் ஆகும்.

திருப்பள்ளியெழுச்சி : குலோத்துங்கனின் நான்காம் ஆட்சியாண்டில் இறைவன் திருப்பள்ளியெழுச்சியில் அமுது படையலுக்கு வேண்டி அரையன் முனையின் மோகன் ஆன குலோத்துங்க சோழக்கடவராயனால் நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. (234/ 39–40)

பால் அபிஷேகம் :– இவ்விறைவனுக்குப்பால் அபிஷேகத்திற்கும் நிவேதனத்திற்காகவும் குறிச்சி அரையன் சுந்தரத் தோளுடையான் ஆன கூப கராயரால் 50 பசுக்கள் தானமாக அளிக்கப்பட்டுள்ளன. பாண்டியமன்னன் பெருமாள் வீரபாண்டிய தேவனின் 4வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இச்செய்தியைக்

தயிருக்கு ஆடு பாலுக்குப் பசு : முதலாம் இராசேந்திரனின் 6வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ஆடவல்லார், நம்பி யாரூரர், கணபதி ஆகிய இறைவர்களுக்குத் தினமும், தயிரமுதுக்கு ஆடுகளும், ஞாயிறு காலையில் பால் அபிஷேகத்திற்குப் பசுக்களும் தானமாகக் கொடுக்கப் பட்டுள்ளன. (227/49–40) பராந்தகனின் 33வது ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் கோயிலான் காளையன் என்பவன் தயிரமுதுக்காக அறுபது ஆடுகள்தானமாக அளித்துள்ளார். (974/7)

கோயில் வருமானம் : முதலாம் வரவு 1473 கலம் நெல்லும் 79 கழஞ்சு பொன்னும் ஆகும். இதனைக்கொண்டு செய்ய வேண்டிய செலவுகள் கண்காணி நாயகம், கரணத்தான், பண்டாரி, வாரியர், நகரத்தார் ஆகியோர் உடனிருக்க முடிவு செய்யப் பட்டது. (228 / 39–40)

திருப்பணி : சில ஆண்டுகள் பழுதடைந்து கிடந்த கோபுரம், மண்டபங்கள் ஆகியவற்றை நரசிங்கதேவ மகாராஜர் காலத்தில், அவரது அதிகாரியான அண்ணமரசர் முன்னின்று திரும்பவும் கட்டியதோடு அரசனின் நன்மையின் பொருட்டு வழிபாடுகளும் மீண்டும் நடக்க வழிவகைகள் செய்யப்பட்டன. (250/39–40)

வங்கவராயன் புகழ் : இக்கோயிலில் உள்ள இரண்டு பாடல்கள் வங்கவராயன் புகழ் பாடுகின்றன. இப்பாடல்களில் வெள்ளாற்றுப் போரில் பங்கு கொண்டமை கருதி இவன் பாராட்டப் படுகிறான். (கல்வெட்டு முழுமையும் படிக்க முடிய வில்லை) எழுத்தமைதி கொண்டு இவை கி.பி. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று எண்ண இடமுண்டு (270/39–40).

நாவலூர்க்கோல் : முதலாம் இராஜராஜன் கல்வெட்டில் ''... ஸ்ரீ கோயிலில் அடியருளுகிற கூத்தர்க்கு இடுவித்த பாதபீடம் ஒன்னாற் சேந்த கருவுந்தராவுமாக நாவலூர்க் கோலால் நிறை

ஆயிரத்தெழு நூற்றையம்பதின் பலம்'' என்று உள்ளது. எடைக் கருவி நாவலூர்கோல் என்று பெயர் பெற்றிருந்தாகக் தெரிகிறது. (998/7)

இறைவர்க்கு இருவர் இணைந்து தானம் கொடுத்தல் : விக்கிரம சோழன் காலத்தில் செம்மணங்கர், சிறுவரப்பூரைச் சேர்ந்த ஏரன் எழுவன், ஈழவன் கொட்டி ஆகிய இருவர் இவ்வூர் இறைவர்க்குத் தானம் கொடுத்துள்ளனர். கல்வெட்டு முழுமை பெறாது உள்ளது. எனவே என்ன தானம் கொடுத்தனர் என்று தெரியவில்லை. (231/39–40)

அய்யனியக்கன் : இவன் இராஜாதித்த தேவரின் பரிவாரத்து வீரன் ஆவான். இவன் மூன்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றான் மூன்றிலும் நொந்தாவிளக்கெளிக்க ஆடு தானமாகக் கொடுத்த செய்தியே உள்ளது. (957, 961, 962/7)

கரணநாயன் குமாரடி திருவரங்கன் : இவன் இராஜாதித்த தேவரின் கரணநாயன் ஆவான். இரு கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றான். ஒன்றில் இறைவனுக்குப் இருகழஞ்சு நிறைபட்டம் அளித்ததும், மற்றொன்றில் நொந்தா விளக்கொன்று தானமாகக் கொடுத்ததும் குறிக்கப்படுகிறது (964, 978/ 7)

கோயிலான் காளையன் : முதலாம் பராந்தகனின் 29வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் கோயிலான் காளி என்று குறிக்கப் படுகிறான். 32வது கட்சியாண்டு கல்வெட்டில், கோயிலான் காளையன் என்று உள்ளது. இருவரும் ஒருவர் ஆகலாம். இரண்டு கல்வெட்டுகளும் இவன் தயிர முதுக்கு வகை செய்ததையே குறிக்கின்றன. (974,977/7)

வேட்டைக்காரன் : சேந்தமங்கலத்து வேட்டைக்காரன் கரிகாலசேழன், காட்டுப்பருக்கல் வேட்டைக்காரன் அத்திமல்லன் என்று இருவேட்டைக்காரர்கள் முதலாம் குலோத்துங்கன்

காலக்கல்வெட்டுகளில் விளக்கெரிக்கத் தானம் கொடுத்தோராகக் குறிக்கப்படுகின்றனர். (989, 995/7)

மன்றாடி : மன்றாடி என்ற சொல் இங்குள்ள பல கல்வெட்டு களில் கையாளப்பட்டுள்ளது. மனறாடி என்பது வழக்காடுபவன், இடையன் என்று இரு பொருள்படும். இங்கு இடையன் என்ற பொருளில் வருகிறது. ஆடுதானமாகக் கொடுக்கப்பட்டபோது அவை வளர்க்க இடையர்களிடம் விடப்பட்டன. அவர்களை மன்றாடி என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இவ்விதம் மன்றாடிகள் என்ற சொல் ஐந்து கல்வெட்டுகளில் வருகிறது. (984, 987, 994, 995, 996)

பரிவாரத்துச் சேவகன் சேவை : மேனிலைப் படை வீரர்கள் மட்டுமே இவ்வூர் இறைவர்க்கு நிவந்தங்கள் அளித்தனர் என்றில்லை. அவர்களின் சேவகனும் அளித்துள்ளான. ''... மலையான் பரிவாரத்து சேவகன் திருக்குன்றப் பொழ செந்த குமரன் வைத்த நொந்தா விளக்கு ஒன்று'' பராந்தகனின் 33 வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இது. (973/7)

மடைப்பள்ளிப் பெண்டிரின் தானம் : பெருமாள் கோவில் மடைப்பள்ளியில் சேவகம் செய்த பெண்டிரும் சிவனுக்கு விளக்கெரிக்க வகை செய்துள்ளனர். இது பராந்தகனின் 39 ஆட்சியாண்டில் நடந்துள்ளது. (981/7)

வெளியூர் சென்று சிலையெடுத்த வியாபாரி : கோவலம் பாட்டம். என்ற ஊரில் உள்ள கைலாசநாதர் கோயிலில் திருநாவலூரைச் சேர்ந்த மருதான் திருகட்டீஸ் வரமுடையான் என்னும் வியாபாரி தஷிணா மூர்த்தி சிலையெடுத்துள்ளான். (11/1934–35)

பராந்தகன் காலத்து பிற நாடுகள் : இவ்வூர் இறை வனுக்குப் பிற ஊர்களைச் சேர்ந்த பலரும் தானம் கொடுத் துள்ளனர். எனவே அந்நாடு மற்றும் ஊர்களின் பெயர்கள்

இவ்வூர்க் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. கடம்பர் நாடு (956) நெடுங்காலை நாட்டு ஈசா நமங்கலம் (958) மங்கல நாட்டுச் சோமங்கலம் (966) நெடும்புறையூர் நாடு (961) கிழான்மூர் நாட்டுத் திருக்குமாரமங்கலம் (971). கோ நாட்டு உறத்தூர் கூற்றத்துக் கொடும்பாளூர் (975) மலை நாட்டு மடைவாட்க்கை (976) மல்லன் முழான் நாடு (997) ஆக பல பெயர்கள் குறிக்கப்படுகின்றன. (அடைப்புக் குறியிலுள்ள எண்கள் S.I.I. VII ல் காணும் கல்வெட்டு எண்கள் ஆகும்.)

பராந்தகனின் 31 கல்வெட்டுகளில் காணப்படும் சில தனிமனிதர்களின் பெயர்கள் :

1. பன் மருந்திருந்சேநன் கோயில் (984)
2. மாளுவச் சாரட்டங்கன் சாத்தன் (955)
3. மூர்க்கண்டிரதர் (956)
4. அய்ய நியக்கன் (957, 961, 962)
5. மாநவல்லவன் கண்ணன் (958)
6. அழிசிகுலன் ஊரன் சிங்கன் (959)
7. குமாரடி திருவரங்கன் (964, 978)
8. கண்டன் காமன் (967)
9. அரையன் சோழமாராயன் (969)
10. செலேட்டி பெருமான் (970)
11. வேள்குல சுந்தரன் (971)
12. முருகன் விச்சியன் (972)
13. திருகுன்ற போழசேந்த குமாரன் (973)
14. கோயிலான் காளையன் (974)
15. இயக் கனி ராமன் (976)
16. கல்லன் ஆதித்தபடாரி (975)
17. எண்ணை நடையன் வண்ணக்கன் வடுகன் (977)
18. முருகடி விக்கியன் (1010)
19. சித்திர கோமளம் (965) பெண்
20. அய்யடினக்கன் (981)

▪ ▪ ▪

IV. இலக்கியம்

தேவாரத்தின் ஏழாம் திருமுறையில், 'திருவெண்ணெய் நல்லூரும் திருநாவலூரும் என்ற பதிகத்தைச் சுந்தரர் பாடியுள்ளார். அப்பர் பாடியதாகவும் குறிப்பு உள்ளது. ஆனால் பாடல் இல்லை. சேக்கிழார், பெரிய புராணத்தில் இவ்வூரைச் சிறப்பாகப் போற்றுகிறார். அடுத்த அருணகிரிநாதர் இத்தலனத்தினைப் பாடியுள்ளனர் பிற்காலத்தே 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவெண்ணைநல்லூர் இராசப்பக் கவிராயர் என்பவர் திருநாவலூர்ப் புராணம் என்னும் நூலை எழுதியுள்ளார்.

நாவலூரார் நாவில் நாவலூர் :

நாவலூரரான சுந்தரர் தன்னை இறைவன் தடுத்தாட் கொண்டமையைக் கூறும் முகத்தான் இவ்வூர்ப்பதிகத்தின் பாடல்களில் ''வெண்ணெய் நல்லூரில் வைத்தென்னை ஆளுங் கொண்ட'' என்றே கூறுகிறார். தன்னை ஆட்கொண்ட இறைவன் உறைவதற்கு இடமாவது இந்த நாவலூரே என்ற பொருளில்,

'' நாவலனார்க்கிடமாவது நந்திருநாவலூரே''

என்கிறார்.

'' உம்பரார் கோனைத்தின் தோன்முரித்தார் உரித்தார்களிற்றைச்
செம்பொனார் தீவண்ணர் தூண்ண நீற்றர் ஓர் ஆவணத்தால்
எம்பிரானார் வெண்ணெய் நல்லூரில் வைத்தென்னை ஆளுங்கொண்ட
நம்பிரானார்க்கிடமாவது நந்திருநாவலூரே''

மறை ஓதும் வேதியன் உருவில் வந்து ஆதியில் எழுதிக்கொடுத்த ஓலை எனக்காட்டி திருமணத்தின் பாதியில் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டதை மேற்கண்ட பாடலில் குறிப்பிடுகிறார்.

தன்னை வளர்த்த மன்னன் நரசிங்க முனையரையுரையும் நினைவு கூறும் வண்ணமாக,

'' நாதனுக்கூர் மக்கூர் நரசிங்க முனையரையன்
ஆதரித்(து) ஈசனுக்காட்செயுமூர் அணி நாவலூர்''

எனத் திருநாவலூர்ப் பதிகத்தின் இறுதிப் பாடலில் குறிப் பிடுகிறார்.

திருவெண்ணெய் நல்லூரில் ''பித்தா பிறைசூடி'' என முதன் முதலில் பாட ஆரம்பித்துப் பதிகம் பாடினார். அடுத்துத் தன்னூரான திருநாவலூர் வந்து ஒருபதிகம் பாடியுள்ளார் என்பதைப்

'' பூவலருந்தடம் பொய்கைத் திருநாவலூர் புகுந்து
தேவர் பிரான் றனைப்பணிந்து திருப்பதிகம் பாடினார்

என்கிறார் சேக்கிழார். இதுவே திருநாவலூர்த் தனிப்பதிகம் பாடியமைக்குச் சான்றாகும். ஆனால் அப்பதிகப் பாடல்கள் கிடைக்கவில்லை.

பெரிய புராணத்தில் நாவலூர் :

பல்வகை நலங்களும் பெற்ற நாடாய், வாய்மையில் குன்றாத் திருமறையவர் வாழும் ஊராய்க் காட்டுகிறார் சேக்கிழார்.

'' பெருகிய நலத்தான் மிக்க பெருந்திரு நாடுதன்னி
வருமறைச் சைவ மோங்க வருளர்குலவதரித்த
மருவிய தவத்தான் மிக்க வளம்பதி வாய்மை குன்றாத்
திருமறை யவர்கண்டுங் திருநாவலூ ராமன்றே''

என்கிறார். மேலும் பலவிடங்களில் சுந்தரரை ''நாவலூரான்' என்ற குறிப்பிடுகிறார்.

திருப்புகழில் திருநாவலூர் :

அருணகிரிநாதர் திருநாவலூர் முருகனைப்போற்றி ஒரு பாடல் பாடியுள்ளார். அதில் நான் மறை ஊர்ந்த நான்முகனுக்குத் தந்தையான நாரணன் மெச்சும்படியான முருகனே, என அழைத்து, "ஆவிதளர் வுற்று வாடுமெனை நித்தமாசை கொடணைக்க வர வேணும்" என்று திருநாவலூரில் உள்ள முருகனை வேண்டுகிறார். மேலும்,

" சேலெனும் விழிச்சி வேடுவர் சிறுக்கி
சீரணி தனத்தி லணைவோனே
சீதவயல் சுற்று நாவல் தனிலுற்ற
தேவர்சிறை விட்ட பெருமாளே" (21: 270)

நீர் வயல் சூழ்ந்த திருநாவலூரில் உறையும் பெருமாளே என்று பாடுகிறார்.

திருநாவலூர்ப் புராணத்தில் திருநாவலூர் :

நான்கு திசைகளிலும் புகழ்பெற்றதாம் திருநாவலூர், மேலும் தலங்கள் அனைத்திற்கும் தலைமைத்தலம் இது என்கிறார் இராசப்பக்கவிராயர்.

" நாற்றிசை புகழ் திருநாவலூரோ" (9)

" தலமனைத்தினுந் தலைமை மீக் கொண்டொருதலமுன்
டுலகுதாங்கிய வுரகனு முரைப்பதற்கரிய"

உரைப்பதற்கு அரிய தலமாம் இத்தலம் என்கிறார்.

இயற்கை வளம் :

வாழை, அசோகு, தாழை, சண்பகம், புன்னகம், மாதுளம், எலுமிச்சை, மல்லிகை, முல்லை, அலரி, செவ்வந்தி, சோதாம்பல், என பூவும் காயுமாக திருநாவலூரின் இயற்கை அழகை எடுத்துக் கூறுகிறார்.

" மல்லிகை வலம்புரி மயிலை மாலதி
முல்லையோடலரி செவ்வந்தி மாலதி
மெல்லிய மலர் மது விருந்து செய்திட
ஒல்லொலி வண்டின முண்டு றங்குமால்" (14)

" தளைய விழ் நறிய சோதம்பனுற் பல
முளரிய செழுமுகை முத்த மொள் வளை
வளமலி நிறை தடமாதர் வாய்விழி
யிளமுலை நகை கழுத்தெழில் விளக்குமால்." (16)

ஆடல் பாடல் :

" ஆடுவர் மங்கை யரமுதவின்னிசை
பாடுவர் நறவுமிழ் பன்மலர்த் தொடை
சூடுவர் கணவர்தங் தொங்கலம் புயங்
கடுவருடுவர் குலாவு வாரரோ" (31)

ஆடியும் பாடியும் பின் கூடியும் குலாவி மகிழ்ந்தனர். இது போதாது என்றெண்ணி பொது இடத்து நடனம் காணவும் விழைந்தனர் போலும், அதனால் நடன மண்டபம் ஒன்று கட்டுவித்தனர்.

" நாதமோடவிநய நடனமண்டப
மேதினியயோர்க் கெலாவியப் நல்குமால்" (34)

தேவர்மாளிகையோ என வியக்கும்படியும்

" தேவர் மாளிகை யெழிற் சித்திரங்களோ
காவியங் கண்ணியர் கவினையோ நகர்
மேவிய வளங் கொலோ வியந்து நோக்கின
ரோவியம் போலிமையா மனுற்றனர்" (35)

அதில் உள்ள சித்திரங்களைக் கண்டு வியந்து பார்த்தவர், ஓவியம் போல் கண் இணைக்காமல் நின்றனராம்.

ஐயவர் வாசம் செய்தத்தலம் :

சடையனார், இசைஞானியார்! சுந்தரர், சண்டேசுரர், நரசிங் முனைரையர் ஆகிய ஐவரும் வாழ்ந்த இடம் இத்தலம். எனவே, இத்தலத்தினும் வேறு நற்றலம் உண்டோ என்று விளவுகிறார். இங்குக் குறிப்பிட்ட ஐவரில் நால்வர் 63 நாயன்மார்களில் இடம்பெற்றவர்.

" சடையனாரிசை ஞானி சுந்தரர் சண்டேச்சுரர் நன்
னடைதருங்குண நரசிங்க முனைய ரென்றைவர்
விடையுகந்தவர் பதம் விருப்புற்று வாசஞ்செய்
துடைய நற்றல மத்தலமன்றி வேறுளவோ." (42)

இவ்வாறு பல்லளமும் பெற்று சிறந்து விளங்கியது திருநாவலூர்.

1. சுந்தரரின் தேவாரம் – ஓராய்வு :–

சுந்தரர் திருப்பாடல்கள் துள்ளு நடையினவாய், எதுகை, மோனை, முரண் முதலிய தொடைகள் இயைந்தனவாய் அடுக்குச் சொற்களை ஆங்காங்கே கொண்டு, பக்தி நலம் பூண்டு, சொல்நயமும் பொருள் நயமும் உடையதாய், விளங்குகிறது. மூவர் வாக்குகளையும் பிறபக்தர்களில் பாடல்களையும் ஒப்பு நோக்கிக் கண்ட ஒருபுலவர்,

'' வாக்கிற் கருணகிரி, வாதவூரர் கனிவில்
தாக்கிற் றிருஞான சம்பந்தர் – நோக்கிற்கு
நக்கீரதேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல்''[1]

என்று கூறிச் சுந்தரர் வாக்கை 'நயத்துக்குச் சுந்தரனார்! என்று சிறப்பாகக் கூறியுள்ளார்.

சுந்தரர் பாடிய பதிகத் தொகை 100?

உமாபதி சிவம் பாடிய திருமுறைகண்ட புராணத்தில் சுந்தரர் அருளிய திருப்பதிகம் முப்பத்தெண்ணாயிரம் என்று கூறிவிட்டு பின் ''நூற்றினால் வன்றொண்டர்'' என்று கூறுகிறது. தேவாரம் பாடிய மூவர் பதிகப்பாடல்களிலும் மிகக் குறைவான எண்ணிக்கையில் நமக்குக்கிடைத்திருப்பது சுந்தரர் தேவாரமே, ''பித்தா பிறைசூடி'' என்னும் திருப்பதிகம் தொடங்கி ''தானெனை முன் படைத்தான்'' எனும் திருப்பதிகம் ஈறாக 100 திருப்பதிகங் களைக் கொண்டுள்ளது.[2] இதனினும் அதிக எண்ணிக்கையில் பதிகங்கள் பாடியிருக்க வேண்டும் என்று ஊதிக்கும் விதமாக

சேக்கிழார் பெருமான், நம்பியாருரர் 114 தலங்களுக்குச் சென்று தேவாரப் பதிகம் அருளியதாகக் கூறுவார். இவற்றுள் 31, திருப்பதிகளுக்கு இவர் பாடிய பதிகங்கள் கிடைத்தில. அவை சேக்கிழார் காலத்து இருந்தனவென்றும் பின் அழிந்திருக்க வேண்டும் என்று நினைக்க இடமுண்டு. இப்போது 83 தலங்களுக்குரிய பதிகங்கள் கிடைக்கின்றன.[3] திருவாரூருக்கு மிகுதியாக 6 பதிகமும் திருநின்றியூர், திரு ஒற்றியூர், திருவாடு துறை, திருமுதுகுன்று ஆகிய திருப்பதிகட்டு 4 பதிகமும் ஆக 93 பதிகங்களாகும். இதனுடன் பொதுப் பதிகங்களாகிய திருத் தொண்டத்தொகை ஊர்த்தொகை, திருநாட்டுத்தொகை, முடிப்பது கங்கை, நம்பி என்ற திருப்பதிகம், நமக்கடிகளாகிய அடிகள் என்னும் பதிகம் ஆகிய ஆறும் சேர 99 பதிகங்களாகும். சேக்கிழார் சொல்லாது விடுத்த திருவிடையாறு எனும் தலப்பதிகமும் சேர 100 பதிகங்கள் ஆகும். சுந்தரர் பாடிய பாடற்றொகை இப்போது உள்ளபடி 1026 ஆகும்.

ஆறுமோர் நான்கு மோறொன்றினையும் :–

பத்துச் செய்யுட்கள் கொண்டேதே பதிகம் ஆகும். ஆனால் சில பதிக்ங்களில் பதினொன்றும், பன்னிரண்டும் ஆக பாக்கள் உள்ளன. இதனைச் சுந்தரரும் தமது பாடலில் குறிக்கின்றார்.

ஆருரன் உரைத்தன நற்றமிழின்
மிகுமாலையொர் பத்திலை கற்றுவல்லார்

என்றும்,

அடிகேள் உமக்காட்செய அஞ்சுதும் என்
றமரர் பெருமானை ஆருரன் அஞ்சி
முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே
மொழிந் தாறுமோர் நான்குமோ ரொன்றினையும்.[4]

என்று சுந்தரர் தமது வாக்கிலேயே அப்பதிகங்கள் பத்தும் பதினொன்றுமாக உள்ளமையைத் தெரிவித்துள்ளனர்.

''தரவின்றாகித் தாழிசை பெற்றும்''[5] எனத் தொடங்கும் தொல்காப்பியச் செய்யுளியல் நாற்பாவின் உரையில் பதிகப் பாட்டு பற்றிய விளக்கத்தினை நச்சினார்க்கிளியர் கூறும் போது.

'' இனி பத்தும் பதினொன்றும் பண்ணிரண்டுமாகி
ஒரு பொருள் மேல் வரும் பதிகப்பாட்டு''

என்கிறார்.[6]

புலவர்களுக்கு நல்லுரை :—

பொய்மையாளரையும், செல்வர்களையும், புலவர்களே பாடதீர்கள். எம்பெருமான் சிவனையே பாடிடுங்கள் என்று நல்லுபதேசம் செய்கிறார் சுந்தரர்.

தம்மையே புகழ்ந்திச்சை பேசினுஞ்
சார்விநுந் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகவார் பாடுமின் புலவீர்கள்
இம்மையே தருஞ்சோறுங் கறையும்
ஏத்தலாமிடர்க் கெடலுமாம்
அம்மை யேசிவ லோக மாள்வதற்
கியாதும் ஐயுறு வில்லையே.[7]

மன்னர்களுக்கும் ஒருரை :

முடிசார்ந்த மன்னரும் முடிவில் பிடிசாம்பல் ஆவரன்றோ? அதனால் அவர்களுக்கும் நல்லுரை கூறுகிறார்.

'' மத்தயானை யேறி மன்னர்சூழ வருவீர்காள்
செத்தபோதி லாருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்தவுள்ள மாற்ற வேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர் கோயிலெதிர் கொள்பாடி யென்ப தடைவோமே''[8]

பதிகப்பாடல்களின் போக்கு :—

ஒவ்வொரு பதிகத்தின் முதற் பாடலின் ஈற்றடியாக அமைகின்ற சொற்பொருட்கருத்தே அவ்வப்பதிகப் பாடல்கள்

முடியும் வரையிலும் எல்லாப்பாடல்களிலும் அமைந்து விளங்குகின்றன. இத்தன்மை இசைப்பாடல்களில் அமையும் பல்லவி போன்று உள்ளது. பலரும் சேர்ந்து வழி நடக்கும் போது வழிநடை வருத்தம் தெரியாவண்ணம் பாடிச் செல்லும் வழிநடைப் பாடல்கள் போலவும் உள்ளது.[9]

'' புறம்பயந் தொழுப் போதுமே''[10]
'' பரிவுடையார் உறை பூவனம் ஈதோ''[11]
'' எதிர்கொள்பாடி என்பதடை வோமே''[12]
'' கையன் இடம்... கச்சி அனேகதங்காவதமே''[13]
'' அஞ்சலென்றருளாய் யாரெனக்கு உற(வு)
அமரர்களேறே''[14]
'' கடல் நாகைக் காரோணம் மேனியிருந்தீரே''[15]
'' நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே''[16]

பாடல்போக்கு :—

சுந்தரர் பாடல்கள் இறைவனை நோக்கித் தோழமையுடன் ஒன்றை வேண்டுதாக அமையும். நட்பினர்க்கு உரிய அன்பும், கேலியும், கிண்டலும், பழிப்பது போலப் புகழ்தலும் ஆகியவை ஆங்காங்கே அமைந்திருக்கும். இறைவன் உயிர்கட்கெல்லாம் முதல்வன் என்ற பக்தியுணர்வு தொனித்தாலும், அவர் தமக்கு மிகவும் நெருங்கியவர் என்ற உணர்வு வெளிப்படுவனவாகவே அவை விளங்கும். ஆகவே தான், சுந்தரர் பின்பற்றிய நெறியைத் தோழமை (சக) நெறி என்று பெரியோர் கூறுவர். இறைவரும் தாமும் என்ற வேறுபாட்டு உணர்வு இல்லாமல், அவரும் தாமும் ஒன்று கலந்தவர் என்ற ஒருமையுணர்வாகியயோகம் இவர் பாடலில் காணப்படும்.

பழிப்பது போலப் புகழ்தல் :—

''எமக்குத் தோன்றிய கருத்துகள் பலவற்றையும் சொல்லி, உம்மை நாங்கள் வாழ்த்துகின்றோம்; எனினும் நீர் எமக்கு இல்லை

என்றோ உண்டு என்றோ வாய்திறந்து ஒன்றும் கூறாமலும், ஒரு பொருளும் தாராமலும் இருக்கின்றீர்; எம்மைப் பணிகொள்ள நீர் இருத்தல் எவ்வாறு? என்று சற்றுக்கடுமையாகவே சுந்தரர் இறைவனை வினவுகின்றார்.

'' வல்லது, எல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தினாலும் வாய்திறந்து, ஒன்(று)
இல்லை என்னீர் உண்டும் என்னீர்
எம்மை ஆள்வான் இருப்ப(து) என்னீர்''[17]

மேலும்

'' கையது கபாலம் காடுறை வாழ்க்கை
கட்டங்கம் ஏந்திய கையர்
மெய்யது புரிநூல்; மிளிரும்புன் சடைமேல்
வெண்திங்கள் சூடிய விகிர்தர்''[18]

என்றும்,

'' தங்கள் தங்கு சடைக்கண் மேலோர்''[19]

என்ற பாடலின் இறுதி வரியில், ''உங்களுக்காட் செய்ய மாட்டோம்'' என்றே கூறுகிறார். இவ்வாற இறைவனை பழிப்பது போலக் கூறி புகழ்கின்றார்.

நிலையாமை கூறுதல் :—

சுந்தரர் நிலையாமைகயை நன்கு உணர்ந்தவர். எனவே தம் பாடல்களில் அவற்றை விதந்து ஓதுகின்றார். ''ஒரு புணற் கரையாம் இளமை, உறங்கி விழித்தால் ஒக்கும் இப்பிறவி'' என்ற அடிகளில் இளமை நிலையாமையும் யாக்கை நிலையாமையும் கூறுகின்றார். பயனில்லாமல் மனிதப்பிறவி கழிவதனை ஒருபாடலில் கூறி, அப்பிறவியின் பயனைப் பெற்றுக் கடைதேறு வதற்கு வழி சொல்லுமாறு இறைவனையே வேண்டுகின்றார்.

'' நல்வாயில் செய் தார்நடந் தார் உடுத்தார்
நரைத்தார் இறந்தார் என்று நானிலத்தில்

சொல்லாய்க் கழி கின்றது அழிந்து அடியேன்
தொடர்ந்தேன் உய்யப் போவது ஓர் சூழல்
சொல்லே''[20]

என்றும், உடம்பினது இழிவினை, ''ஒருநெல் வாலூன்ற வருந்தும் உடம்பு'' என்று குறிப்பதன் மூலமாகப் புலப்படுத்துகின்றார். யாக்கை மிக விரைவில் கழியக்கடும் என்பதை ''மனக்கோலமதே பிணக்கோலமதாம் பிறவி இதுதான்'' என்று கூறுவதன் மூலம் தெளிவிக்கின்றார். மேலும் தன் கூற்றாகவே ''வெறுத்தேன் மனைவி வாழ்க்கையை விட்டொழிந்தேன்''[21] என்றே கூறுகிறார். எதுவுமே நிலைத்து நில்லாத நிலவுலகில், சிற்றின்பத்தை விட்டு பேரின்பத்தை நாடவேண்டும் என்கிறார்.

சுந்தரர் வாக்கில் வள்ளல் பாரி :—

'' பாரி பாரியென்று பலவேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்''[22]

என்றார் பாரியின் நண்பர் கபிலர். வள்ளல் பாரியை சுந்தரரும்.

'' கொடுக்கி லாதனைப் பாரியே என்று
கூறினுங் கொடுப்பார் இலை''[23]

என்று சிறப்பித்துக் கூறுகிறார்.

நம்பியாரூராக்கு முன்னோடியாக விளங்கியோர் சம்பந்தரும், நாவக்கரசரும் ஆகும். அவர்களின் தேவாரப் பதிங்களில் பெரிதும் ஈடுபாடுடையவர் என்பது அவிவிருவரை யும் குறித்து சுந்தரர் தமது பாடல்களில் பொதிந்துள்ள செய்தி களால் விளங்கும்.

'' நல்லிசை ஞானசம்பந்தனு நாவினுக்
கரசனும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானை''[24]

'' இணைகொள் ஏழெழுநூ றிருபனுவல்
ஈந்தவன் திருநாவினுக் கரையன்''[25]

" நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்"[26]

இவ்வாறு பெரியோர்களைப் புகழ்பவர், தன்னைப் பற்றிக் கூறும் போது,

**" ஞாலந்தான் பரவப்படுகின்ற நான்மறை அங்கம் ஓதிய
நாவன், சீலத்தான் பெரிதும் மிகவல்ல சிறுவன்
வன்றொண்டன் ஊரன்"[27]**

என்று மிக அடக்கமாகக் கூறிக்கொள்கிறார்.

பதிகங்களில் நம்பியின் வாழ்க்கை வரலாறு :—

பெரும்பான்மைப் பதிகங்கள் நம்பியின் வாழ்க்கை வரலாறகவே அமைந்திருக்கின்றன எனலாம். இறைவன் ஆட்கொண்டது முதல் கயிலைக்கு அழைத்துக் கொண்டதுவரை அவர்தம் வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளும் பதிகங் களில் காணப்படுகின்றன. நம்பியாரூரர், முன்னை, வினைவழி, இறைவன் அருளாணைப்படி திருவாரூரில் பரவையாரையும், திருவொற்றியூரில் சங்கிலி யாரையும் திருமணம் செய்து கொள்கிறார். சேரமான் பெருமாள் நாயனாரோடு நட்புபூண்டு அவருடன் சேர்ந்தும் சில தலங்களுக்குச் சென்று வழிபடுகிறார். தாம் உரைத்த உறுதிமொழியில் தவறியதற்காகக் கண்ணிழந்து மீண்டும் கண்பெறுகிறார். இறைவனிடம் கண்பெற்றது மட்டுமின்றித் தமக்கு வேண்டும் போக போக்கியங்களையும் இறைவனிடமே வேண்டுகிறார். இறைவன் இவருக்காகப் பொன்னளிக்கிறார். பொதி சோறு அளிக்கிறார். இரந்து வந்து உணவு ஊட்டுகிறார். இறைவனிடம் தோழமை நெறியில் நின்று அசதியாடி வேடிக்கையாக விளையாடிப் பாடிப் பரவுகின்றார். இறைவன் அருளால் செங்கல் பொன்னாக மாறுகிறது. காவிரி ஆறு விலகி வழிவிடுகிறது. இறைவன் திருவருளால் முதலை விழுங்கிய பாலனைச் சுந்தரர் மீட்டு வரவழைத்தும், பிறவாறும் சில அற்புதங்களைச் செய்கிறார். இவை எல்லாவற்றையும் குறித்த குறிப்புகள் அவர்தம் திருப்பாடல்களில் உள்ளன.[28]

**" வெங்கராவுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளையானையின் மீதேறிச் செல்லுமே
மங்கை பாகனைத் தூது நடத்துமே
மருவியாறு வழிவிட நிற்குமே
செங்கலானது தங்கம தாக்குமே
திகழும் ஆற்றிட்டுச் செம்பொன் எடுக்குமே
துங்க வான்பரி சேரற்கு நல்குமே
துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே"[29]**

என்ற தனிப்பாடலில் சுந்தரரின் அற்புதங்களைத் தொகுத்துக் காண்கிறோம்.

வள்ளலாரின் பாராட்டு :—

ஏழாம் திருமுறையான சுந்தரரின் தேவாரப்பாடல்களைப் படித்து அதில் அமிழ்ந்து போன இராமலிங்க அடிகளார், தமது அனுபவத்திருவாக்காகப் பின்வருமாறு கூறுகிறார்.

**" தேன் படிக்கும் அமுதாம் உன்
திருப்பாட்டைத் தினந்தோறும்
நான் படிக்கும் போதென்னை
நானறியேன், நா ஒன்றோ
ஊன் படிக்கும் உளம்படிக்கும்
உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான் படிக்கும் அனுபவங்கான்
தனிக்கருணைப் பெருந்தகையே"[30]**

என்று 'ஆளுடைய நம்பிகள் அருள்மாலை'யில் புகழ்ந்து கூறுகிறார்.

அடிக்குறிப்புகள்

1. பெருந்தொகை பாடல் 1802.
2. தெய்வ தமிழ் – சென்னை பல்கலைகழக வெளியீடு – 1975. பக். 84.
3. Glimpses of Tamil Culture based on Periyapuranam K. Nambi A rooran - P - 119.

4. 7. 3–10, (ஏழாம் திருமுறை – 3ஆம் பதிகம் – 10ஆம் பாடல்); 7.2.11.
5. தொல்காப்பியம் – செய்யுளியல் – நூற்பா. 149.
6. தெய்வ தமிழ் – சென்னை பல்கலை கழக வெளியீடு – 1975 பக். 80
7. 7. 34–7
8. 7–7–1
9. தெய்வ தமிழ் – சென்னை பல்கலை கழக வெளியீடு. 1975. பக். 89
10. 7–11–1
11. 7–11–1
12. 7–7–1
13. 7–10–1
14. 7–70–1
15. 7–46–1
16. 7–98–1
17. 7–5–4
18. 7–14–7
19. 7–5–2
20. 7–3–1
21. 7–4–8
22. புறநானூறு 107
23. 7–34–2
24. 7–67–5
25. 7–67–2
26. 7–62–8
27. 7–54–11
28. தெய்வ தமிழ் சென்னை பல்கலை கழகம் – 1975 – பக் – 91
29. பெருந்தொகை 1876
30. ஆளுடைய நம்பிகள் அருள்மாலை – இராமலிங்க அடிகள் 3253.

சுவடிகள் நூலகம் மற்றும்
-4 SEP 2012
சென்னை-5.

★★★

2. பெரிய புராணம் காட்டும் சுந்தரர் வரலாறு

வரலாறு உணர்த்தும் உண்மை ஒருவகையானது. புராணங்கள் உணர்த்தும் உண்மை மற்றொரு வகையானது. இந்த இடத்தில் நிழற்படக் கலைக்கும் ஓவியக்கலைக்கும் உள்ள வேறுபாட்டினை நினைவிற் கொள்ளலாம். வரலாறு உள்ளதைக் கூற ஏற்பட்டது. புராணம் உள்ளதைக் கூறுவதும் உண்டு, உள்ளதைப் புனைந்து கூறுவதும் உண்டு. இல்லாததை இருப்பது போல் கூறுவதும் உண்டு.[1] வரலாற்று நூல்கள் தக்க மூல ஆதாரங்களின் துணை கொண்டே எழுதப்படுகின்றன. திருமுறைகள், கோவிற்கல்வெட்டுகள், செப்பேடுகள் சாசனங்கள், ஆகியவற்றிலிருந்து அகச்சான்றும், செவி வழிச் செய்திகள் போன்ற புறச்சான்றும் கொண்டு வரலாற்று நூலாகத் தமது பெரிய புராணத்தைச் சேக்கிழார் படைத்துள்ளார்.[2] தமிழ் நாட்டுக் கல்வெட்டுகளையும், சமகால இலக்கியங்களையும் ஆதாரமாகக் கொண்டு முதன்முதல் புராணம் இயற்றிய பெருமை பெரியபுராணம் அருளிய சேக்கிழார் பெருமானுக்கே உரிதாகும் என்றால் அது மிகையாது.[3] எடுக்கும் மாக்கதையின் தொடக்கமும் முடிப்பும் :– திருத்தொண்டர் திருவந்தாதி ஒவ்வொரு நாயனாரின் வரலாற்றையும் தனித்தனியே கூறிற்று.[4] அவ்வாறின்றிச் சேக்கிழார் அனைத்தையும் தொகுத்து வழங்குகின்றனர். திருமலைச் சருகத்தைக் காவியத்தின் தொடக்கத்தில் அமைத்தார். அச்சருக்கத்தில் கைலைமலையில் "சிவன்றன்னையே உணர்ந்து ஆர்வந் தழைக்கின்றவர்"[5] ஆகிய உபமன்னிய முனிவர் "பத்தராய

முனிவர் பல்லாயிரர் சத்தயோகிகள் சூழஇருந்துழி'' சுங்கன் ஓர் ஒளி ஆயிர ஞாயிறு பொங்கு பேரொளி போன்று முன் தோன்றிடச் ''சூழ்ந்து இருந்தாரெல்லாம் இங்கு இது என்சொல் அதிசயம்''[6] என்றதும், உபமன்னிய முனிவர் ''தென்றிசை வந்த நாவலர் கோன் ஆகிய வன்றொண்டன் எந்தை யாரருளால்'' மீண்டும் கைலைக்கு எழுந்தருளுகின்றான் எனச் சொல்லி,[7] அந்த ''வன்றொண்டன் தம்பிரானைத் தன் உள்ளந் தழிஇயவன், நம்பியாருரன் நாம் தொழுந்தன்மையான்'' என்றுகூறி, நம்பி யாருரது வரலாற்றை[8] ''நன்று கேட்க விரும்பும் நசையினோம் இன்று எமக்கு உரை செய்தருள் என்று முனிவர்கள் வேண்ட, நம்பியாருரர் கைலையில் ஆலால் சுந்தரராய் இருந்து, சிவன், அருளால் தமிழ்நாட்டில் சென்று அவதரித்தது முதலாக அவரது வரலாற்றை உபமன்யு கூறலானார் என்று கதையைத் தொடங்கினார்.[10] பின் தடுத்தாட்கொண்ட புராணத்தில் திருத் தொண்டத் தொகை தோன்றிய வரலாற்றைக் கூறி, அதன்பின் திருத்தொண்டத் தொகையின் ஒவ்வொரு பாட்டின் முதல் தொடரால் ஒவ்வொரு சருக்கத்துக்கும் பெயர் அமைத்துத் தில்லைவாழ் அந்தனர்சருக்கம் முதலாக மன்னி சீர்ச்சருக்கம் ஈறாகப் பதினொரு சருக்கங்கள் அமைத்துத் திருத்தொண்டத் தொகையிற் போற்றப் பெற்ற நாயன்மார்களின் வரலாறுகளைக் கூறி, எல்லாவற்றினுக்கும் இறுதியாக வெள்ளையானைச் சருக்கத்தைப் பதின் மூன்றாம் சருக்கமாக அமைத்துச் சுந்தர மூர்த்தி நாயனார் கைலை சென்று சேர்ந்த வரலாற்றைக் கூறிச் சுந்தரமூர்த்திகளின் வரலாற்றையும் கூறி முடித்துக் காவியத்தை நிறைவேற்றியிருக்கின்றார்.[11]

முதலிலும் நடுவிலும் முடிவிலும் சுந்தரரே :—

சேக்கிழார் தம் காப்பியத்திற்குச் சுந்ததரரையே பாட்டுடைத் தலைவனாகத் தன்னேரில்லாத் தலைவனாகக் கொண்டு,[12] இடையே சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத் தொகையின்

பொருளை விரித்துரைக்கும் முறையில் அத்திருப்பதிகத்திற் போற்றப் பெற்றுள்ள சிவனடியார்களின் வரலாறுகளை நிரல்பட அமைத்து செல்கிறார்.[13]

திருக்கயிலாயத்தில் சிவனுக்கு அணுக்கத்தொண்டு புரிந்து ஆலா சுந்தரா், உமையின் சேடிகளாகிய கமலினி அனிந்திதை யென்னும் மாதர் மேல் மனம் செலுத்தின மையால், ''நீ மாதர் மேல் மனம் வைத்தனை; ஆதலால் தென்புவிமீது தோன்றி; அம்மெல்லியலாருடன் காதலின்பம் கலந்தனைவாய்'' என இறைவன் பணிக்க, திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமைசெய்யும் ஆதிசைவ வேதியர் மரபில் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் மகவாகத் தோன்றினார். நரசிங்க முனையரையரால் அன்புடன் வளர்க்கப் பெற்றார்.[14] புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியருடைய மகள்ளை மணம் பேசித் திருமணம் செய்யும் வேளையில் (இறைவன் கிழவேதியர் உருவில் தடுத்தாட்கொள்ள வருகிறார். உடன்படிக்கை ஓலையை) இறைவன் காட்ட கரணத்தான்[15] சோதித்த பின்னர் திருவெண்ணநல்லூர் அந்தணர்கள் தீர்ப்புக் கூறுகின்றனர். இறைவன் தன் உருக்காட்டி மறைய ''பித்தாபிறை சூடி'' எனும் திருப்பதிகம் பாடினார். பின் பல தலங்களையும் வணங்கித் திருவாரூரை அடைந்து இறைவனை வணங்கி வரும் நாளில், கமலினியாகிய பரவையாரைக்கண்டு, காதல் கொண்டு, திருமணமும் புரிந்து கொண்டார். திருவொற்றியூரில் அணிந்திதையாராகிய சங்கிலியாரை மணந்துகொண்டார். பரவையாரின் புலவிதீர்க்க வேண்டிய நள்ளிரவில் இறைவனையே இருமுறை தூது போக்கினார்.

> **''அன்னவர் முன்னும் பின்னும் மருங்கும் அணைவெய்த**
> **மின்னிடையார்பால்**
> **அன்பரை உய்க்கும் வரைவோடும் சென்னியில் நீடுங்**
> **கங்கைததும்பத்**
> **திருவாரூர் மன்னவனாராம் மறையவனார் பால்**
> **வந்துற்றார்'' — சிவன்**

தூது சென்று திரும்பும் காட்சியினைச் சேக்கிழார் பாடுகிறார்.

சுந்தரர் தம் தோழராகிய சேரமான் பெருமானுடன், திருவஞ்சைக் களத்திருக் கோயிலில் எழுந்தருளிய பெருமானை யிறைஞ் சித்தமது பாசத் தொடர்பினை நீக்கும்படி பதிகம் பாடினார். இறைவனும் வெள்ளையானையை அனுப்பியருள அதன்மீது அமர்ந்து களையாவுடலோடு சேரமான்பெருமாள் குதிரை மீதேறித் தம்மைத் தொடர்ந்து வரத் திருக்கயிலாயம் அடைந்தார். இவ்வாறு திருத்தொண்டர் புராணமாகிய இக் காப்பியத்தில் முதலிலும் நடுவிலும் முடிவிலும் இக்காப்பிய தலைவராகிய சுந்தரரது வரலாறு இடையீடின்றித் தொடர்ந்து அமைந்துள்ளது.

சுந்தரர் நிகழ்த்திய அற்புதங்கள் :—

தாம் உரைத்த உறுதிமொழி தவறியதற்காகக் கண்ணிழுந்து மீண்டும் கண்பெறுகிறார்; தனக்கு வேண்டும் போக போக்கியங் களையும் இறைவனிடமிருந்து பெறுகிறார்; பொன் பெற்றார்; போதிச்சோறு பெற்றார்; இறைவனே இறந்து வந்து ஊட்டவும் செய்கிறான்; செங்கல்லைப் பொன்னாக மாற்றுகிறார். காவிரி ஆறு விலகி வழியிடுகிறது. முதலை விழுங்கிய பாலனை உயிரோடு மிட்டுத் தருகிறார். திருமுதுகுன்றத்திட்ட பொன்னைத் (விருத்தா சலம்) திருவாரூர் குளத்தில் எடுக்கின்றார்.

சுந்தரரின் சமகால நாயன்மார்கள் :

சங்கரர் காலத்தே வாழ்ந்த பிற நாயன்மார்கள் பன்னிருவர் ஆவர், சடையநாயனார். இசை ஞானியார், நரசிங்கமுனையரைய நாயனார், சேரமான் பெருமாள் நாயனார். கழற்சிங்க நாயனார், செருத்துணை நாயனார், விரன்மிண்ட நாயனார், ஏயர் கோன் கலிக்காம நாயனார், சோமாசி மாற நாயனார் முதலியோர் ஆவர்.[16]

சுந்தரர் காலம் :—

கி.பி. 7—ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் கி.பி. 8ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் சுந்தரர் காலம் ஆகும் என்று க. வெள்ளைவாரனார் கூறுவார். கி.பி. 9 ஆம் நூற்றாண்டு

என்பாரும் உண்டு. சேரமான் பெருமாள்ணாயனார் சுந்தரர் காலத்தவர். எனவே, கி.பி. 8 ஆம் நூற்றாண்டு என்றும் சிலர் கூறுவர்.[17] சுந்தரர் மூன்றாம் நந்திவர்மன் காலத்து (கி.பி. 844.866) வாழ்ந்தவர் என்பாரும் உண்டு.[18]

அறிக்குறிப்புகள்

1. இலக்கிய ஆராய்ச்சி மு. வர்தராசனார் 5–13.
2. பெரியபுராண சொற்பொழிவுகள் – கழகவெளியீடு – 1970 – ப.21
3. பெரிய புராண சொற்பொழிவுகள் – கழகவெளியீடு 1970. பக் ருக.
4. திருத்தொண்டர் புராணவரலாறு பாடல் . 1
5. 321– 1939–40
6. திருதொண்டர் புராணம் பாடல் 1129
7. சோழவம்சம் சரித்திர சுருக்கம் டி.ஏ. கோபிநாதராவ் பக் 26–33
8. சேக்கிழார் சி.எம். ராமச்சந்திர செட்டியார். எஸ்.டி.எஸ்.Vol. 10 1932–33 பக்கம் 140–141.
9. 350 – 1927
10. பிற்கால சோழவரலாறு. Vol.2 டி.வி. பண்டாரத்தார். பக். 165–167.
11. சேக்கிழார் காலம் வி. சுந்தரேச வாண்டையார் எஸ்.டி. Vol. 35
12. பெரிய புராண ஆராய்ச்சி டாக்டர் மா. இராசமாணிக்கனார் பக். 8–22
13. Glimpses of Tamil culture based on Periyapuranam by. Nambi Arooram. Page.9
14. பெரிய புராண சொற்பொழிவுகள் கழகவெளியீடு – 1970 பக். க20
15. Administration and Social life under the Pallavas C. Minakshe' Page 58

    (பல்லவர் காலந்தொட்டுக் கரணம் என்ற சொல் நீதித்துறையில் பயன்படுத்தப்ப்டு வருகிறது.)
16. Glimpses of Tamil culture based on Periyapuranam by K. Nambi Arooran p.45
17. பெரிய புராணச் சொற்பொழிவுகள் கழக வெளியீடு – 1970 பக். கசபஅ.
18. பெரிய புராணச் சொற்பொழிவுகள் கழக வெளியீடு – 1970 பக். சாக.

***

3. திருநாவலூர்ப் புராணம்

புராணங்கள் பெரும்பாலும் வரலாற்றுப்பயன் இல்லாதவை என்ற கருத்து அண்மைக்காலம் வரை வரலாற்றாசிரியர்களிடையே நிலவி வந்தது. ஆனால் இப்பொழுது நம் நாட்டின் பண்டையப் பண்பாட்டினை உணர அவை ஆதாரம் மிக்க நூல்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. வரலாற்றாசிரியர்கள் திறனாய்வுக் கண் கொண்டு புராணங்களை ஆராய்ந்து வருகின்றனர்.

திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்த, கி.பி. 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராசப்பக் கவிராயர் என்பவர் திருநாவலூர்ப் புராணம் என்ற நூலை இயற்றினார். அதில் திருநாவலூரில் உறையும் பக்தசனேஸ்வரரை உமாதேவியார், விஷ்ணு, சண்டேசர், கருடன், ஆகியோர் பூசித்ததலம் என்கிறார். இத்தலத்தினை வணங்கினால் ''பலவினைய கற்றி மேலாம் பதம்ருள்நாவலூர் என்கிறார் மேலும்.

**'' ஆதியுகம் வில்வவன மிரண்டில் வன்னி மூன்றின்
மகிழாரணியங்
கீதில் சம்புபுரநான்கிறென்னு மதிற் சம்புநதத்
தீர்த்தமாடிக்
கோத கற்றுந் தொண்டேசர் பதந்தெரிசித்தோர் களவு
கொலை கட்காமப்
பாதகமற்றுங்கனலிற் பட்ட பஞ்சிற்றீர்ந்து பரகதி
சேர்வரால்''**

என்று, பாதகங்கள் தீயிற் பஞ்சாய்ப் பொசுங்கி நல்லுலகம் அடையலாம் என்கிறார்.

உமாதேவியார் வணங்கிய தலம் :

''பலவளஞ் சிறந்த நாவலூரெனு நாமமுற்றொரு தலம் உண்டு. அங்கு என்னைப் ''பத்தருக்கருள் செய்கின்ற பான்மை யாற் புலவர் யாரும் பக்தசநேசரென்றே பகரு வருலகின்மாதோ'' என்று இறைவன் இறைவியிடம் கூறி அங்கு நீ என்னைக் குறித்து பூசித்து வந்தால் (பூவுலகில்) என்னை அடையலாம் என்றே,

**'' பூமலர்ச் சாயகன் பொன்ற நோக்கினான்
வாம மேகலையினாள் வதன நோக்கியே
மாமனோகரியெனை மனத்திலுன்னலா
லூமா மனோன் மணி யென்ன நல்கினன்''**

இத்தலத்து உள்ள அம்மனுக்கு மனோன்மணியம்மன் என்றே பெயர். முதல் பிரகாரத்தில் உள்ள சிவலிங்கம் ஒன்றைக்காட்டி இதுவே அம்மன் பூசித்த லிங்கம் என்கின்றனர்.

விஷ்ணு வணங்கிய தலம் :

இரணியனை அழிக்க நரசிங்க உருவெடுத்தார் திருமால். அவனை அழித்த பின்னும் கோபம் அடங்கப் பெறாதவராய் மூவுலகத்தும் சீற்றத்தோடும் அலைந்தார். அதனால் மூவுலகத்தில் உள்ள அனைத்து உயிர்களும் பயந்து,

**'' ஐயனேயப்பனே வந்தடைக்கலம் புகுந்தோர் அன்பு
செய்யும் நித்தியனே தேவதேவனே மழு மானேந்துங்
கையனே நரசிங்கத்தாற் கலங்கி நின் சரணடைந்தே
முய்யுமாறருள கென்னவும்பர் நீரஞ்சலென்றான்.''**

சிவனிடம் அடைக்கலம் புக அவனும் ஆறுதல் கூறி

**'' தாண்டவஞ் செய்யுமீசன் சரபவல்லுரு வமாகி
நீண்டவன் மணிபுரத்தினெடிய துண்டத்தாற் கொத்திக்
கிண்டு செங்குருதியுண்டான் கிளர்ந்த மானுட மடங்கன்
மாண்ட மாமதத்தினோடு மருளு நன் கன்று மாதோ.''**

சரபவல்லுரு எடுத்து நரசிங்கத்தினை அடக்கினர். அதன்பின் விஷ்ணு அத்தலத்தில் சிவனை வணங்கி உய்ந்தனன் என்பது புராணம் ஆகும். இன்றும் விஷ்ணு வணங்கியதாக ஒரு சிவலிங்கத்தைக் காட்டுகின்றனர்.

சண்டேசர் வணங்கிய தலம் :

"கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழு
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற
பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே."

என்று பட்டணத்துப் பிள்ளையார், வணங்கும் வகையினைப் பேசுவார். சண்டேசர் அவ்வாறின்றி ஒருநிலைப்பட்டு ஐம் புலனும் அடக்கி சிவபூசை செய்து வந்தார். கறந்தபால் கொண்டு சிவ அபிடேகம் செய்வதில் மனம் மகிழ்ந்தார். இவர் தந்தை எச்சத்தத்தன் பலவழியிலும் சண்டேசரைத் துன்புறுத்தினான். ஒருநாள் பால் குடத்தைக்காலால் எட்டிஉதைக்க அதைக்கண்ட சண்டேசர் கைகொண்ட மழுவால் தன் தந்தையென்றும் பாராது வெட்டி வீழ்த்தினார்.

"வாயதரமிகத் துடிக்க வயிற்றிடைக் கையாற்புடைத்துத்
தீயுகுப்பக்கன் சிவந்து சிவிசிவ வென்று ரத்தியம்பி
மேய தடிகைக் கொண்டு வெகுண்டெழுந்து தந்தை பதஞ்
சாய வடித்தனன் விழுந்தான் சதுமறைதேர் முது
மறையோன்"

என்று இராசப்பக் கவிராயர் பாடுவார். இறைவன் வெளிப்பட்டுச் சண்டேசரின் பக்திகண்டு மெச்சித் திருவருள் வழங்கினார்.

"பேயேனை நன்கறியாப் பேதையனைப் பொய்யுரைக்கும்
வாயேனை நின்னை வணங்காத சென்னியனைத்
தீயேனை நின்னாமஞ் சிந்தியாச் சிந்தையனை
நாயேனை யாட் கொள்ள நயந்தென்ன திருவருளோ"

என்று கண்டோர் வியக்கின்றார். இத்தகைய சண்டேசர் வணங்கிய, அருள்பெற்ற, சிவத்தலமாகும் இது.

"வண்டாருமலர்ச் சோலை வள நாவன் மாநகரம்
பண்டாய மறை தேடும் பரம்பொருளை யருச்சித்துச்
சண்டேசனெனு
நாமஞ் சது மறை யோன்றிரித்தமையாற்
சண்டேச புரமென்னுமபிதானந் தாங்கியதால்."

என்று திருநாவலூர்ப் புராணம் கூறுகிறது. சண்டேசர். வணங்கிய சிவலிங்கம் இது என்று முதல் பிரகாரத்தில் சிவலிங்கம் ஒன்றினைக் காட்டுகின்றனர். மேலும் கருடனும் இவ்வூரில் வணங்கி விடவாதை தீர்ந்ததாக இராசப்பக் கவிராயர் கூறுகிறார்.

திருநாவலூர்ப் பெருமை :

"சடையனாரிசை ஞானி சுந்தரர் சண்டேச்சுரர் நன்
னடைதருங் குணநரசிங்க முனைய ரென்றைவர்
விடையுகந்தவர் பதம் விருப்புற்று வாசஞ்செய்
துடைய நற்றலமத்தலமன்றி வேறுளவோ."

திருநாவலூரினும் சிறந்த வேறு ஊர் உண்டோ என்கிறார் இராசப்பக் கவிராயர். மேலும், "நாற்றிசை புக திருநாவலூர்" என்றும், "தலமனைத்தினுந் தலைமைமீக் கொண்டொருதலம்" என்றும் சிறப்பாகக் கூறுகிறார். இவ்வூரில் முக்கனிகளும், மாதுளமும், எலுமிச்சையும் நிறைந்துள்ளன. மல்லிகை, முல்லை, செவ்வந்தி போன்ற மலர்களும் மலரும் வனம் உடையது. சம்புநதத்திர்த்தம் என்ற ஒன்றினைக் குறிப்பிடுகிறார். கோவிலுக் குப் பின்புறம் இன்றும் ஓடும் ஆற்றினைக் குறிப்பிடுகின்றனர்.

***

அகழ்வாய்வு

பெருங்கற்காலத்தைச் சேர்ந்த தாழிகள் இவ்வூரில் நிறையக் கிடைக்கின்றன. வயல்வெளியில் ஏர் கொண்டு உழும்போது அவை தட்டுப்பட அவைகளைத் தூக்கியெறிந்து விட்டு மேற்கொண்டு உழுவார்களாம். மேலும் கிணறு. வீடுகட்ட பள்ளம் தோண்டும் போதும் அதுபோல நிறையத் தொல் பொருட்களைக் கண்டதாக ஊர்மக்கள் கூறினர். இன்றும் சில விடங்களில் அத்தாழிகள் உள்ளன. இதனை ஊர் மக்கள் ''மத மதக் காண்சால்'' என்கின்றனர்.

எச். கார்ஸ்டின் ஆய்வு :

திருக்கோவிலூருக்கு வடமேற்கில் இரண்டு கல் தொலைவில் உள்ள வேலூர் என்ற ஊரில் 1875ல் ஜே. எச். கார்ஸ்டின் (J.H. Garstin) என்னும் புதைபொருள் ஆய்வாளர் அகழ்வாய்வு செய்துள்ளார். அவர் ஆய்வு செய்தப் பேழையின் நீளம் 4 அடி, அகலம் பதினைந்து அங்குலம், உயரம் 9 அங்குலம். அதனைப் பதினைந்து மண் கால்கள் தாங்கி யிருந்தனவாம். இதே போன்று திரு. ரீ (Mr. Rea) என்பவர் பல்லாவரத்தில் கண்டார். இப்புதை குழியில் மண்பாண்டங்கள், எலும்புத்துண்டுகள் இருந்தனவாம். இன்றும் தேவனூரில் காணலாம் என்று டாக்டர். மா. இராசமாணிக்கனார் தமது நூலில் கூறிகிறார்.[1] தேவனூருக்கு மிக அருகேயுள்ள கொல்லூரிலும் இதுபோன்ற தாழிகள் நிறைய உள்ளனவாம். தேவனூர், கொல்லூர், ஆகிய ஊர்களில் உள்ளவை போன்ற தாழிகளைத் திருநாவலூரிலும் கண்டதாக ஊரார் கூறுகின்றனர்.

ஊரார் கருத்து :

முதுமக்கட் தாழிகள் பற்றி ஊரார் பலவிதமாகக் கூறுகின்றனர். அவை (1) பண்டைக்காலத்தில் வாழ்ந்த குள்ளமனிதர்களின் இல்லங்கள் என்றும், (2) பண்டைக்கால மக்களுள் மிக்க முதுமை அடைந்தவர் தம் இறப்புக்குமுன் ஓய்வாகத் தங்கியிருந்த இடங்கள் என்றும் (3) இராமன் காலத்தில் வாழ்ந்தமனித குரங்குகளின் இருப்பிடம் இவை என்றும் (4) ''வாலிக்கிலியர்'' என்ற ஒருவகை மக்களின் இல்லங்கள் என்றும் திருக்கோவலூர்த் தலபுராணம் கூறுகிறது. இக்கருத்துக்களை டாக்டர். இராசமாணிக்கனார் ஊர் மக்களிடமிருந்து திரட்டித் தருகிறார்.

கச்சேரிமேடு :

இவ்வூர் கோவிலுக்கு முன்புறம் உள்ள ஊர்பகுதியில் கச்சேரிமேடு என்று ஒன்று இருந்தாம். வடகச்சேரி, தென்கச்சேரி என்று பெயர் பெற்றன. அவை முறையே வடக்கு, தெற்குப் பக்கங்களில் இருந்ததால் அவைகளில் தென்கச்சேரியில் அரண்மனையும், வடகச்சேரியில் விழா, நாட்டிய மண்டபங்கள் இருந்ததாகவும் கூறுகின்றனர். நன்கு மழை பெய்தால் அரண்மனைச் செங்கற்கள் தெரியுமாம். இன்றைய செங்கல் போலல்லாமல் அவை பெரியதாகவும் தடிமனாகவும் இருக்குமாம். இராஜாதித்தன் பாடி வீடமைத்துத் தங்கியிருந்த மையால், அங்கு சிறிய அளவிலேனும் ஓர் அரண்மனை இவ்வூரில் இருந்திருக்க வேண்டும். இப்பகுதி அகழ்வாய்வுக் குரிய ஒன்றாகும்.

அடிக்குறிப்பு

1. தென் பெண்ணை – முனைவர் மா. இராசமாணிக்கனார் 1959, பக். 61–62

முடிவுரை

திருநாவலூர் இலக்கியங்கள், கல்வெட்டுகள் மூலம் இவ்வூர், சைவ சமய வரலாற்றிலும், தமிழக வரலாற்றிலும் பெற்றிருந்த சிறப்பான நிலையை நாம் அறியமுடிகிறது.

இங்கு நாவல்மரங்கள் மிகுதியாக வளர்ந்திருந்தமையால் இவ்வூருக்குக் திருநாவலூர் எனும் பெயர் ஏற்பட்டது. இது மனிதனின் இயற்கை வழிபாட்டை வெளிப்படுத்துகிறது. முதலாம் பராந்தகனின் மூத்த மகன் இராஜாதித்தன் இவ்வூரில் பாடிவீடு அமைத்துத் தங்கியிருந்தமையால் இராஜாதித்தபுரம் என்ற பெயரும் இவ்வூருக்கு ஏற்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில் திருநாமநல்லூர் என் இவ்வூர் அழைக்கப்பட்டது. இப்பெயர்கள் அனைத்தும் மறைந்து பண்டைய திருநாவலூர் என்னும் பெயரே இவ்வூருக்கு இன்று வழங்குகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவ்வூரில் பிறந்த வளர்ந்தார். பின் திருமண நேரத்தில் திருவெண்ணைப் நல்லூரில் இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டார். அதன் பின்னரே அவர் பாடிய தேவாரப் பதிகங்களில் திருநாவலூர் இடம் பெற்றது. இவரின் பாடல்கள் இறைவனின் அருட்சிறப்பையும், திருநாவலூர் வளம் பற்றியும் குறிப்பிடுகின்றன. பக்திச்சுவைமிக்க அப்பாடல்கள் சைவ சமயம் இவ்வூரில் தழைத்தோங்கியிருந்த பாங்கினைக் காட்டுகின்றன. திருநாவலூரைப்பற்றியும், சுந்தரரைப்பற்றியும் பின் வந்த சேக்கிழார் பெரியபுராணத்தில் விதந்து பாடியுள்ளார். கி.பி. 15ம் நூற்றாண்டினைச் சேர்ந்த அருணகிரிநாதர் திருநாவலூரில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமானை உள்ளமுருகிப் பாடியுள்ளார். திருவெண்ணை நல்லூர் இராசப்பக் கவிராயர் என்ற புலவர் இவ்வூரின் சிறப்பையெல்லாம் ஒருசேரத் தொகுத்துத் திருநாவலூர் புராணம் எனும் அரிய புராண நூலை இயற்றியுள்ளார்.

இங்குள்ள 105 கல்வெட்டுகள் வரலாற்றுப்போக்கில் இவ்வூர் சிறந்து நின்ற நிலையைக் காட்டுகின்றன. பல்லவ கிரந்தத்தில் எழுதப்பெற்றுள்ள ஒரு கல்வெட்டு இங்குள்ளது. இது ஸ்ரீ கலிநாரை என்ற பெயரைக் குறிப்பிடுகிறது. இங்குக் கிடைத்துள்ள பல்லவர் காலச் சிற்பங்கள் பல்லவர் காலத்தி லேயே இவ்வூரில் சிவாலயம் ஒன்று சிறப்புடன் இருந்தது என்பதைக் கூறும் சான்றுகளாய் விளங்குகின்றன.

சோழப் பேரரசின் தொடக்கம் முதல் இறுதிவரை இவ்வரசின் கீழ் இவ்வூர் திகழ்ந்துள்ளது என்பதை முதலாம் பராந்தக சோழன் காலம் முதல் (கி.பி. 907–955), மூன்றாம் இராசராசன் காலம் வரை (கி.பி. 1216–1256) எழுதப்பெற்றுள்ள 85 கல்வெட்டுகளால் அறியமுடிகின்றது. முதலாம் பராந்தக சோழனின் காலத்தில் இவ்வூர் சோழர்படையின் பாடிவீடாகத் திகழ்ந்துள்ளது. சோழப் பேரரசின் வடவெல்லையைக் காக்க அம்மன்னரின் மூத்த மகன் இராஜாதித்தன் பெரும்படையுடன் இவ்வூரில் தங்கியிருந்தான். இராஜாதித்ததேவர் பரிவாரம் என அழைக்கப்பட்ட அப்படையில் பணியாற்றிய பல அதிகாரிகள், வீரர்கள் ஆகியோர் பற்றியும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவர்கள் பெரும்பாலும் சேர நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இராஜாதித்தன் முதலாம் பராந்தகனின் மூத்தமகன் எனவும், இவரின் தாயார் சேர நாட்டைச் சேர்ந்த முக்கோக்கிழானடிகள் எனவும், மனைவி இலாடராயர் குடும்பத்தைச் சேர்ந்த மாதேவடிகள் எனவும் இங்குள்ள கல்வெட்டுகள் குறிப்பிடு கின்றன. சோழர் வீழ்ச்சிக்குப்பின் திருநாவலூர்ப் பகுதியைக் கோப்பெருஞ்சிங்கன் கைப்பற்றினான். இவ்வூருக்குக் தெற்கே யுள்ள சேந்தமங்கலம் இம்மன்னனின் தலைநகரமாக விளங்கியது.

இங்குள்ள கோயில் கி.பி. 934 வரை எழுதப்பட்டுள்ள கல்வெட்டுகளில் திருத்தொண்டீஸ்வரம் எனக்குறிக்கப் படுகின்றது. செங்கல்லால் கட்டப்பெற்றிருந்த இக்கோயிலை கி.பி. 935 இல் பராந்தகசோழனின் மனைவி கோக்கிழானடிகள் புதுப்பித்துத் தன்மகன் இராஜாதித்தன் பெயரால் கற்றளியாகக் கட்டினார். இதன்பின் இக்கோயில் திருத்தொண்டீஸ்வரமான இராஜாதித்த ஈஸ்வரம் என அழைக்கப்பட்டது. மேலும் இவ் விறைவனுக்குப் பல பெயர்கள் இருந்ததைக் கல்வெட்டுகளால் அறிகின்றோம். இக்கோயில் கி.பி. 935ல் கற்றளியாகக் கட்டப் பெற்ற காலம் முதல் இன்றுவரை கட்டட அமைப்பு மாறாமல் புதுப்பொலிவுடன் திகழ்கின்றது.

இக்கோயில் பூசை வழிபாடுகளைத் தேவர்கன்மிகள், பன்மாகேசுவரர், சிவபிராமணர்கள், திருவுண்ணாழிகை சபையார் போன்றோர் கவனித்தனர். கோயில் நிருவாக அதிகாரிகளாக ஸ்ரீ காரியம் கடைக்காண்கின்றவர், கோயில் வாரியர். ஸ்தானத்தார் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர். கோயில் கணக்குகளைக் கோயிற்கரணத்தான்; கோயிற் கணக்கு என்ற பெயருடைய அலுவலர்கள் எழுதினர். கோயில் கருவூலமான பண்டாரத்தை பண்டாரி, கோயில் பண்டாரம் எனும் பெயருடைய அலுவலர்கள்

நிருவகித்தனர். திருமெய்க்காவல் அல்லது திருமெய்காப்பான் என்பவர் கோயிலைக் காவல் புரிந்துள்ளார். இதுபோல் கோயிற்பணியை ஏராளமானோர் செய்துள்ளனர். விசயநகர காலத்தில் திருநாவலூர் சீர்மை நாட்டார்கள் என்ற குழு கோயில் நிருவாகத்தைக் கவனித்தது. தேவாரம் ஓதுவதற்குத் திருப்பதிகம் விண்ணப்பம் செய்வார்' என்போர் இருந்துள்ளனர். கோயில் கணக்கு வழக்குகளை நாடுவகை செய்வான், நாடுகண்காணி நாயகம் என்ற அதிகாரிகள் நேரில் வந்து தணிக்கை செய்ததை முதலாம் இராசராசனின் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இது கோயில் நிருவாகத்தில் சோழ மன்னர்கள் காட்டிய அக்கறையைப் புலப்படுத்துகின்றது.

திருநாவலூர்க் கல்வெட்டுகள் மூலம் இப்பகுதியில் அக்காலத்தில் நிலவிய வருவாய்துறை, அரசியல் நிருவாகப் பிரிவுகளை அறியமுடிகின்றது. இவ்வூர் திருமனைப்பாடி மேலூர் நாடு என்ற நாட்டுப்பிரிவின் கீழ் இருந்தது. இந்நாட்டுப் பிரிவின் தலைநகரான மேலூர் இன்று வேலூர் எனும் மருவிய பெயருடன் திருநாவலூருக்கு மேற்கில் அமைந்துள்ளது. முதலாம் இராசராசன், மண்டலம், வளநாடு ஆகிய அமைப்புகளை அறிமுகப்படுத்திய பிறகு இப்பகுதி செயங்கொண்ட சோழ மண்டலம், இராசராசவளநாடு, கங்கைகொண்ட சோழவளநாடு போன்ற பெயர்களுடைய வளநாட்டுப் பிரிவின் கீழ் இருந்தது. பாண்டியர் காலத்தில் இப்பகுதி ''நடுவில் மண்டலம்'' என்ற பெயரால் விளங்கியது. இதுவே பின்னர் நடுநாடு என்றாயிற்று. விசயநகர மன்னர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பெற்ற ''உசாவடி'' என்ற நிருவாக அமைப்பில் இவ்வூர் ''வழுதிலம்பட்டு உசாவடி'' எனும் பிரிவின் கீழ் ''கருமஊர்ப்பற்று'' எனும் உட்பிரிவின் கீழ் அமைந்த ஊராக இருந்துள்ளது. 16–ஆம் நூற்றாண்டில் இவ்வூர்

''திருநாவலூர்ச் சீர்மை'' என்ற வருவாய்த்துறைப் பிரிவின் தலைமையகமாக மாறியது. இதனைத் திருநாவலூர்ச் சீர்மை நாட்டார்கள் என்ற வருவாய்த்துறை குழு நிருவகித்தது.

திருநாவலூர்ப் பகுதியில் நிலவிய சமுதாய, பொருளாதார நிலையை இங்குள்ள கல்வெட்டுகள் படம் பிடித்துக்காட்டு கின்றன. கோயிலைச் சார்ந்து வாழ்ந்து பிராமணர்கள் செல்வாக்குடன் திகழ்ந்தனர். கோயில் நிருவாகத்திலும், பூசை வழிபாடுகளிலும் இவர்கள் முக்கியப் பங்கு வகித்தனர். துறவிகள், சிவயோகிகள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் உண்பதற்கு இவ்வூரில் ஸ்ரீ மதுராந்தக தேவன் சாலை'' என்னும் உணவகம் இருந்ததை முதலாம் இராசேந்திரனின் 12ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது. கோயிலுக்கு வழங்கப்பட்ட ஆனிரைகளைப் பராமரித்து, நெய் வழங்கும் பொறுப்பை மன்றாடி என அழைக்கப்பட்ட இடையர்கள் செய்தனர். இவர்கள் ''மன்றாடிவாரியம்'' எனும் குழுவாக அமைந்து கோயில் நிருவாக அமைப்பில் அங்கம் வகித்துள்ளனர். கோயில் பணிகளில் குயவன், தேவரடியார் போன்றோர் ஈடுபட்டிருந்தனர். இவ்வூரில் பள்ளிகள், வாணியர் கொல்லர், தச்சர், தட்டார், ரெட்டியார், பறையர் ஆகிய இனமக்கள் வாழ்ந்ததைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. இராசேந்திரசோழ காடவராயன் என்பவர் திருநாவலூர் இறைவனை வேண்டிப் பிள்ளை வரம் பெற்றதை இரண்டாம் குலோத்துங்கனின் 14 – ஆம் ஆண்டுக் கல்வெட்டு கூறுகின்றது. தனிமனிதர்கள் தங்களுக்குள் நிலவிய பகையை இனி தொடருவது இல்லை என இறைவன் முன்னிலையில் உறுதி எடுத்துக்கொண்டதை முதலாம் குலோத்துங்கனின் 41ஆம் ஆண்டுக் கல்வெட்டால் அறிகிறோம்.

இவை அன்றைய சமுதாயத்தில் மக்கள் கொண்டிருந்த ஆழ்ந்த இறை நம்பிக்கையைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. இக்கோயிலில் நடைபெற்ற மூன்று கால பூசை, திருப்பள்ளி யெழுச்சி, வேதம் ஓதுதல், பால் அபிடேகம் போன்ற வழிபாடு களைப் பற்றியும், பாண்டிய மன்னர்கள் பற்றியும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. குடைமானியம், தண்டிகை மானியம் ஆகியவை திருவிழாக்காலங்களில் சுவாமி தூக்கவும், குடைப்பிடிக்கவும் செய்த பணிகளுக்காக அளிக்கப்பட்ட நில ஊதியம் என்பதை விசயநகர காலக்கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.

இவ்வூரில் வியாபாரிகள் வாழ்ந்ததை முதலாம் பராந்தக சோழன் காலம் முதல் எழுதப்பெற்ற கல்வெட்டுகளில் அறிய முடிகின்றது. நகரத்தார் என இவர்கள் அழைக்கப்பட்டதை உத்தம சோழனின் கல்வெட்டுக் கூறுகிறது. இவ்வூர் இராஜாதித்தபுரம் என்ற பெயருடன் முதலாம் இராசேந்திரன் காலத்திலிருந்து வணிகப் பெருநகரமாக வளர்ச்சியடைந்தது. இங்கு திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் எனும் வணிகக்குழுவினர் ''ஐந்நூற்றுவ விளாகம், என்ற பகுதியில் குடியேறி வாழ்ந்திருந்தனர். இவ்வாறு இவ்வூர் படிப்படியாக வணிகப்பொருளாதாரமிக்க நகரமாக வளர்ந்ததை அறிகிறோம்.

இவ்வூரில் பயன்படுத்தப்பெற்ற நிறுத்தல் அளவைகள் ''நகரக்கல்'' திருநாவலூர்க்கல், குடிஞைக்கல் ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்டது. நாவலூர்க் கோல் எனும் தராசுக்கோல் குறித்த முதலாம் இராசராசனின் கல்வெட்டுக் கூறுகின்றது. மாதேவி உழக்கு என்ற அளவை மூன்றாம் கிருஷ்ணனின் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றது. 'அருண்மொழி தேவனான எண்ணாழிக் கால்'' என்ற முகத்தல் அளவை இவ்வூரில் பயன்படுத்தப்பட்டது.

இது முதலாம் இராசராசனின் இயற்பெயரால் ஏற்பட்ட அளவை ஆகும். 16 சாண் கோல், 12 சாண்கோல், நாட்டு அளவுக்கோல் ஆகிய நீட்டலளவைகள் இவ்வூரில் இருந்துள்ளன. இவ்வூர் வழியாகப் பிற ஊர்களுக்குச் சென்ற சாலை காடவராதித்தன் பெருவழி எனவும் ஒகூர், மாத்தூர், பருக்கல் ஆகிய ஊர்களுக்குப் போன வழி எனவும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றது. இவை இவ்வூர் கொண்டிருந்த வணிகப்போக்குவரத்துத் தொடர்பைப் புலப்படுத்துகின்றது.

இங்குள்ள ஏரியும், வாய்க்கால்களும் இவ்வூரின் வேளாண் பொருளாதாரத்திற்கு அடிப்படையாக இருந்தன. கல்வெட்டு களில் இவ்வூர் ஏரி 'திருநாவலூர் ஏரி' எனவும் இதிலிருந்த மதகின் பெயர் ''ஆடவல்லான்தூம்பு'' எனவும், இதிலிருந்து பிரிந்து சென்ற வாய்க்கால்கள் ''ஆடவல்லான் வாய்க்கால்' ஆகிய பெயர்களுடன் விளங்கியதைக் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். ஏரியைச் சீரமைக்க 'ஏரிப்பட்டி' என்ற பெயரில் நிலம் வழங்கப்பட்டதை முதலாம் குலோத்துங்கனின் 32 ஆம் ஆண்டுக் கல்வெட்டு கூறுகின்றது. இவை அனைத்தும் பாசன முறைக்கு அளிக்கப்பெற்ற முக்கியத்துவத்தைக் காட்டுகின்ற. சோழர் காலத்தில் நிலங்களுக்குக் கடமை, அந்தராயம், பாடிகாவல், ஆள்அமஞ்சி, காணிக்கடன் போன்றவரிகள் விதிக்கப் பட்டன. பாண்டியர் காலத்தில் இருபதுக்கும் மேற்பட்டவரிப் பெயர்களைக் கல்வெட்டுகள் தருவதால் அக்காலத்தில் வரி அதிக அளவில் விதிக்கப்பட்டமை புலனாகிறது. விசயநகர ஆட்சிக் காலத்தில் இப்பகுதியில் 'திருநாவலூர் சீர்மை நாட்டார்கள்' என்ற குழு வரிவசூல் பணியினைச் செய்துள்ளது.

இவ்வூரைப் பற்றிப்பேசுகின்ற இலக்கியங்களிலிருந்து இவ்வூரின் சமயச்சிறப்பை அறிகிறோம். இங்கு எழுதப் பெற்றுள்ள 105 கல்வெட்டுகளிலிருந்து கி.பி. 10–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 17ஆம் நூற்றாண்டுவரை இவ்வூரின் வரலாற்றுச் சிறப்பையும், கோயில் வரலாற்றையும், பண்டைய நாட்டுப்பிரிவுகளையும், வருவாய்த்துறை, நிருவாகம் பற்றியும், சமுதாய, பொருளாதார நிலை பற்றியும் தெளிவாக அறிகின்றோம்.

***

VI. பின்னிணைப்பு கல்வெட்டுகள்

(அ) அடைவுப்பட்டியல்

இவ்வூரில் மொத்தம் 105 கட்வெட்டுகள் உள்ளன. ஒவ்வொரு மன்னனுக்கும் எத்தனை கல்வெட்டுக்கள் உள்ளன. என்றும், அவை எது முதல் எது வரை ஆட்சியாண்டு உள்ளன. என்ற குறிப்பும் அடங்கிய பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

வ. எண்.	மன்னன்	ஆட்சியாண்டு முதல் - முடிய	மொத்த கல்வெட்டு
1.	பராந்தகன் – I	16 – 39	31
2.	கன்னரதேவன்	17 – 28	4
3.	முனைய தரையன்	கி.பி. 953, 954	2
4.	கோபரகேசரி	3 – 9	2
5.	கோ இராசகேசரி	3 – 16	2
6.	கோனேரின்மைக்கொண்டான்	5	2
7.	இராசராசன் – I	18 – 24	7
8.	இராசராசேந்திரன் – I	3 – 35	8
9.	வீரராசேந்திரன்	4	1
10.	அதிராசேந்திரன்	3	1
11.	குலோத்துங்க சோழன் – I	10 – 42	16
12.	விக்கிரம சோழன்	3	1
13.	குலோத்துங்கசோழன் – II	3 – 7	3
14.	இராசராசன் – II	8	1
15.	கோப் பெருஞ்சிங்கன்	5 – 19	4
16.	விக்கிரம பாண்டியன்	2 – 8	3
17.	நரசிங்கமகாராஜா		1
18.	அச்சுததேவமகாராஜா		1
19.	ஸ்ரீ ரங்கதேவமகாராஜா		1
20.	மன்னன் பெயர் இல்லாதது		14
			105

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் ★ சென்னை-5. 4 SEP 2012

ஆ. திருநாவலூர் கல்வெட்டுகள் கால அடைவுப்பட்டியல்

வ.	மன்னர்பெயர்	ஆட்சி யாண்டு	கி.பி.	க.ஆ. அ.எண
1.	ஸ்ரீகலிநாரை (பல்லவன்) மதிரை கொண்டபரகேசரி முதலாம் பராந்தகசோழன் (907–955)	16	923	379/1902
2.	"	20	927	380/1902
3.	"	20	927	378/1902
4.	"	28	935	335/1902
5.	"	29	936	347/1902
6.	"	29	936	333/1902
7.	"	29	936	325/1902
8.	"	29	936	331அ/1902
9.	"	29	936	327/1902
10.	"	29	936	239/1939/40
11.	"	30	937	333/1902
12.	"	31	938	330/1902
13.	"	31	938	334/1902
14.	"	32	939	326/1902
15.	"	32	939	328/1902
16.	"	32	939	336–1902
17.	"	32	939	348–1902
18.	"	32	939	346–1902
19.	"	33	940	343–1902
20.	"	33	940	344–1902
21.	"	33	940	345–1902
22.	"	33	940	341–1902

23.	மதிரை கொண்டபரகேசரி முதலாம் பராந்தகசோழன் (907–955)	34	941	337/1902
24.	"	35	942	329/1902
25.	"	36	943	340/1902
26.	"	37	944	339/1902
27.	"	38	945	342/1902
28.	"	38	945	363/1902
29.	"	39	946	351/1902
30.	"	39	946	363/1939/40
31.	"	39	946	367/1939/40
32.	"	--	--	331அ/1939/40
33.	"	--	--	372/1939/40
34.	"	--	--	241/1939–40
35.	--	சகம் 875	953	356–1902
36.	--	சகம் 876	954	338–1902
37.	மூன்றாம் கிருஷ்ணன்(939–967)	17	956	362/1902
38.	"	17	956	235–1939/40
39.	"	19	958	354/1902
40.	"	19	958	366/1902
41.	"	28	967	365–1902
42.	பரகேசரிவர்மன் (உத்தமசோழன்) (970–986)	16	986	238–1939–40
43.	இராஜகேசரிவர்மன் (முதலாம் இராஜராஜன்) 985–1014)	3	988	353/1902
44.	"	9	994	237/1939–40
45.	இராஜராஜசோழன்	18	1003	240–1939–40

46. "	18	1003	370/1902
47. "	19	1004	357/1902
48. "	21	1006	368–1902
49. "	23	1008	232/1939–40
50. "	24	1009	358–1902
51. பரகேசரிவர்மன் முதலாம் இராசேந்திரன் (1012–1044)	3	1015	369/1902
52. "	3	1015	226/1939–40
53. பரகேசரி இராஜேந்திரன்	--	--	360/1902
54. "	6	1018	227/1939–40
55. "	6	1018	225/1939–40
56. "	12	1024	228/1939–40
57. "	12	1024	229/1939–40
58. "	25	1037	236/1939–40
59. பரகேசரி இராஜேந்திரன்	--	--	230–1939–40
60. வீரராஜேந்திரன் (1063–1070)	4	1067	371/1939–40
61. அதிராஜேந்திரன் (1067–1070)	3	1070	355/1902
62. பூமியுந்திருவும்–முதலாம் குலோத்துங்கன் (1070–1120)	3	1073	349/1902
63. புகழ்மாதுவிளங்க (1070–1120)	10	1080	359–1902
64. "	32	1102	233/1939–40
65. "	37	1107	361/1902
66. "	41	1111	350/1902
67. "	42	1112	352/1902
68. விக்கிரமசோழன் (1118–1135)	3	1121	231/1902
69. பூமேவுவளர இரண்டாம் குலோத்துங்கன் (1133–1150)	3	1136	260/1939–40
70. "	--	--	261/1939–40
71. "	5	1138	373/1902

72. "	7	1140	374/1902
73. "	14	1147	234/1939–40
74. கடல்சூழ்ந்த இரண்டாம் இராசராசன் (1166–1178)	8	1185	267/1939–40
75. மூன்றாம் குலோத்துங்கன் (1178/1218)	7	1185	267/1939–40
76. "	9	1187	265/1939–40
77. "	21	1199	258/1939–40
78. "	21	1199	259/1939–40
79. "	21	1199	262/1939–40
80 "	21	1199	263/1939/40
81. "	--	--	264/1939–40
82. "	21	1199	268/1939–40
83. "	30	1208	365/1902
84. (வீரசோழன்)	34	1212	247/1939–40
85. மூன்றாம் இராஜரான் (1216–1257)	19	1235	257/1939–40
86. கோப்பெருஞ்சிங்கன் (1242–1279)	5	1247	245/1939–40
87. "	6	1248	242/1939–40
88. இரண்டாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (சமஸ்தபுவனேகவித) 1250–1256	2	1252	252/1939–40
89. "	5	1255	254/1939/40
90. "	8	1258	253/1939/40
91. கோப்பெருஞ்சிங்கன் (1242–1279)	18	1260	244/1939–40
92. "	19	1261	243/1939–40
93. மூன்றாம் ஜடாவர்மன்			

வீரபாண்டியன் (1297–1342)	4	1301	271/1939/40
94. ”	--	--	256/1939/40
95. ”	--	--	270/1939/40
96. ”	--	--	272/1939/40
97. மல்லிகார்ஜ்ஜீனராயர்	விக்ருதி	1470	250/1939–40
98. ”	சகம்–1402	1480	249/1939–40
99. அச்சுதராயர்	சகம்–1457	1535	266/1939–40
100. மூன்றாம் ஸ்ரீரங்கன்	சகம்1494	1572	273/1939–40
101. ”	(கி.பி.16)	--	255/1939–40
103. ”	ஆனந்தவருஷம்	--	246/1939/40
104. --	சுக்கில	--	251/1939/40
105. --	சவுமிய	--	248/1939–40

2. செப்புப் பட்டயம் (நகல்)

திருநாவலூர் சிவன் படவர் காணி ஆட்சி முறிக்கி சாலிவாகனசதாத்தம் வருஷத்திற்கு மேல் செல்லா (நி)ன்ற ஆனந்தா வருஷம் ஆடி மாதம் 23–ந்தேதி செஞ்சி மகாராஜா தீர்பு செய்து எழுதிய செப்பு பட்டையம் என்னவென்றால், திருநாவலூர் பக்த ஜனஸ்வர ஸ்வாமி ஊழியத்துக்காக தத்துவானதாது குருக்கள், கைலாச நம்பியார், சரவண நம்பியார், சாக்கல் நாயினார், நாங்கள் நால்வரும் கூடி இராசமச்சந்திய அய்யர், வெங்கடப்ப நாயக்கர் மணியம், பத்திகப்பிள்ளை, சம்மதிப்பிள்ளை, பச்சையப்பிள்ளை, இவர்கள் முன்பாக காஞ்சிபுரம் சிவன் படவரை அழைப்பித்த விபரம், தாண்டவ மூர்த்தி நாட்டார் இந்த நால்வர் பேருக்கு கவுல் கொடுத்து நிர்ணயம் செய்து கோவில் ஊழியத்திற்கு நஞ்சை மானியம், குழி 100, புஞ்சை மானியம் குழி 100, கோவில் படிதரம் தினம் ஒன்றுக்கு ½படி, அரிசி தெருவில் நெய்வேத்தியம் வந்தால் நீங்கள் அனுபவித்துக் கொள்ளவும், கோவில் காரியங்களை தாழ்வு வராமல் படிக்கு நடத்திக் கொள்ள வேண்டும். உங்களுக்கு மாதம் 1க்கு 1/4 விராகன் கொடுத்துக் கொள்ள வேண்டும். இவர்களுக்கு நிர்ணம் செய்து திருநாவலூர் நஞ்சை காணி 2 புஞ்சை காணி 2 ஆக 44 கிராமம் புஞ்சை 17 3/4 நஞ்சை காணி 7 1/4 ஆக மொத்தம் இரண்டுக்கும் கூடிய 25ம் 44 கிராமத்திலும் ஏரிகுளம் மச்சங்களை நீங்களே அனுபவித்துக்கொள்ள வேண்டியது. உங்களை மீறி யாராகிலும் வலைபோட்டு மீன்பிடித்தால் திவான் நதிரத்துக்கு 5

பொன் அவதாரமும், ஆறுமாதம் கடுங்காவலும் இந்தப்படிக்கு சுந்தரமூர்த்தி பெருமாள் சன்னதிக்கு வகையருத்து நிர்ணயம் செய்து கோவில் மரியாதை தீர்த்தம் திருமாலை பரிவட்டம், நீங்கேளே அடையவேண்டியது. திருநாவலூர், பரிக்கல், செம்மேடு, மூன்று கோவில்களும் வரும் படிகளை நீங்களே அனுபவித்துக் கொள்ளவும், இதற்கு சாட்சி மூர்த்தி நாயக்கர், பச்சையப்பிள்ளை, இருந்தை காமாட்சி அய்யர், காந்தலவாடி லட்சுமிபதி அய்யர் இந்தப்படிக்கு என்றென்றைக்கும் புத்தரபவுத்திர பரியந்தமும் சந்திரால், சூரியால் மட்டும் காணி ஆட்சி அனுபவித்துக்கொள்ளவும், இதற்கு யாராகிலும் விவாதம் செய்தால் கெங்கை கரையிலும், காசிக்கரையிலும், பசு கொன்ற தோஷத்துக்கும் போவார்கள். இந்தப்படிக்கு செஞ்சி மகாராஜா தீர்ப்பு செய்து எழுதிக் கொடுத்த செப்புப்பட்டையம் அறியவும்.

***

3. முனையரையர்கள் – பட்டியல்

பெயர்	கல்வெட்டு உள்ள இடம்	காலம்	சான்று
1. அபராசிதன் குலமானிக்கப் பெருமானார் முனைய தரையர்	திருநாவலூர்	பரகேசரி 3வது ஆ.ஆ.	999/7 230 1939 –40
2. முனைய தரையன் குலமாணிக்கன் இராம தேவன்	திருநாவலூர்	கி.பி. 953	Ep.Ind. Vol. VII No. 19 'D'&'E'
3. முனைய தரையர் மகள் (மிலாருடையார் மனைவி)		இராசேந்திரன் – I	13 – 1905
4. முனைய தரையன்	திருமணஞ்சேரி	குலோத்துங்கன் I	5 – 1914
5. சேனாதிபதி இராச நாராயண முனையதரையர்.	காளத்தி	குலோத்துங்கன் I	157 – 1992
6. முனையதரையப் பல்லவராயன் (சாளுக்கிய இளவரசன்)	எறும்பூர்	விக்ரமன் 16 16வது ஆ ஆ	378 – 1913.

4. சுந்தரர் பெயருடையோர்

(நாவலூர் உடையான், ஆரூரான், நம்பி ஆரூரான், வன்தொண்டன்)

பெயர்	கல்வெட்டு உள்ள இடம்	காலம்	சான்று
1. நம்பி	–	தந்திவர்மன்	283 – 1916
2. நாவலூர் உடையான்	மேலப்பழுவூர்	பரகேசரி 13வது	381 – 1924
3. நம்பி ஆரூரான்	கோயில் குஹீர்	இராசராசன்1–10வது	299–1917
4. நம்பி உடுத்தூர் உடையான்	எண்ணாயிரம்	'' 25வது	335 – 1917
5. நம்பிவிடங்கள்	சிவபுரி	குலோத்–I, 32வது	16 – 1929
6. நம்பிமறவனார்	திருவையாறு	இர்ாசகேசரி 19வது	527
7. உடைய நம்பி	திருஆரூர்	குலோத் –I.7வது	485
8. உடைய நம்பி	தாராபுரம்	–	1920 – 38
9. திருச்சிற்றம்பலம் உடைய நம்பி	திருபுகலூர்	'' 25வது	92 – 1927
10. உடைய நம்பி	காளத்தி	'' 32வது	168 –1922
11. ஸ்ரீ மான் நம்பி	நடவச்சேரி	'' 15வது	440 – 1909
12. பெரும்புலியூர்நம்பி	திருபுவனை	இராசேந்த–II, 26	180 – 1911
13. பிள்ளை நம்பி ஆரூரனார் (பதிகம் ஓதுவார்)	குஹீர்	இராசராசன்–1.	275 – 1917
14. ஆரூரான் பொன்னம் பலத்தடிகள் (உத்தமசோழன் மனைவி)	திருக்கோழம்பம்	உத்தமசோழன்16வது	47 – 1925
15. ஆரூரான் கம்பன்	திருமணஞ்சேரி	இராசராசன்1–6வது	9–1914
16. வேளாளன் ஆரூரான்	திருமாத்தூர்	'' 23வது	22 – 1922
17. ஆரூரான் வேதவன முடையான்	கொள்ளிக்காடு	குலோத் 1–32வது	128–1936
18. அணுக்கவன் தொண்டன்	வீரனாமூர்	'' 19வது	524 – 1938
19. ஆலயசுந்தரப் பல்லவரையன்	சீர்காழி	இராசராசன்–II,12வது	375–1918
20. சேரமான் சோழன்(தபசி)	திருப்புகலூர்	இராசராசன்–I 23வது	87–1928
21. கலையன் குமரன் என்ற தம்பிரான் சோழன்	திருவலம்புரம்	''	216–1925

(உதவிய நூல் : பெரிய புராண ஆராய்ச்சி, Dr.மா. இராசமாணிக்கனார்)

5. துணை நின்ற நூல்கள்

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் 4 SEP 2012 சென்னை-5

தமிழ் நூல்கள்

1. அகநானூறு
2. ஐங்குறு நூறு
3. புறநானூறு
4. கலித்தொகை
5. நற்றிணை
6. சிலப்பதிகாரம்
7. பரிபாடல்
8. பட்டினப்பாலை
9. மணிமேகலை
10. தொல்காப்பியம்
11. பெருந்தொகை
12. பெரிய புராணம் – சேக்கிழார்.
13. தேவாரம் – சுந்தரர். ஏழாம் திருமுறை.
14. ஆளுடைய நம்பிகள் அருள்மாலை – இராமலிங்க அடிகள்
15. இலக்கிய ஆராய்ச்சி – மு. வரதராசனார்.
16. வில்லிபுத்தூராழ்வார் பாரதம்
17. தென்பெண்ணை – மா. இராசமாணிக்கனார்.
18. தமிழ்நாவலர் சரிதை
19. விக்கிரம சோழன் உலா – ஒட்டகூத்தர்
20. ஒன்பதாம் திருமுறை.
21. பெரிய புராண ஆராய்ச்சி – மா. இராசமாணிக்கனார்.
22. பெரிய புராண சொற்பொழிவுகள் – கழக வெளியீடு.
23. திருநாவலூர்ப் புராணம் – திருவண்ணெய் நல்லூர் இராசப் கவிராயர்.
24. தெய்வத் தமிழ் – சென்னை பல்கலைகழக வெளியீடு – 1975
25. சோழவம்ச சரித்திர சுருக்கம் – T.A. கோபிநாத்ராவ்
26. சேக்கிழார் C.M. இராமச்சந்திர செட்டியார்.
27. சேக்கிழார் காலம் V. சுந்தரேச வாண்டையார்.
28. தமிழ்நாட்டு செப்புத் திருமேணிகள் – மே.சு. இராமசுவாமி.
29. மலையமான்கள் – புலவர் குப்புசாமி.

30. முத்தரையர் நடன காசிநாதன்.
31. 'யாவரும் கேளீர்' இரா. நாகசாமி வாசகர் வட்டம்.
32. தமிழக கோயில் கலைகள் – தமிழக அரசு. தொல்பொருள் ஆய்வு துறை.
33. தென்னிந்திய கோயிற் சாசனங்கள்.
34. கொட்டையூர் பற்சிவக் கொழுந்து தேசிகர் இயற்றிய பிரபந்தங்கள் உ.வே.சா. உரை.
35. பிற்கால சோழர் வரலாறு. T.V. சதா சிவபண்பிரத்தார்.

ஆங்கில நூல்கள்

1. South Indian Inscriptions Volumes.
2. Annual Report in epigraphy.
3. Epigraphia Indica, Volumes.
4. Census 1971, District Census Handbook Vol.I
5. Gazetter of South Arcot Dist. Dr. B.S. Baliga
6. Mackenzies Collections.
7. Mysore Gazetter, Vol.II
8. Travancore Archaeological Series Vol III
9. The Rashtrakutas and their times A.S. Altakar.
10. The Colas, K.A. Neelakanta Sastri 1935.
11. Glimpses of Tamil culture based on Periyapuranam - K. Nambi Arooran.
12. Administration and Social life under the Pallavas C. Meenakshi.
13. Ancient India and South Indian History and Culture Vol. I.
14. Rajaraja I Ulaganatha pillai.
15. Early Chola Architecture and Sculpture 866. A.D. 1014. A.D. Dougles Barrett, Faber and Faber Limited London.
16. Early Chola Art - S.R. Balasubrahmanyam. 1966.
17. Castes and Tribes of Southorn India E. Thurston.
18. Chieftains of Maladu - Dr. K.V. Raman.

6. நிழற்படங்கள்



அவசரம் நரசிங்கராய உடையார்
கி.பி. 1480ல் புதுப்பித்த வாயிற் கோபுரம்.

திருத்தொண்டீசுவரர் கருவறை விமானம்.
கி.பி. 935



கருவறைச் சுவர் மேல்பகுதியில் உள்ள
ஆடல் மகளிர் சிற்பங்கள் கி.பி. 935.



திருச்சுற்று மாளிகையில் யானைமுகத்தோன்
கி.பி. 10ஆம் நூற்றாண்டு

சண்டேசுரர். கி.பி. 10ஆம் நூற்றாண்டு

திருச்சுற்றுப் பின்பகுதியில் உள்ள 'கலிநாரை' கல்வெட்டுள்ள உதிரிச் சிற்பம். கி.பி. 8–9ஆம் நூற்றாண்டு

ரிஷபாந்திகர். கி.பி. 10ஆம் நூற்றாண்டு

வீணாதரர் கி.பி. 10ஆம் நூற்றாண்டு

பிக்ஷாடனர் கி.பி. 10ஆம் நூற்றாண்டு

சுந்தரர் கி.பி. 13ஆம் நூற்றாண்டு



பராந்தகன் கல்வெட்டுள்ள பண்டைய படிக்கட்டு
கையுருவிச் சுவர் பகுதி கி.பி. 10ஆம் நூற்றாண்டு



கருவறை அதிட்டானத்தில் உள்ள
பத்மஜகதி, விருத்த குமுதம், யாளிவரி, கி.பி. 935



பல்லவ கிரந்தம் : காலம் கி.பி. 8–9
ஸ்ரீ கலிநாரை



சண்டீசுரர் கதைச் சிற்பத் தொகுதி
கி.பி. 10ஆம் நூற்றாண்டு

T. 7334.

-4 SEP 2012
சென்னை-5